(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

# PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி.எ., பத்ராதிபர். | G. A. VaidyaRaman, B.A., EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. | ப்ரமாதீச ஹு வைகாசி மீ—MAY 1913. | ஸஞ்சிகை 5 No. 5.

## பொருளடக்கம்.

| | பக்கம். |
|---|---|
| வ்யாஸங்களுக்கு வெகுமதிகள் | ... 226 |
| விசேஷ வ்யாஸங்கள்.— | |
| அத்தி பயிர்செய்தல். —எ. ராமநாதன் | ... 226 |
| எல்லா இந்தியா கால்நடை ரக்ஷண ஸங்கம். | ... 228 |
| சிறுவர்களும் உத்யோகம் தெரிந்தெடுத்தலும். —டி. கே. ராமய்யா | ... 230 |
| சென்னை மாகாண கான்பரென்ஸ் | ... 233 |
| ப்ரோவின்ஷ்யல் ஸோஷல் கான்பரென்ஸ் | ... 237 |
| கதையும் ஜீவ்ய சரித்ரமும்.— | |
| ரானடேயின் கொள்கைகள் | ... 239 |
| விசேஷத்திரட்டு.— | |
| தொழு எரு பரிபாலனம் | ... 241 |
| பாரஸ்ட் கமிட்டியின் ரிப்போர்ட் | ... 243 |
| கிராம வாழ்க்கை | ... 245 |
| மதுரை இராமநாதபுரம் ஜில்லா கோ-ஆபரேடிவ் கான்பரென்ஸ் | ... 247 |
| பத்ரிகை ஆராய்ச்சி. | ... 249 |
| பையன்கள் பகுதி. | ... 253 |
| ஸ்த்ரீகள் பகுதி. | ... 255 |
| [illegible]க்குறிப்புகள்.— | |
| விவஸாயம்—வ்யாபாரம்—கைத்தொழில்—பொருளாதாரம் — கோவாபரேஷன்—பாங்கி வ்யாபாரம் — இன்ஷ்யூரென்ஸ்—வித்யாவிஷயம்—விலையுள்ளபொருள்கள்—வ்யாபார முறைகள்—சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்—சட்டம்—வைத்யம்—வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்—விநோதங்கள்—யுக்திகளும் முறைகளும்—தமிழ்க் கல்வி | ...257—274 |
| தினவர்த்தமானம். | ... 275 |
| காலஸ்திதி. | ... 279 |
| பஞ்சாங்கம். | ... 280 |

## CONTENTS.

| | PAGE. |
|---|---|
| **Prize Essay Competition** | ... 226 |
| **Special Articles—** | |
| CULTIVATION OF FIGS —A. Ramanathan | ... 226 |
| ALL-INDIA CATTLE PRESERVATION SOCIETY | ... 228 |
| OCCUPATION FOR YOUTH —T. K. Ramiah | ... 230 |
| MADRAS PROVINCIAL CONFERENCE | ... 233 |
| PROVINCIAL SOCIAL CONFERENCE | ... 237 |
| **Story and Biography—** | |
| TEACHINGS OF RANADE | ... 239 |
| **Selections—** | |
| The Preservation of Cattle Manure | ... 241 |
| The Forest Committee's Report | ... 243 |
| Organization of Village Life | ... 245 |
| Madura-Ramnad Co-operative Conference | ... 247 |
| **Review of the Press** | ... 249 |
| **Boys' Section** | ... 253 |
| **Ladies' Section** | ... 255 |
| **Departmental Notes—** | |
| Agriculture ... ... ... | ... 257 |
| Commerce ... ... ... | ... 259 |
| Industry ... ... ... | ... 260 |
| Economics ... ... ... | ... 261 |
| Co-operation ... ... | ... 262 |
| Banking ... ... ... | ... 263 |
| Insurance ... ... ... | ... 264 |
| Education ... ... ... | ... 265 |
| Economic Products ... ... | ... 266 |
| Business Methods ... ... | ... 267 |
| Science, Machinery and Invention | ... 268 |
| Law ... ... ... | ... 269 |
| Medicine ... ... ... | ... 270 |
| Fun and Anecdote ... ... | ... 271 |
| Curiosities ... ... ... | ... 272 |
| Hints and Recipes ... ... | ... 273 |
| Tamil Literature ... ... | ... 274 |
| **Diary of the Month** ... ... | ... 275 |
| **Season** ... ... ... | ... 279 |
| **Calendar** ... ... ... | ... 280 |

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.

# Amor Patriæ

## தேசாபிமானம்.

240

ஒவ்வொரு உண்மையான இந்தியருடைய ஹ்ருதயத்திலும் தேசாபிமானம் இயல்பாகவே இருந்து கொண்டிருக்கிறது. இதனால்தான் அநேகம்பேர்கள் தாங்கள் தரித்துக்கொள்வதற்கு

## லாலிம்லி

கலப்பில்லாத கம்பளி உடுப்பு வேண்டுமென்கிறார்கள். ஏனெனில் அவர்களுக்கு இந்தப் பேர்போன துணி இந்தியாவில் இந்தியர்களால் இந்தியர்களுக்காகச் செய்யப்படுகிறதென்றும், தங்கள் தேசத்தார்க்கு வேலை கொடுக்கிற இந்தக் கம்பெனியில் வ்யாபாரம் செய்வதால் தாங்கள் தேசத்தின் க்ஷேமாபிவ்ருத்திக்கு ஸாதகமாகிறதென்றும் தெரியும்.

லாலிம்லி ஸூட் தைக்கும் துணிகள், சட்டைத்துணிகள், ட்வீட்கள், கம்பளிகள், உள்சட்டை முதலியவைகளுக்குத் துணிகளின் மாதிரியும், விலையும் எழுதிக் கேளுங்கள். இனாமாய் அனுப்பப்படும்.

கான்பூர் உல்லன் மில்ஸ் கம்பெனி, லிமிடெட், கான்பூர்.

**CAWNPORE WOOLLEN MILLS Co., Ld.**

**Cawnpore.**

LORD HARDINGE'S BIRTHDAY SOUVENIR.



H. E. LORD HARDINGE.



H. E. LADY HARDINGE.

G. A. NATESAN & CO., MADRAS.

# பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

## PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர் — G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் 5. Vol. 5. — ப்ரமாதீசஹு வைகாசிமீ, MAY 1913. — ஸஞ்சிகை 5. No. 5.


## Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

| | *Inland.* Rs. A. P. | *Foreign.* Rs. A. P. |
|---|---|---|
| Per annum ... | 4 0 0 | ... ... 6 0 0 |
| Single copy ... | 0 6 0 | ... ... 0 8 0 |
| Sample copy ... | 0 2 0 | ... ... 0 3 0 |

RATES OF ADVERTISEMENT.

| | | |
|---|---|---|
| 1 Page | ... 5 0 0 | per month. |
| ½ do | ... 2 8 0 | do |
| ¼ do | ... 1 4 0 | do |

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

**Notice to Contributors**:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. Vaidya Raman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras,

## பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தரத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணாக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

| | உள் நாடு. | அந்ய நாடு. |
|---|---|---|
| வருஷம் 1 க்கு ... | 4 0 0 ... | 6 0 0 |
| தனிப்ரதி ... | 0 6 0 ... | 0 8 0 |
| மாதிரி காபி ... | 0 2 0 ... | 0 3 0 |

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

| | | |
|---|---|---|
| 1 பக்கத்திற்கு | மாஸம் ஒன்றுக்கு | 5 0 0 |
| ½ பக்கத்திற்கு | ,, ,, | 2 8 0 |
| ¼ பக்கத்திற்கு | ,, ,, | 1 4 0 |

**வ்யாஸம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை**

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

**ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,**
3, & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன்,
மதராஸ்,

## PRIZE ESSAY COMPETITION
## வ்யாஸங்களுக்கு வெகுமதிகள்.

1913-ம் வருஷம் ஜுலைமாஸம் முதல் நமது பத்ரிகையில் ஒரு வ்யாஸப் போட்டி நடத்தப்படும். எந்த விஷயத்தைப் பற்றி வ்யாஸம் எழுதவேண்டும் என்பதை ஒவ்வொரு ஸஞ்சிகையிலும் குறிப்பிடுவோம். சந்தாதாரர்கள் மட்டும் இந்தப் போட்டியில் சேரலாம். வ்யாஸங்கள் ஸுலபமானதும் தெளிவானதுமான தமிழ் நடையில் எழுதப் படவேண்டும்.

ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். ஒவ்வொரு வ்யாஸமும், நமது பத்ரிகையில் 2½ பக்கம் அதாவது 4000 எழுத்துகளுக்கு மேல்போகக்கூடாது. ஒப்புக் கொள்ளப்பட்ட வ்யாஸங்களில் முதல்தரமானதை எழுதியவருக்கு ஐந்து ரூபாய் பரிசு கொடுக்கப்படும்,

ஒப்புக்கொள்ளப்பட்ட மற்ற வ்யாஸங்களில் எவைகளையாவது ப்ரசுரிக்கும் பக்ஷத்தில் அவைகளுக்கும் நமது பத்ரிகையில் வெளியாகும் மற்ற வ்யாஸங்களைப்போல் வழக்கப்படி பக்கம் ஒன்றுக்கு ஒரு ரூபாயாக ஸம்பாவனை செய்யப்படும். வ்யாஸங்களைத் தராதரம் பார்ப்பதில் பத்ராதிபருடைய தீர்மானம் முடிவானது.

ஜுலைமாஸத்துக்கு வ்யாஸம் எழுதுவதற்கு விஷயம்.

"நமது விவஸாயிகள் ஏழைகளாயிருப்பதற்குக் காரணங்கள் என்ன"?

வ்யாஸங்களை ஜுலைமீ 31-உக்குள் அனுப்பிவிடவேண்டும். அந்தத் தேதிக்குப் பின் அனுப்பப்படும் வ்யாஸங்கள் வ்யாஸப் போட்டிக்கு அங்கீகரிக்கப்படமாட்டா.

பத்ராதிபர்.

## SPECIAL ARTICLES.
## விசேஷ வ்யாஸங்கள்.

### CULTIVATION OF FIGS

BY

A. RAMANATHAN.

### அத்திப் பயிர்செய்தல்.

இக்காலத்தில் பழச்செடிகளை தோட்டங்களில் வைத்து அபிவ்ருத்தி செய்வதில் எல்லாரும் ஊக்கங் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் உள்நாட்டில் ஒட்டு மாந் தோட்டங்களை விசேஷமாய்க் காணலாம். அத் தோட்டங்களில் இடையிடையே பலா, மாதுளை, முதலிய செடிகளையும் வைத்து வ்ருத்தி செய்கிறார்கள். இவைகளெல்லாம் நம் தேசத்தில் வ்ருத்தியாகக் கூடியவைகளே. வெளிதேசத்து பழச்செடிகளை வைத்து காப்பாற்றுவதை காண்பது அருமையான காட்சி. இக்காலத்தில், வெளிதேசத்து பழச்செடிகளையும் அவைகள் அபிவ்ருத்தியாகும் சீதோஷ்ண நிலைமை வாய்ந்த இடங்களில் பயிரிட ஆரம்பித்திருக்கிறார்கள். நாம் உண்ணும்படியான அத்திப்பழம் வெளி தேசத்தைச் சேர்ந்தது. இதை சீமையத்தியென்று சொல்லுகிறார்கள். க்ரீஸ்தேசந்தொடங்கி இந்தியாதேசம் வரையிலுள்ள இடை நாடுகளாகிய சின்ன ஆசியா, பாரஸீகம், ஆப்கானிஸ்தானம், பலுசிஸ்தானம் முதலிய தேசங்களில் அத்தி தானாகவே உண்டாகிறது. ஐரோப்பாக்கண்டத்துத் தென் ப்ராந்தியத்திலுள்ள ப்ரான்ஸ், க்ரீஸ் முதலிய தேசங்களிலும், அமெரிக்கா கண்டத்தில் காலி

போர்னியா முதலிய ஐக்ய நாடுகளிலும் அது பயிரிடப்படுகிறது. இந்தியாவில் காஷ்மீர், அஸ்ஸாம், தக்ஷணம் முதலிய விடங்களில் இப்பொழுது அது ஏராளமாய் பயிரடப்படுகின்றது. இதனால் ஏற்படுவது யாதெனில் அது அதிக உஷ்ணமும் குளிர்ச்சியுமில்லாத இடங்களில் நன்ருய்ப் பயிராகு மென்பதுதான். உஷ்ணதேசங்களில் சற்றேறக்குறைய நன்ருய் வளர்கின்றது. நன்ருயும் ஸுலபமாயும் பயிரிடக் கூடுமாதலாலும், சீக்ரத்தில் அது மரமாகி விசேஷ பலனைத் தருவதாலும் அதை தோட்டங்களில் வைத்து பயிரிடுகிருர்கள்.

அத்திப்பழங்களை பெரியோர்களும் சிறியோர்களும் இரவிலும் பகலிலும் சாப்பிடலாம். அத்திச்செடிகளுக்கு நிழலும், நட்ட கொஞ்சகாலம் பிந்தி நீரும் தேவையில்லை. மண் ஈரம் கொஞ்சமிருந்தால் போதும். அது 50 வருஷங்களுக்கு குறையாமல் ஜீவித்திருக்கும். பாதி களிமண்ணும் பாதி மணலும் சேர்ந்தஇடங்களில் அது நன்ருய்ப்பயிராகும். அடிபூமி சுண்ணும்பு சரடாயிருந்தால் மிகவும் நல்லது. பழங்கள் நன்ருய் பழுக்க வெயிலும் உஷ்ணமும் தேவை. செடிகளுக்கு மணல் கலந்த செம்மண் போடுவது நல்லதாகும். அது 20 முதல் 30 அடி உயரம் வளரும். நன்ருய் வளர்ந்த மரத்தின் அடி திம்மை மூன்று அல்லது நான்கு அடி சுற்றளவிருக்கும். நட்ட மூன்று வருஷங்களுக்கெல்லாம் அது பலனைத் தரும்.

அத்திச் செடிகளை விதைகளிலிருந்து உற்பத்தி செய்யலாம். ஆனல் செடிகள் வளர வெகுநாள் செல்லும். சிறுகிளைகளை இரண்டு சாண் துண்டுகளாகக் கத்தரித்து நட்டு ஜலம் வார்த்து வந்தால் நாளடைவில் தளிர்கள்விட்டு கிளைகள் பாயும். ஒருவருஷம் கழிந்தவுடன் அவைகளை எடுத்து வேரிடங்களில் நடலாம். இதுவுந் தவிர கிளைகளை வளைத்து பூமியிலிட்டு ஜலம் வார்த்து வந்தால் கிளை பூமியில் பட்டுள்ள இடங்களில் வேர்கள் ஊன்றும். வேர்கள் ஊன்ற ஊன்ற கிளையின் மேல்பாகத்தில் தரையிலிருந்து இரண்டங்குலம் விட்டு கொஞ்சங் கொஞ்சமாய் கத்தரித்து வரவேண்டும். நன்ருய் வேர்கள் ஊன்றிய பிறகு அடியோடே கத்தரித்துவிடலாம். தோட்டங்களில் அத்திச் செடிகளை நடும்போது இரண்டு செடிகளுக்கு இடையில் 10 முதல் 15 அடி தூரமாவதுவிட்டு விடுதல் நல்லது. மழைக்காலத்தில் செடிகளை நடவேண்டும். மழைக்காலம் கழிந்தபிறகு அடிக்கடி ஜலம் பாய்ச்சிவரவேண்டும். செடிகளை குழிகளில் நடவேண்டும் குழிகள் மூன்றடிநீளம மூன்றடி அகலம் மூன்றடி ஆழமுள்ளவைகளாயிருத்தல் வேண்டும். குழிகளை வெட்டின பிறகு கொஞ்சகாலம் நன்ருய் உலரவிடவேண்டும். செடிகளை நடும்போது குழிகளில்போதுமான வண்டல்மண், நொய்மணல், ஆடுமாடுகளின் உரம், 2 அல்லது 3 ராத்தல் எடை எலும்பு உரம், தாளித்த சுண்ணும்பு முதலியவைகளைக் கலந்து தரைமட்டம் குழியிலிட்டு நடுவில் செடிகளை வைத்து நீர் பாய்ச்சவேண்டும். செடியைச் சுற்றிலும் நீரடக்கிக் கொள்ள வட்டமான கால்வாய்களை கட்டி வைத்தல் வேண்டும். உஷ்ணகாலத்தில் வாரமொருமுறை தண்ணீர் பாய்ச்சுவது அவச்யம். செடிகள் வளரவளர சுற்றிலுமுள்ள கால்வாயை அதிகப்படுத்தி அதிக நீர் கொள்ளும்படி செய்துவர வேண்டும். களை கொத்தியவுடன் நீர்ப்பாய்ச்சுதல் கூடாது. கொத்திய ஒரு வார பர்யந்தம் மண்ணை உலரவிடவேண்டும். நான்கு மாஸத்திற்கொருதடவை களைகொத்த வேண்டும். களை கொத்தியவுடன் தரையின் மேல் பாகத்தில் ஊன்றிய வேர்கள் மறையும்படி தோட்டக்கால் எருவிட்டு வைக்கவேண்டும். வேர்களை மூட கரித்தூளை போடுவதும் நல்லது. பிந்தி நீர் பாய்ச்சலாம்.

காய்கள் பிடித்து முதிர முதிர நீர் கட்டுதலை கொஞ்சங் கொஞ்சமாய் நிறுத்தவேண்டும். காய்கள் பழுக்குந்தருணத்தில் நீர்பாய்ச்சுதலே கூடாது.

மரம் வளர வளர உலர்ந்த கிளைகளையும் பல மற்ற குத்துகளையும் கத்தரித்து விடவேண்டும். தளிர்கள் விடும் குருத்துகளில் வெயில் பட்டுக்கொண்டிருக்கவேண்டும். செடியின் அடிபருத்து உயரமாய் வளர்ந்தபிறகு தரை மட்டத்துக்குமேல் 18-அல்லது 24 அங்குல நீளம் விட்டுக் கத்தரித்தால் அடியிலிருந்து கிளைகள்பாயும். இந்தக்கிளைகள் முதிர்ந்தபிறகு ஒரு அடிவிட்டுக் கத்தரித்துவிட்டால் அவைகளிலிருந்து பக்கக்கிளைகள் பாயும். இக்கிளைகளில் காய்கள் காய்க்கவிடலாம். ஆகிலும் செடியைச் சுற்றிலுமுள்ள இடத்தில் பயிரிடக் கூடாது. அப்போதைக்கப்போது அடியைச் சுற்றிலுமுள்ள இடத்தை கிண்டிக் கிளறிக் கொண்டேவரவேண்டும். செடிகளுக்கு இடையிலுள்ள இடங்களில் காய்கறிவர்க்கங்கள் பயிரிடலாம்.

அத்தி குளிர்காலத்தில் ஒரு மாஸஹுலும் உஷ்ணகாலத்தில் ஒருமாஸஹுலும் கொடுக்கும். உஷ்ணகாலத்து பழந்தான் ருசியானது. குளிர் காலத்துப்பழம் ருசியற்றது. நன்ருய் பயிரிட்டால் 10 அடிமுதல் 15 அடி தூரத்தில் செடிகள் வைக்கப்பட்டுள்ள ஒரு ஏகரா நிலத்தில் 1000 முதல் 2000 ராத்தல் எடையுள்ள பழங்கள் கிடைக்கும். நன்ருய் பழுத்த அத்திப் பழத்தை அப்படியே சாப்பிடலாம். நன்ருய் பதனிட்ட பழங்கள் விசேஷமாய் விலைப்போகும். நன்ருய் உலர்ந்த பழங்களை வ்யாபாரிகள் ஒரு தேசத்திலிருந்து மற்ற தேசங்களுக்கு அனுப்புகிருர்கள். பழங்களை உலரவைக்கப் பின்வருமாறு செய்யவேண்டும். காய்களை முதிர்ந்து பழுக்கும் தருணத்தில் அறுத்து உடனே உஷ்ண ஜலத்தில் சில நிமிஷ பர்யந்தம் போட்டு, அவைகளை எடுத்து ஒன்றன் பின் ஒன்ருய் வரிசைவரிசையாய் வைத்து நிழலில் முதல்நாள் உலரவிடவேண்டும். பிறகு அவைகளை கூடைகளில் சேர்த்து மண்மேடைகளில் வைத்து வெயிலில் காயவிடவேண்டும். வெயிலில் காயும்பொழுது கூடைகளை தினமும் ஒரு முறை அல்லது இரண்டு முறை குலுக்கி வைக்கவேண்டும். ராத்ரி காலத்தில் கூடைகளை நன்ருய் மூடிவைக்கவேண்டும். நன்ருய் உலர்ந்த பிறகு அவைகளை பெட்டிகளிலும் கூடைகளிலும் கொட்டி அமுக்கி வாய்களை மூடிக் கட்டிவைக்கவேண்டும். பழங்களின் மேல் தோல் மிருதுவாயிருக்கும்படி அவைகளை கந்தகப்புகையிலும் உப்புகலந்த கொதிக்கும் நீரிலும் இடுகிருர்கள். இதனுல் பழத்தின் ருசிகெட்டு சாப்பிடுபவர்களின் தேகாரோக்யத்தைக் குறைக்கும். ஆகையால் இப்படிச்செய்தல் உத்தமமல்ல. இப்பழங்களை தேனிலிட்டு ஜாடிகளில் வைப்பார்கள். இவைகளைத் தான் நாம் வாங்கிச் சாப்பிடுகிருேம். அத்திப் பழங்கள் மிகுந்த விலைக்கு விற்கப்படுமாதலால் இப்பழங்களை உண்டாக்க தோட்டங்கள் ஏற்படுத்துதல் அவசியம். புஞ்சை நிலங்களை வைத்திருப்பவர்கள் அவைகளில் அத்தித் தோட்டங்களை வைப்பதால் எவ்வளவோ பலனையடையலாம். நிலத்தில் வேண்டியிருப்பது சிறுகிணறுகள் தான். மூன்றுவருஷகாலம் பாடுபட்டால் கஷ்டத்தின் பலனை பிந்தியடையலாம். ஆகையால் இது புஞ்சை நிலமுடையோர்கள் மிகவும் கவனிக்க வேண்டிய விஷயம்.

ஏ. ராமனுதன்.

---

## ALL-INDIA CATTLE PRESERVATION SOCIETY.

**எல்லா இந்தியா கால்நடை ரக்ஷண ஸங்கம்.**

மேற்கண்ட ஸங்க விஷயமாய் ஒரு ட்ராப்ட் ப்ராஸ்பெக்டஸ் நமது பார்வைக்கு வந்திருக்

கிறது. சென்ற ஜனவரிமீ 4உ யன்று எல்லா இந்தியா கால்நடை ரக்ஷண ஸங்கம் ஒன்று ஏற்படுத்துவதற்காக கல்கத்தாவில் ஒரு மீட்டிங் நடைபெற்றது. அநேக பங்காள ஹிந்துஸ்தான ப்ரமுகர்கள் அந்த மீட்டிங்குக்கு வந்திருந்தார்கள். கால்நடைகளை ரக்ஷிப்பதற்காக லக்ளௌவிலுள்ள மிஸ்டர் ஆனந்தபேகாரிலால் அவர்கள் தயார் செய்திருந்த ஸ்கீமை அவரே ஸபையில் விவரித்துச் சொன்னார். அந்த ஸ்கீமில் சில பாகங்கள் ஐக்யமாகாணங்களுக்கு ஏற்றதாகவிருந்ததால், வங்காள மாகாணங்களுக்கு ஏற்றதாக அந்த ஸ்கீமில் மாறுபாடுசெய்ய ஒரு கமிட்டி ஏற்பாடாயிற்று. அதேமாதிரி மற்ற மாகாணங்களிலும் கமிட்டிகள் ஏற்படவேண்டுமென்றும், எல்லா கமிட்டிகளும் ஒற்றுமையுடன் உழைத்து, ஒரு லிமிடெட் கம்பெனியாக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

(1). பால், நெய், இன்னம் பாலிலிருந்து கிடைக்கும் பொருள்கள் இந்தியர்களுடைய ஆகாரத்தில் முக்யமான பொருள்களாயிருப்பதையும், சுத்தமான பால், சுத்தமான நெய் இவை அகப்படுவது அரிதாயிருப்பதையும் உத்தேசித்து, எல்லா இந்தியா கால்நடை ரக்ஷண ஸங்கம், என்று ஒரு ஸங்கம் ஏற்படுத்தவேண்டும். அந்த ஸங்கத்துக்கு இந்தியாவின் எல்லா பாகங்களிலும் கிளைகள் இருக்கவேண்டும். அதன் நோக்கம், கால்நடைகளை ரக்ஷிப்பதும், பாலும், அதிலிருந்து கிடைக்கும் பொருள்களும் யாவருக்கும் கிடைக்கும்படி செய்வதுமே.

(2) மிஸ்டர் ஆனந்த பேஹாரிலால், ஷை ஸங்கத்துக்கு ப்ரொவிஷனல் ஜெனரல் ஸெக்ரெடரியாக நியமிக்கப்படவேண்டும்.

(3) மிஸ்டர் லாஸினுடைய ஸ்கீமைப் பற்றி ஆலோசித்து, வங்காளத்துக்கு ஏற்றதாக ஒரு ஸ்கீம் ஒன்று தயார்செய்ய ஒரு கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. மேலே சொன்ன ஸங்கத்துக்கு 50 கோடி ரூபாய் மூலதனம் வைக்க உத்தேசித்திருக்கிறார்கள். இதில் யாவரும் பங்கெடுத்துக்கொள்ளும்படி பங்கொன்றுக்கு 5 ரூபாயாக 10 கோடி பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. 5 க்ராமத்துக்கு ஒன்றாக கால்நடைக் கொட்டில்கள், கட்டப்படும். ஷை கொட்டிலில் ஒவ்வொன்றிலும் 50 கால்நடைகள் இருக்கலாம். சிறு பட்டணங்களில் 500கால்நடைகள் இருக்கப்போதுமான கொட்டிலும், நகரங்களில் 1,000 கால்நடைகளுக்கு ஏற்றதான கொட்டிலும் கட்டுவதாக உத்தேசமாம். இந்த ஸ்கீம் ஒப்புகொள்ளப்பட்டு அநுஷ்டானத்துக்கு வந்துவிட்டால் 71,63,000 கால்நடைகளை ரக்ஷிக்கலாமென்றும், 23,00,000 இந்தியர்களுக்கு வேலை அகப்படுமென்றும் முதல் வருஷத்தில் நூற்றுக்கு 10 வீதம் பங்குக்காரர்களுக்கு வட்டி கொடுக்கலாம் என்றும், இந்தியாவிலுள்ள எல்லோருக்கும் எளிதில் ஸ்வயமான பாலும், நெய்யும் கிடைக்கலாம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த ஸங்கத்தை ஸரிவர நடத்துவதற்கு முதலில் குறைந்தது 8 லக்ஷம் ரூபாய் வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கார்யம் ஒருவருடைய லாபத்தை உத்தேசித்தகார்யமென்று தோன்றவில்லை. ஆகையால் இது விஷயத்தில் பணக்காரர்களும் ஏழைகளும் ச்ரத்தை எடுத்துக்கொண்டு தங்கள் தங்களால் கூடிய உதவி செய்யலாம்.

மிஸ்டர் ஆனந்தபேகாரிலால் ஸமீபத்தில் இன்னொரு ப்ராஸ்பக்டெஸ் எழுதி வெளியிட்டிருக்கிறார். அதில் அவர், ஒரு ஜில்லாவுக்கு ஏற்படும் செலவையும் லாபத்தையும், அந்த ஏற்பாட்டைப்பற்றிய விவரங்களையும் காட்டி எழுதியிருக்கிறார்.

ஒரு ஜில்லாவில் 407 கால்நடைக் கொட்டில்கள் ஸ்தாபிக்கப்படும். ஜில்லாவின் பெரிய பட்டணத்தில் 1000 கால்நடைகள் இருக்கக் கூடியதாய் ஒரு கொட்டில் ஸ்தாபிக்கப்படும். அதற்குக் கட்டிடம், கால்நடை, முதலியவைகளுக்கு செலவு 58000-ரூபாய் ஆகிறது

ஜில்லாவின் சிறுபட்டணங்கள் 6-ல் சிறு கொட்டில்கள் ஸ்தாபிக்கப்படும். ஒவ்வொன்றிலும் 500 கால்நடைகள் இருக்கலாம் ஒவ்வொரு கொட்டிலுக்கும் 29000-ரூபாய் வேண்டியிருக்கும்.

க்ராமங்களிலே சிறிய கொட்டில்கள் ஸ்தாபிக்கப்படும். ஒவ்வொன்றிலும் 50 கால்நடைகள் இருக்கலாம். ஒரு க்ராமக் கால்நடைக் கொட்டிலுக்கு கொட்டகை, கால்நடை, சில்லரைச்செலவு இவைகள் எல்லாம் சேர்ந்து 3000 ரூபாய் ஆகிறது. இப்படி ஒரு ஜில்லாவில் 400 க்ராமக் கொட்டில்கள் ஸ்தாபிக்கவேண்டும். ஒரு க்ராமத்துக்கு ஒரு சிறுகொட்டிலாகவாவது, அல்லது 4-5, க்ராமங்களுக்கு ஒரு சிறுகொட்டிலாகவாவது ஏற்படுத்தவேண்டும்.

அவர் போடுகிற கணக்குப்படி ஒரு ஜில்லாவில் 407-கொட்டில்கள் ஸ்தாபிப்பதற்கு வேண்டிய மூலதனம் 14,32,000 ரூபாயாகிறது. கால்நடைகளுக்குத் தீனிச் செலவு ஒரு வருஷத்துக்கு 13,44,000, ரூபாயாகிறது. ஷை கொட்டில்களை எல்லாம் வைத்து நடத்துவதற்குவேண்டிய ஷிப்பந்திச்செலவு 5,88,000 ரூபாய். ஆக ஒரு வருஷச் செலவு 19,32,000. ரூபாய். இந்தக் கொட்டில்களில் உள்ள கால்நடைகளிலிருந்து பால், தயிர், நெய், சாணம், முதலியவற்றால் வரும் வரும்படி 20,92,180-ரூபாய். ஆகலாபம் 1,60,000 ரூபாய் ஆகிறது. போடும் முதல் 15 லக்ஷம் ரூபாய். ஆகவே நூற்றுக்கு $10\frac{2}{3}$ வீதம் வட்டி கட்டுகிறது. லக்ஷக் கணக்காய் மூலதனம் போடவேண்டியிருக்கிறதேயென்று மலைக்க வேண்டியதில்லை. க்ராமங்களில் ஒரு சிறிய கொட்டில் வைத்து நடத்துவதற்கு ஏற்படும் செலவு குறைவாகவே யிருக்கிறது. தக்க லாபமும் கிடைக்கிறது. ஒவ்வொரு க்ராமத்திலுமுள்ளவர்கள் ஒன்று சேர்ந்து தங்கள் க்ராமத்துக்கு ஒரு சிறு கொட்டில் ஸ்தாபித்துவிட்டால் அவரவர்கள் போடவேண்டிய தொகை மிகவும் குறைச்சலாகவே யிருக்கும். இப்படிப் பல க்ராமங்களில் க்ராமக் கொட்டில்களும் பட்டணங்களில் பெரிய கொட்டில்களும் ஸ்தாபித்துவிட்டால் இவைகளை ஒழுங்குபடுத்தி மேம்பார்வைபார்த்து நடத்துவதில் யாதொரு ச்ரமமும் இராது என்று மிஸ்டர் லால் சொல்லுகிறார்.

இது விஷயம் ச்ரத்தையுள்ளவர்கள் அவர்கள் இருக்கும் ப்ரதேசங்களில் பரொவிஷனல் (தற்கால) கமிட்டிகள் ஏற்படுத்திக் கொண்டு, ஜெனரல் ஸெக்ரெடரிக்கு தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறது. இது விஷயமாய் இன்னம் விவரங்கள், ப்ராஸ்பெக்டெஸுகள் வேண்டுவோர், மிஸ்டர் ஏ. பி. லால், எப். ஆர். எச். எஸ்., அமினபா பார்க் லக்னௌ, Mr. A. B. Lal, F. R. H. S., Aminabad Park, Lucknow, என்று எழுதி கேட்டுக்கொள்ளவும்.

---

## OCCUPATION FOR YOUTH

BY

T. K. RAMIAH.

### சிறுவர்களும் உத்யோகம் தேர்ந்தெடுத்தலும்.

நல்ல பதவியும் செல்வாக்கும் அடையக் கூடிய நுட்ப அறிவு வாய்ந்த அனேக சிறுவர்களின் வாயினின்று, "நான் எவ்வித உத்யோகத்திற்குச் செல்லலாம்; எனக்கு எத் தொழில் தகுதியுள்ளது" என்னும் கேள்வி அடிக்கடி பிறந்துகொண்டிருப்பதை நாம் கவனிக்கிறோம். இக்கேள்விக்கு பதில்கூறு

வது மிகவும் கடினமாக முதலில் தோற்றும். பின்வருபவையே அவர்களுக்குச் சொல்லும் உத்தரமாகும்.

அனேக சிறுவர்கள் தாங்கள் எவ்வித உத்யோகத்திற்கு போகப் போகிறோம் என்பதுபோன்ற சிந்தனை சற்று மின்றி, படித்துக்கொண்டே செல்லுகிறார்கள். படிப்பு முடிவானதும், கண்ணைக்கட்டி காட்டில் விட்டதுபோல, வேலைக்கு எங்கும் அலைகிறார்கள். இவர்களுக்கு உலகத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது. இவர்களைப் புஸ்தகப்பூச்சி என்றாலும் மிகையாகாது. ஸாதாரணப் படிப்புள்ளவர்களுக்கு, உதாரணமாக மெட்ரிகுலேஷன் தேறியவர்களுக்கு, ரயில்வே, தாலூக் காக் கச்சேரி, கலெக்டர் ஆபீஸ் என்பன போன்ற சில டிபார்ட்மெண்டுகளே தெரியும். இவைகளில் எங்கேயாவது பதினைந்து ரூபாயில் ஒரு க்ளர்க்கு வேலை காலியாய் இருப்பதாகத் தெரிந்தால் ஆயிரம் பெயர்கள் அவ்வேலைக்கு மனு செய்கிறார்கள். அத்ருஷ்டமுள்ளவன் இவ்வுயர்ந்த உத்யோகத்தைப் பெறுவான். மற்றவர்கள் மறுபடி எங்கேயாவது ஒரு காலி ஏற்படுகிற வரையில் காத்துக்கொண்டிருக்கவேண்டும். இவ்வுத்யோகங்களை விட்டால் இவர்களுக்கு வேறுகதியில்லை போலும். வேறு எதாவதொரு வேலைக்குப் போவோம் அல்லது ஒரு தொழிலைச் செய்து பிழைப்போம் என்று இவர்களுக்குத் தோன்றாதது மிகவும் விஸனிக்கத்தக்கதே. இவர்களின் நிலைமை இவ்வாறிருக்க, உயர்தரக்கல்வி பெற்றவர்களோ வக்கீல், டாக்டர், உயர்ந்தால் எஞ்ஜினீயர் வேலைகளையே நாடிச் செல்லுகிறார்கள். இவ்வுத்யோகங்களைத் தாழ்வாக நினைத்து இங்கு எழுதியதாக நேயர்கள் கொள்ளக்கூடாது. நான் சொல்லுவது யாதெனில், இவ்வுத்யோகங்கள் தற்பொழுது நிறைந்திருக்கின்றன. இவைகளைவிட்டு வேறு உத்யோகங்களுக்குச் சென்றால் மிகுந்த பலனடையலாம் என்பதே. வக்கில் வேலை கௌரவ மானதுதான். ஒருவரிடத்தில் கீழ்ப்படிந்து கைகட்டி நின்று த்ரவியம் ஸம்பாதிக்க வேண்டியதில்லை. ஆனால் வக்கீல்கள் நாளுக்குநாள் அதிகரிக்கவே அவர்களுக்கு நாளுக்குநாள் வரும்படி குறைந்து வருவதை நிதர்சனமாகக் காண்கிறோம். எத்தொழில் நிறைந்திருக்கிறதோ அத்தொழிலை விட்டு வேறு தொழிலுக்குச் செல்வதே லாபகரமாகும். நம் இந்தியாவில் சிறுவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் கைத்தொழில் விவஸாயம் போன்ற தொழில்கள் மிகவும் கேவலமாய்த் தோன்றுவது நமது துரத்ருஷ்டமே.

தொன்றுதொட்டு நமது தேசத்தில் விவஸாயமே முதன்மையான தொழிலாக இருந்துவந்திருக்கிறது. நூற்றுக்கு 70 பெயர்கள் விவஸாயத்தாலேயே பிழைத்து வருகிறார்கள். "சீரைத்தேடின் ஏரைத்தேடு," "மேழிச்செல்வம் கோழைபடாது," "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின் செல்பவர்" என்பவை போன்ற வாக்யங்கள் விவஸாயத்தின் மேன்மையை நன்கு விளக்குகின்றன. ஆனால் விவஸாயத்தையே நம்பியிருப்பது மூடத்தனமாகும். அதுவே தேசத்தின் வறுமைக்கு முக்ய காரணமாகும். கைத்தொழில்கள் செய்து பிழைப்பது மற்றொரு மேன்மையான தொழிலாகும். ஜெர்மனி, இங்லண்ட், அமெரிக்கா முதலிய தேசங்கள் தற்பொழுது அடைந்திருக்கும் மேன்மைக்கு காரணமென்ன? ஜப்பான் உன்னத நிலைமையை அடைந்ததற்கு யாது காரணம்? அந்ததேசங்களின் கைத்தொழில் அபிவ்ருத்தியன்றோ?

பொதுவாக தங்களுக்குரிய தொழில்களைத் தெரிந்தெடுப்பதில் சிறுவர்கள் சில விதிகளை

அநுஸரிக்கவேண்டும். உனது மனது எவ் வழியிற் செல்லுகின்றதோ அவ்வழியே செல். அவ்வழியை விட்டு சற்றும் விலகாதே. எத் தொழிலில் உனக்கு அனுபவம் உண்டோ, எத்தொழிலில் உன் மனது செல்லுகின்றதோ, எத்தொழில் செய்தால் உன் வல்லமையும் புத்தியும் வ்ருத்தியாகுமோ அத்தொழிலைச் செய். உன் மனதிற்கு விரோதமாக ஒரு கார்யத்தைச் செய்தால் அக்கார்யம் ஸரிவர நிறைவேறாது. இதுதான் ஒரு தொழிலில் ஜயமடைவதற்குண்டான பரம ரகஸ்யம். பென்ஜமின் ப்ராங்க்லின்' என்னும் ஒரு சிறுவனுடைய சரித்ரத்தை அனேகம்பேர் படித்தும் கேட்டுமிருப்பார்கள். அவன் முதலில் மிகவும் எளியவனுயிருந்தான். அச்சுவேலையில் அவன் மனம் சென்றபடியால் வெகு காலம் அச்சாபீசில் அச்சுக்கோக்கும் வேலையைச் செய்து அத்தொழிலில் மிகவும் கீர்த்தி பெற்று அனேக உயர்ந்த பதவிகளைப் பெற்று, கடைசியாக ஒரு தேசத்தை ஆளும்படியான உத்யோகத்தையும் பெற்றுன். வண்டி ஓட்டுவதற்கு யோக்யதையுள்ளவர்கள் கோர்ட்டில் வக்கீல்களாக வாதிக்க விரும்புவதும், தங்களையே தாங்கள் அடக்கி ஆளமுடியாதவர்கள் மற்றவர்களுக்கு யஜமானனுக இருந்து அவர்களை ஆள விரும்புவதும், தாங்கள் கற்க வேண்டிய விஷயங்கள் பலவிருக்க பிறருக்கு கற்பிக்கத் தொடங்குவதும், தாங்கள் எச்சமயத்தில் எவ்வேலைக்கு உரியவர்கள் என்பதை அவர்கள் அறியாததே முக்ய காரணமாகும்.

உன் அறிவும் சக்தியும் அபிவ்ருத்தியாகக் கூடியதொழிலை ஒப்புக்கொள்வதே நீ ஜயமடைவதற்கு எடுத்துவைக்கும் முதலடியாகும். அத்தொழிலையே உறுதியாகப் பற்றியிருப்பது இரண்டாவதாகும். சற்று உயர்ந்த பதவியையாவது உயர்ந்த சம்பளத்தையாவது எதிர்பாராதே. உன்னுடைய தொழிலை விசாலப்படுத்த முயலு. உன் தொழிலில் புதிது புதிதான மாதிரிகளை ஏற்படுத்து. அபஜயமானது உன்னை சற்றும் அணுகாது. சட்டம் தெரியாத ஒரு அட்டர்ணியாக இருப்பதைவிட தையல் வேலையில் மகா ஸமர்த்தனுக இருப்பது மேல். கௌரவத்தை அடையவேண்டும் அல்லது ஏராளமான பணத்தை ஸம்பாதிக்க வேண்டும் என்னும் நோக்கத்துடன் நீ வேலைசெய்ய வேண்டுவதில்லை. உனது ஸாமர்த்தியம் முழுவதும் காண்பிக்கக் கூடிய தொழிலை தெரிந்தெடு. உன் வல்லமையையும் மனிதத் தன்மையையும் நாளுக்கு நாள் வ்ருத்திசெய். பணமும் கௌரவமும் தானுக வரும். நீ மனிதனுடைய வேலையைச் செய்யும் மனிதனுக இருக்க வேண்டும். நூற்றைம்பது பவுண்டு எலும்பும், சதையும் சேர்ந்தது மனிதனுகமாட்டாது. எலும்பும், சதையும் மூளையும் சேர்ந்து, மனிதத் தன்மையான வேலையை எவ்வாறு செய்வது, மனிதத்தன்மையான எண்ணங்களை எவ்வாறு எண்ணுவது, மனிதன் செல்லவேண்டிய பாதையை எவ்வாறு குறிப்பது, மனிதத்தன்மையான நடத்தையை எவ்வாறு அடைவது என்று அறிந்தாலொழிய மனிதனுகமாட்டா.

நிமிஷத்திற்கு நிமிஷம் உனது உத்யோகத்தை மாற்றுதே. சில மாஸங்கள் உபாத்யாயராக இருந்து, பிற்கு இரண்டொரு ரூபாய்க்கு ஆசைப்பட்டு அவ்வேலையை விட்டு ஒரு ஆபீஸில் க்ளார்க்காக அமர்வதும், மறுபடியும் அதைவிடவேறொரு இடத்தில் அதிக சம்பளம் கிடைக்கிறதென்று அவ்வேலையை விட்டுச் செல்வதுமாக இருப்பதைவிட உபாத்தியாயர் வேலையிலேயே இருப்பானேயாகில் அவனுக்கு மிகுந்த அபிவ்ருத்தியும் கௌரவமுமுண்டு. நீ ஒரு வக்கீலாகவாவது, டாக்டராகவாவது, விவஸாயியாகவாவது, ரஸாயன சாஸ்த்ரியாகவாவது, அல்லது வ்யாபாரியாகவாவது

தான் இருக்கவேண்டுமென்று உலகம் உனக்கு சட்டம் ஏற்படுத்தவில்லை. அது வேண்டுவதெல்லாம் நீ எத்தொழில் செய்தாலும் அத்தொழிலில் நிபுணனாக இருக்கவேண்டு மென்பதே. ஏதாவது ஒரு தொழிலில் நீ நிபுணனாக இருக்கும் பக்ஷத்தில் உன்னை உலகம் நிச்சயமாக மெச்சும், கௌரவப்படுத்தும், உனது உதவியை நாடி வரும்.

உன்னுடைய பெற்றோர்களையாவது, உனது ஜென்ம தேசத்தையாவது, உன்மதத்தையாவது அல்லது உனது பிறப்புவளர்ப்பையாவது குற்றம் கூறுவது மதியீனமாகும். உன்னால் தடுக்க முடியாத விஷயங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்பது வீணாகும். உன்னிடத்தில் உள்ளக்கிளர்ச்சியும், மனோதைர்யமும் தொடுத்த, காரியத்தில் ஜயமடைவோம் என்னும் நம்பிக்கையும், உறுதிமனமும், விடாமுயற்சியும் விடாது குடிகொண்டிருக்க வேண்டும்.

ஸ்நேகிதனாவது சிபார்சாவது இல்லாத பட்சத்தில் முதல் முதல் ஆரம்பத்தில் நீ கவனிக்க வேண்டிய விஷயங்கள் ஆறு. முதலாவது ஒரு வேலையில் அமரவேண்டும. இரண்டாவதாக வாயைத் திறவாமல் இருக்கவேண்டும். ஸகலமான விஷயங்களையும் கவனத்துடன் உற்று நோக்கிவருதல் மூன்று. நான்காவது நன்றியறிவுள்ளவனாகவும் கண்யமுள்ளவனாகவு மிருத்தல். நீ இல்லாவிடில் தனது வேலை ஸரிவர நடைபெறாது என்று உன் யஜமானன் நினைக்கும்படிசெய்தல் ஐந்தாவது. மற்றவர்களிடத்தில் மரியாதையுடன் நடந்து கொள்ளல் ஆறாவதாகும். நாளையென்றிராதே. 'இப்பொழுது' என்பது உனது பாது காப்புச் சொல்லாக இருக்கட்டும்.

டி. கே. ராமய்யா.

## MADRAS PROVINCIAL CONFERENCE.

### சென்னை மாகாண கான்பரென்ஸ்.

சென்னை மாகாண கான்பரென்ஸ் 20-வது முறையாகத் திருச்சினாப்பள்ளியில் மே மாஸம் 5-ந் தேதியன்று கூடிற்று. அனரபில் மிஸ்டர் ஆர். ராமச்சந்த்ரராவ் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அவர் செய்த ப்ரஸங்கத்தில் முதலில் டெல்லி கொடுஞ்செயலைப் பற்றியும் கன்ஸ்பிரஸி ஆக்ட் என்று சொல்லப்படும் சதியடக்கு ஆக்ட்டைப்பற்றியும் பேசினார். பின்பு ஜில்லா நிர்வாகத்தைப்பற்றிப் பேசுகையில், ஜில்லா கலெக்டர் ஜனங்களோடு கலந்திராமல் தனித்திருப்பதால் பொதுஜனங்களின் அபிப்ராயங்களை ஸரியாய் அறிய முடிவதில்லை. எல்லா விஷயங்களையும் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலேயே பேசி முடிப்பதைவிட ஜில்லா கலெக்டரும் பொதுஜனத் தலைவர்களுடன் தமது ப்ரதேசத்து விஷயங்களைப்பற்றிக் கலந்து பேசுவது நல்லதாகும். இப்பொழுது ஜில்லாவின் நிர்வாகத்தில் இப்படிச் செய்வதற்கு வேண்டிய ஜில்லா கௌன்ஸில்கள் போன்ற ஸௌகர்யங்கள் இல்லை ஆகையால் ஜில்லா ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி ப்ரொவின்ஷ்யல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் தான் பேச வேண்டியிருக்கிறது. தற்காலம் உள்ள ஜில்லா அதிகாரிக்கு தமது கடமைகளை ஸரிவரச் செய்ய வேண்டுமென்றும், ஜில்லாவின் நிலைமையை வ்ருத்தி செய்யவேண்டுமென்றும் மேலான எண்ணம் இருக்கிறதென்பதில் ஸந்தேகமில்லை. ஆனால், உத்யோக ஏற்பாடுகளின் தன்மையாலும், அதிகாரி ஜனங்களுடன் சேராமல் ஒதுங்கித் தனிமையாயிருப்பதாலும், ஜனங்களுடைய வ்யவகாரங்கள் பலவற்றில் கலக்காமல் இருப்பதாலும், ஜனஸமூக அபிப்ராயம் கலக்காத ஒரு பக்கம் சார்பாயுள்ள உத்யோக அபிப்ராயமே அவருக்கு அதிகமாகத் தெரிவதாலும் ஜில்

லாவின் ஆட்சியானது எப்படியிருக்க வேண்டுமோ அப்படி யிருக்கவில்லை. உத்யோகஸ்தர்கள் அல்லாத பொதுஜனத் தலைவர்கள் சேர்ந்த பொறுப்புள்ள ஒரு ஸபை ஏற்படுத்தினால் கார்யங்கள் த்ருப்திகரமாகிவிடும் என்று சொன்னார்.

அவர் க்ராம வாழ்க்கையைப்பற்றிப் பேசினதைவேறு பக்கத்தில்ப்ரசுரித்திருக்கிறோம்.

கோவாபரேஷனைப் பற்றிப் பேசுகையில், அந்த முயற்சி இப்பொழுது வ்ருத்தியாகி வருவதையும் அதன் தற்போதைய நிலைமையும் கூறி அநேக இடங்களில் இந்த முயற்சி பரவவில்லை யென்றும், அவ்விடங்களில் கோவாபரேஷன் பரவ வேண்டுமென்றும், ஐக்ய நாணய ஸங்கங்களேயன்றி மதுரை கான்பரென்ஸில் கூறியபடி பலவித கூட்டுறவு ஸங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டுமென்றும், இந்த முயற்சியைப்பற்றி எல்லா உத்யோகஸ்தர்களும் அனுதாபம் காட்டி வருகிறார்கள் என்றும் கூறினார். மேலும், இந்த கோவாபரேஷன் முயற்சி தேசமெங்கும் பரவும்படி ரொம்பப் பாடு பட்டாலொழிய அதிக நன்மையுண்டாகாதென்றும், தற்போது இதை பரவச்செய்வதற்கு, தற்கால இந்தியாவின் நிலைமையை உத்தேசித்து, கவர்ன்மெண்டாரே தகுதியானவர்களென்றும், ஐக்யநாணய ஸங்கங்கங்கள் ரொம்ப அதிகமாக வ்ருத்தியாவது தவறெனவும் கொஞ்சம் மெதுவாய் அவைகள் வ்ருத்தியாக வேண்டும் எனவும் சொல்வது ந்யாயமல்ல வென்றும் சொன்னார்.

கீழ்தரப்படிப்பு விஷயமாய்ப் பேசுகையில் கவர்ன்மெண்டார் கட்டாயப்படிப்பின் அவச்யத்தை ஒப்புக்கொள்ளா விட்டாலும் கீழ்தரப்படிப்பு ரொம்ப வ்ருத்தியாகவேண்டு மென்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். இலவசப்படிப்பு விஷயத்தில் கவர்ன்மெண்டார்பள்ளிக்கூடங்களில் சம்பளம் வாங்குவதை முழுவதும் நிறுத்திவிட வேண்டிய ஸமயம் இன்னம் நேரவில்லை என்கிறார்கள். பையன்கள் கொடுக்கும் சம்பளத்தைக் கொண்டு கீழ்தரப்படிப்பை வ்ருத்திசெய்து வருகிறார்கள். சம்பளமே இல்லாமல் செய்துவிட்டால் பள்ளிக்கூடங்கள் இல்லாத மற்ற இடங்களில் பள்ளிக்கூடங்கள் ஸ்தாபிப்பது ரொம்ப தாமஸமாகிவிடுமென்கிறார்கள். அநேக மகாணங்களில் மூலாதாரப்படிப்பு இலவசமாகக் கற்பிக்கப்படுகிறது. சில விடங்களில் சம்பளம் கொடுக்க முடியாத பிள்ளைகளுக்கு இலவசமாகக் கல்வி கற்பிக்க ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். இதற்குமேல் கவர்ன்மெண்டார் செய்ய முடியாதவர்களா யிருப்பதாகச் சொல்லுகிறார்கள். ஆனால் ராணுவச் செலவு கமிஷனால் கொஞ்சம் பணம் மிச்சமாகு மென்று தோன்றுகிறது. அந்த மிச்சப் பணத்தை எலிமெண்டரி படிப்பு அபிவ்ருத்திக்குச் செலவிடும்படி கேட்டுக்கொள்ளலாம். இதன் மத்தியில் பொதுஜனங்கள் இது விஷயமாய் வேண்டிய கவலை எடுத்துக்கொண்டு கீழ்தரக் கல்வி அபிவ்ருத்தியாகும்படி செய்யவேண்டும். கோவாபரேடிவ் ஸங்கங்கள் தங்களுடைய லாபத்தில் ஒரு பாகத்தை கல்விக்கென்று எடுத்துவைக்க வேண்டுமென்று ஒரு கோவாப ரேடிவ் கான்பரென்ஸில் தீர்மானித்தபடி செய்வது நல்லது. வ்யாபார வகுப்பினர்களுக்குள் தர்ம கார்யங்களுக்காக பணம் வஸூலிப்பது வழக்கமாயிருக்கிறது. அவர்களுடைய தர்மங்களையும், மற்ற தர்ம ஸ்தாபனங்களையும் வித்யா விஷயமாக உதவி புரியும்படி தூண்ட வேண்டும். இப்படி கவர்ன்மெண்டு செய்யும் முயற்சியோடு நாமும் கலந்து உழைத்துவர வேண்டும் என்றார்.

இன்னம் மகாண வரவு செலவு, தென் ஆப்ரிகா இந்தியர்களின் நிலைமை முதலிய பல

விஷயங்களைப் பற்றிப் பேசி தமது ப்ரஸங்கத்தை முடித்தார்.

கான்பரென்ஸ் இரண்டாவது மூன்ருவது நாள் கூடியபோது செய்யப்பட்ட தீர்மானங்களில் சிலவற்றை ப்ரசுரிக்கிருேம்.

இரிகேஷன் ஸெஸ் ஆக்ட், லாண்ட் என்க்ரோச் மெண்ட் ஆக்ட் இவைகளை சீக்ரம் திருத்தம்செய்ய வேண்டுமென்றும், கவர்ன்மெண்டுக்கு ஸொந்தமான அல்லது கவர்ன்மெண்ட் செலவில் பாதுகாக்கப்படுகிற ஜலதாரத்திலிருந்து ஜலம் உபயோகித்த நிலங்களுக்கு மட்டும் தீர்வை போட வேண்டும் என்றும் வெள்ளத்தினுலாவது, ஊற்றத்தாலாவது கவர்ன்மெண்டு ஜலம் ஒரு நிலத்துக்கு உபயோகப்பட்டால் அதற்கு வரி போடுவதை நிறுத்தி விடவேண்டு மென்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது.

ரயத்வாரி நிலங்களுக்கு விதிக்கப்படும் ரெவின்யூ விகிதத்தை அடிக்கடி மாற்ருமல் ஒரே திட்டமாக ஏற்பட வேண்டுமென்றும், ரெவின்யூ ரிவிஷன் செய்வதாக விருந்தால் 60 வருஷத்துக் கொருதடவை விலைவாசி ரொம்ப அதிகரித்திருந்தால் மாத்ரம் 100-க்கு $12\frac{1}{2}$ பாகம் வீதம் உயர்த்தலாம் என்றும் ஒரு தீர்மானம் செய்யப்பட்டது. இதைப் பிரேரித்த ஆனரபில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார், ஸாகுபடிச் செலவு ரொம்ப அதிகரித்து விட்டதென்றும், அடிக்கடி ரெவின்யூ ரிவிஷன் செய்வது ஜனங்களுக்கு மனக்கவலையைக் கொடுக்கிறதென்றும் சொன்னுர். ஸர்க்கார் விலைவாசித் திட்டம் போடுவது ஸரியாயில்லை; விலை வாசியைக் கொண்டு வரி விதிப்பதும் ஸரியான முறையில்லை; திட்டம் போடுவதில் தவறுதல்கள் ஏற்பட்டு ரிவிஷன் காலத்தில் நிலஸ்வான்தார்களுக்கு ரொம்ப கஷ்டத்தை உண்டுபண்ணுகின்றன என்றும் சொன்னுர். மிஸ்டர் ஜல் பேச்வரய்யர் இந்தத் தீர்மானத்தைத் தாங்கிப் பேசுகையில், விலைவாசி அதிகரித்திருப்பதைக் கொண்டு வரும்படி அதிகமாகி வருகிறதென்று சொல்வதற்கில்லை யென்று சொன்னுர். நிலத்தீர்வையை சாச்வதமாக ஸெட்டில் மெண்டு செய்யவேண்டுமென்று ஒரு திருத்த ப்ரேரணை கொண்டுவரப்பட்டது. ஆனுல் அந்த ப்ரேரணையை மெஜாரிடி ஒப்புக்கொள்ளவில்லை.

ப்ரைமெரி கல்வி ஜனங்களுக்கு இலவசமாகவும், கட்டாயமாகவும் கற்பிப்பதற்கு வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டு மென்றும், முதலில் முனிஸிபாலிடிகளிலாவது கட்டாயப்படுத்திப் படிப்பு சொல்லிக் கொடுக்கும்படி இப்பொழுதுள்ள சட்டவிதிகளை மாற்றி விட வேண்டுமென்றும் அடுத்த படியாகத் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்கூல்பைனல் வகுப்புகளிலும், காலேஜ் வகுப்புகளிலும் மாணவர்கள் தேச பாஷைகளைப் படிப்பதற்கு தக்க ஸௌகர்யங்கள் செய்யும் பொருட்டு ஸ்கூல்பைனல், இண்டர் மீடியேட், பி. எ. (பாஸ்) ஆகிய இந்த வகுப்புகளில் தேச பாஷைப்பாடத்தைக் கட்டாய பாடமாகச் செய்து கவர்ன்மெண்டும் யூனிவர்ஸிடியும் கரிகுலத்தை அதாவது பாடஜாப்தாவை மாற்ற வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

இதை ப்ரேரித்த மிஸ்டர் வி. பி. ராமஸ்வாமி அய்யர் தேசபாஷைகள் க்ஷீணதசையடைந்து விட்டனவென்றும், பண்டிதர்களை வீணுக தூஷித்து வருகிருர்கள் என்றும், தேசபாஷைப்படிப்பால்மனஸுக்கு யாதொரு பயிற்சியுமில்லை யென்று சொல்லுவது வீண் வார்த்தை என்றும், ஆகையால் பாஷைப்பாடம் கட்டாயப்பாடமாக ஏற்படவேண்டு மென்றும் சொன்னுர்.

பி. எ. வகுப்பில் தேசபாஷைப் பாடம் இஷ்டபாடமாக இருக்கட்டும் என்று ஒரு

திருத்த ப்ரேரணை கொண்டுவரப்பட்டது. அதன்மேல் பெரிய வாக்குவாதம் உண்டா யிற்று. திருத்த ப்ரேரணையை மெஜாரிடியார் தள்ளிவிடவே முதலில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேறிற்று.

அங்கீகரிக்கப்பட்ட ப்ரைவேட் பாடசாலை களில் உள்ள உபாத்யாயர்களுக்கு ப்ராவி டண்ட் பண்டு ஏற்படுத்த வேண்டியது அவச் யந்தான் என்று கவர்ன்மெண்டார் ஒப்புக் கொண்டதற்கு கான்பரென்ஸ் நன்றிசெலுத்து வதோடு, சீக்ரம் ப்ராவிடெண்ட் பண்டு ஏற் பாட்டை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர வேண்டு மென்று கவர்ன்மெண்டை கேட்டுக் கொள்ளுகிறது.

கோவாபரேடிவ் முயற்சி விஷயத்தில் கவர்ன் மெண்டார் அனுதாபம் காட்டிவருகிறார்கள். ஆனால் இப்பொழுது ஸொஸைடிகள் ரெஜிஸ் டர் செய்வது குறைந்து போய்விட்டதோடு அநேக ஜில்லாக்களில் இந்த முயற்சி ரொம்ப மெதுவாய்ப் பரவிவருகிறது. ஆகையால் கவர்ன்மெண்டார் தக்க இன்ஸ்பெக்டர்களை அதிகமாய் நியமித்து இந்த முயற்சியை பரவச் செய்வதோடு கூட, ஸங்கங்களை தாமஸமன் னியில் ரெஜிஸ்டர் செய்ய வேண்டும். கோவாப ரேஷனில் நாணய ஸங்கங்களேயன்றி மற்ற ஸங்கங்களும் ஏற்படுத்த கவர்ன்மெண்டார் ஏற் பாடு செய்யவேண்டும்.

புது ரயில்வேக்கள் போடுவதில் இந்தராஜ தானியின் தேவைகளை இந்தியா கவர்ன்மெண் டார் கவனிக்கவில்லை. ஏற்கனவே ஸர்வே யான லையன்களை சீக்ரம் போடுவதற்கு வைஸ் ராய் ஏற்பாடு செய்யவேண்டு மென்று இந்தக் கான்பரென்ஸ் கேட்டுக்கொள்ளுகிறது.

மதஸம்பந்தமான தர்ம ஸொத்துக்களை ஸரி யாயும திருப்திகரமாயும் மானேஜ் செய்ய வேண்டியது ரொம்ப அவச்யமாகையால் அதைக்குறித்த 1863-ம வருஷத்து 20-வது ஆக்டைத் திருத்தவேண்டும்; மிஸ்டர் சேஷ கிரி அய்யரும், திவான்பகதூர் எல். எ. கோ விந்தராகவய்யரும் கொண்டுவர விரும்பின மசோதாவுக்கு கவர்ன்மெண்டார் அனுமதி கொடுக்கத்தாமஸிப்பது விஸனிக்கத்தக்கது. இதை ப்ரேரித்த மிஸ்டர் பி. டி. ரெங்கஸாமி அய்யங்கார், இந்தச் சட்டத்தைத் திருத்த வேண்டியது அவச்யமென்று கவர்ன்மெண் டார் ஒப்புக்கொள்ளாதது விஸனிக்கத் தக்கது என்றும், இந்தத் திருத்தத்துக்கு விரோதமா யிருப்பவர்கள், இந்தச் சட்டத்தின் உதவியைக் கொண்டு தர்ம ஸொத்துக்களை அபகரித்து வருபவர்களே யென்றும், எப்படியாவது ட்ரஸ்டியாக ஆகிவிட்டால் அவர்கள் ஆயுள் முழுவதும் அந்த உத்யோகத்தி லிருப்பா களாகையால் அவர்கள் பொதுஜன அபிப் ராயத்தைக் கவனிப்பதில்லை யென்றும், அப் படி அக்ரமம் செய்கிறவர்கள இறந்தாலொ ழிய அவர்கள் தங்களுடைய ஸதானத்தை விட்டு விலகமாட்டார்கள் எனறும் சொன் னார். இந்தத் தீர்மாத்தைத் தாங்கிப்பேசின மிஸ்டர் ஸ்ரீநிவாஸய்யங்கார், கோயில் கணக்கு களையும், கமிட்டி மெம்பர்களின் கார்யங்களை யும் அடிக்கடி சோதித்து மானேஜ்மெண்டை ஸரியான நிலைமையில் வைக்க முயன்றது முடி யாமற் போயிற்றென்றும் அநேக கமிட்டி மெம்பர்களும், ட்ரஸ்டிகளும் தர்மஸொத் தைக் கொண்டே ஜீவிக்கிறார்கள் என்றும் சொன்னார்.

டிஸென்ட்ரலைஸேஷன் கமிஷன் என்று சொல்லப்படும் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் சொன்ன முறைகளை அனுஸரித்து க்ராமப் பஞ்சாயத்துகளை தாமஸன்னியில் சென்னை கவர்ன்மெண்டார் ஸ்தாபிக்க வேண்டியது ரொம்பவும் அவச்யம்.

டெக்னிகல் கல்வியும் வ்யாபாரக் கல்வியும் கற்கும் மாணவர்களுக்கு அவைகளில் உயர்ந்த

படிப்பு கற்பிப்பதற்காக சென்னையில் ஒரு உயர்ந்த வ்யாபாரக் காலேஜ் ஸ்தாபிக்க வேண்டும்.

பாரஸ்ட் கமிட்டியார் எடுத்துச் சொன்ன யோசனைகள் ரொமப நன்மையைக் கொடுக் கக் கூடியவை. ஆனால் இந்த சீர்திருத்தங் களைப் போல் இன்னம் திருத்தங்கள செய்ய வேண்டும். ரிபோர்ட்டில் காடுகளை பாகுபாடு கள் செய்வதையும், அந்தந்த வகுப்புகளை யார் மானேஜ் செய்வது என்பதையும் குறித்த 49 பாராவில் சொல்லப்படும் உத்யோகஸ்தர்க ளோடு உத்யோகஸ்தர்க ளல்லாதவர்களும் சேர்க்கப்பட வேண்டும்.

சென்னை எடுகேஷனல் டிபார்ட்மெண்டின் க்ராண்ட்-இன்-எய்ட் கோடில் அநேக விஷ யங்களை மாற்றவேண்டும். ஒரு ஸெகண் டரி ஸ்கூலுக்கு அதிக பக்ஷம் கொடுக் கக்கூடிய க்ராண்டுத்தொகை அந்த ஸ்கூலை மனேஜ் செய்பவர்களுக்கு வரும்படி போக மேல ஏற்படும் செலவு முழுமையுமாக இருக்கவேண்டும் என்று விதி ஏற்பட வேண் டும. மேற்படி கோடின் 4-வது அத்யாயப்படி ஒரு பள்ளிக்கூடத்தின் சம்பள வருமானத்தை நிர்ணயிக்கையில் பிள்ளைகளிடத்திலிருந்து சம்பளம் குறைத்து வாங்குதல், ப்ரீஸ் காலர் ஷிப்புக் கொடுத்தல் முதலியவைகளால் குறை யும் பணத்தை மொத்த சம்பள வரும்படியில் 100 க்கு 15 பாகம் வரையிலும் சேர்க்காமல் இருக்கவேண்டும். டிஸ்ட்ரிக்ட் போர்டுகள், முனிஸிபாலிடிகள் இவைகளால் நடத்தப்படும ஸ்கூலகளுக்கும் இந்தக் கோடின்படி உதவி செய்யவேண்டும். உதவி பெற்ற எலிமெண்டரி பாடசாலை உபாத்யாயர்களுக்கு வருஷத்தில் 100 ரூபாய் வரும்படி கிடைக்கும்படி ஸ்டை பண்டு, காபிடேஷன் க்ராண்டு முதலியவை களை உயர்த்தவேண்டும். பெண்களுக்கும், தாழ்ந்த வகுப்புகளுக்கும் ஏற்பட்டுள்ள பள் ளிக்கூடங்களுக்கு தனி ரேட்டின்படி உதவி செய்ய வேண்டும்.

இன்னும் சில தீர்மானங்கள் செய்யப்பட் டன. அடுத்த கான்பரென்ஸ் நெல்லூரில் கூடும்.

---

## PROVINCIAL SOCIAL CONFERENCE.

ப்ரோவின்ஷ்யல் ஸோஷல் கான்பரென்ஸ்.

14-வது சென்னை ஸோஷ்யல் கான்ப ரென்ஸ் மேமீ 6-தேதி யன்று திருச்சினாப் பள்ளியில் கூடிற்று மிஸ்டர் கே. பி. ராமநா தய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். அவர்செய்த ப்ரஸங்கத்தின் ஸராம் சம் பின்வருமாறு :—ஆசார சீர்திருத்தம் ரொம்ப அவச்யமாயிருந்தாலும் அது பொது ஜன சம்மதமில்லாம லிருக்கிறது. ஆசார சீர்திருத்தத்தின் நோக்கம் என்னவென் றால் மதஸம்பந்தமான கொள்கைகளையும் அநுஷ்டானங்களையும் சீர்ப்படுத்தி பற்பல உட்பிரிவுகளில் உள்ள கடுமையான நிபந்தனை களின் கொடுமையை நீக்கவேண்டுவதே. ப்ரா மணர்களுக்கும் மற்ற உயர்ந்த ஜாதி ஹிந்துக் களுக்கும ஆசாரங்களை சீர்திருத்துவதில் ஸம் மதம் இல்லை. ப்ராமணர்கள் தங்கள் அநுஷ் டானங்களில் உள்ள தவறுதல்களை அறிந்து தேசகால நிலைமைக்குத் தக்கவாறு தங்களு டைய வழிகளை மாற்றிக்கொண்டு ஜன ஸமூ கத்தின் முன்னேற்றத்துக்கு ஸாதகமாயிருக் கவேண்டும. ப்ராமணர்கள் தங்கள் தேகம், மனம், ஆத்மா இவற்றிற்கு சுத்தம் ஏற்படும படி நடந்து கொள்ளவேண்டும். கொஞ்சகால த்துக்கு முன்னால் சென்னையில் ஸோஷல்டின் னர் என்று ஆசார திருத்த விருந்துகள் நடந் துவந்தன. அவைகளைப்போல இன்னம்நடந்து வரவேண்டும். தாழ்ந்த வகுப்பாருக்குக் கல்வி கற்பிக்கவேண்டும். அவர்கள் கௌரவமாய்க் காலம் கழிக்கும்படி செய்யவேண்டும். ஜனஸ

மூகம் கெட்டுப்போகாமல் இருக்கவேண்டு மானல் கோவில்களில் தேவதாஸிகள் இருக்கும் ஏற்பாட்டை முற்றிலும் நீக்கிவிடவேண்டும். பால்ய விவாகம் கூடாது. ருதுசாந்தியாகாத விதவைகள் மறுபடியும் கல்யாணம் செய்துகொள்ள இஷ்டப்பட்டால் அவர்களுக்கு அனுமதி கொடுக்கவேண்டும். பெண்களுக்கு ருதுவானபிறகு கல்யாணம் செய்வதை அனுஷ்டிக்கவேண்டும். என்று இவ்விதம் பேசித்தமது ப்ரஸங்கத்தை முடித்தார்.

ப்ரஸங்கம் முடிந்த பிறகு பல தீர்மானங்கள் செய்யப்பட்டன.

தேவையானஇடங்களில் ப்ரைமரி, ஸகெண்டரி பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து ஸ்த்ரீகளுக்குப் கல்வி கற்பித்து அவர்களுடைய நிலைமையை வ்ருத்தி செய்யவேண்டும் இந்த ராஜதானியில் பெண் கல்விக்காக அதிக க்ராண்டு கொடுக்கும்படி இந்தக் கான்பரென்ஸ் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளுகிறது.

குழந்தைவிவாகம் செய்வதை நிறுத்திவிடவேண்டும். பெண்களுக்குக் குறைந்தது 12-வது வயதிலும், பிள்ளைகளுக்கு 18-வது வயதிலும் கல்யாணம் செய்யவேண்டும். பெண்களுக்கு 15-வயதும், ஆண்களுக்கு 20-வயதும் வரும் வரையில் சாந்திசெய்வதை நிறுத்தி வைக்கவேண்டும். இந்து ஸமூகத்தின் அபிவ்ருத்தியில் நோக்கமுள்ள எவரும் இந்தத் தீர்மானத்தை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதாகவும், ருதுவானபின் விவாகம் செய்யும் வழக்கம் ந்யாயமானதென்றும் சாஸ்த்ரீகமானதென்றும் ஒப்புக்கொள்ளப்படுகிற வரையில் ஷை கல்யாண வயதை அதிகரித்துக்கொண்டே வருவதாகவும் தங்களுக்குள் நிச்சயம் செய்துகொள்ளவேண்டும்.

வரசுல்கம, கன்யாசுல்கம் இவை இரண்டும் ஜனஸமூகத்துக்குக் கெடுதலாகவிருப்பதோடு கல்யாணத்தின் மகிமையைக் குறைத்து வேறு தீமைகளையும் உண்டுபண்ணுகிறபடியால் பிள்ளைகளின் பெற்றோர்களும் கார்டியன்களும் பிள்ளைகளின் கல்யாணத்துக்குப் பணம் கேட்பதில்லை யென்று தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். முக்யமான 4 ஜாதிகளின் உள் பிரிவுகளில் ஒரு பிரிவிலிருந்து மற்றொரு பிரிவில் கல்யாணம் செய்வது கூடாதென்று சொல்வது சாஸ்த்ர ஸம்மதமல்ல. அப்படிக் கல்யாணம் செய்வதால் வரன் தேடுவது ஸுலபமாகிவிடுவதோடு வரதக்ஷிணை கொடுப்பதும் நின்றுவிடும்.

பால்யப்பருவத்தில் கல்யாணமாகி விதவையான பெண்களுக்கு புனர்விவாகம் செய்து வைக்கவேண்டியது ந்யாயமானது. ப்ரொபஸர் கார்வே ஸ்தாபித்திருக்கும் விதவாச்ரமத்தைப்போல் விதவாச்ரமங்கள் ஸ்தாபிக்க வேண்டும். விதவைகளை விகாரம் செய்வதாகிய கொடுமையான வழக்கத்தை நிறுத்திவிட வேண்டும்.

ஹிந்து மதத்தைவிட்டு வேறுமதத்துக்குச் சென்றவர்களில் திரும்பிவர இஷ்டப்படுகிறவர்களைமறுபடியும் மதத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும். தீண்டாதஜாதியார்களை உயர்ந்தநிலைமைக்குக் கொண்டுவரவேண்டும். ஸந்தேகமான நடத்தையுள்ள தேவதாஸிகள் கோவில் உத்ஸவங்களிலும் பூஜைகளிலும் வேலை செய்ய விடுவதினல் ஷை உத்ஸவங்கள் பூஜைகள் இவைகளின் மகிமை குறைந்து போகிறதால் அவர்கள் கோவில் வேலைசெய்ய விடாதபடி சட்டத்தாலோ அல்லது வேறுவிதமாகவோ தடுக்கவேண்டும். தாதாபாயின் வயது வராத பெண்களின் காப்புமசோதாபோல ஒரு சட்டம் செய்யவேண்டியது அவச்யம். கடல் யாத்ரை செய்தவர்கள் திரும்பிவந்தவுடன் தங்கள் தங்கள் ஜாதியனுஷ்டானங்களை யனுஷ்டித்து வந்தால் அவர்களை ஜாதிப்ரஷ்டம் செய்யாமல் தங்கள் ஜாதிக்குள்ளேயே வைத்துக்கொள்ளவேண்டும்.

# STORY AND BIOGRAPHY.
## கதையும் ஜீவ்ய சரித்ரமும்.

### TEACHINGS OF RANADE.
ரானடேயின் கொள்கைகள்.

சென்றமாஸம் மகாதேவ கோவிந்த ரானடேயின் ஜீவ்யசரித்ரத்தை எழுதியிருந்தோம். அவர் பலவிஷயங்களில் கொண்டிருந்த அபிப்ராயங்களையும் கொள்கைகளையும் பற்றி சுருக்கமாய் எழுதுகிறோம்.

இங்குமங்கும் சுற்றிச் சுழன்று கொண்டிருந்து யாதொரு நோக்கமும் இல்லாமல் உழைத்து யாதொரு கார்யத்திலும் ஸித்தியடையாமல் காலங்கழிக்கும் அநேகரைப் போல்,ரானடே யாதொரு நோக்கமும் இல்லாமல் உழைத்து வரவில்லை. அவருக்குத் தமது தேசத்தாரை இன்னம் நல்ல ஸ்திதிக்குக் கொண்டுவரவேண்டும் என்ற ஆவல் ரொம்ப இருந்தது.

ரானடே ஜனங்களுக்கு நன்மையுண்டுபண்ணும் எல்லாத்துறைகளிலும்பாடுபட்டுவந்தார். ஜனஸமூகமானது எல்லாவித முயற்சிகளும் கலந்ததாயிருக்கிறது என்பதை யவர் நன்றாய் அறிந்திருந்தார். ஒருவர் தமது வாழ்நாளை இனிமையாய் கழிப்பதோடுகூட மேன்மையாகக் கழிக்கவும் வேண்டும் என்பதை யவர் அறிந்திருந்தார்.

அவர் சொல்லுவதாவது, "நாம் செய்ய வேண்டிய வேலை பலவகைப்பட்டதாக இருக்கிறது. தேசநன்மைக்குற்ற ஒருவித வேலையில் உழைப்பதில் மற்றவைகளோடு கலக்காமலிருக்கமுடியாது. நமதுதேசத்தார் தேகபலம் குறைந்தவர்களா யிருக்கிறார்கள். அவர்களுடைய தேகபலத்தை வ்ருத்திசெய்ய முயல்வதில் பலவருஷங்கள் அல்லது நூற்றாண்டுகள் சென்றாலும் செல்லும். அநேக நூற்றாண்டுகளாக வாழ்நாளில் தப்பான நோக்கங்கள் இருந்ததனாலும், கெட்ட வழக்கங்களாலும், கெடுத லுண்டுபண்ணக்கூடிய ஏற்பாடுகளாலும் இப்படி தேகபலம் குறைந்துபோயிற்று. இதற்கு இடைவிடாத முயற்சியுடன் அந்தத் தீமைகளைத் தொலைக்க முயன்றால்தான் போனபலம் திரும்பி வருவது ஸாத்யமாகும். இதைத்தவிர இன்னம் நாம் செய்ய வேண்டிய மற்ற கடமைகள் கண்டிதமானவைகளா யிருக்கின்றன. நமது ஜனஸமூகத்தை சீர்திருத்த வேண்டும். மதஸம்பந்தமாய் நாம் ரொம்ப சீர்ப்படவேண்டும்.

"அடுத்தபடியாயுள்ளவை பொருளாதார ஸம்பந்தமாயும், கைத்தொழில் ஸம்பந்தமாயும் உள்ள முயற்சிகளே. நமது கைத்தொழில்கள், பூர்வகாலத்தில் மனிதன் விவஸாயம் தொடங்கும்போது எப்படி யிருந்தனவோ அப்படியே இருக்கின்றன. லக்ஷக் கணக்கான ஜனங்கள் வருஷம் முழுவதும் ஒன்றற்கொன்று ஸம்பந்தமில்லாத வேலைகளைச் செய்து எந்த விதமாவது வயிறு வளர்க்க ப்ரயத்தனப்படுகிறார்கள். வேலையாட்கள் வேலையில் தேர்ந்தவர்களாயில்லை. மூலதனம் ரொம்ப குறைவாயிருக்கிறது. அதுவும் யாதொரு ஒழுங்குடனும் கிடைப்பதாயில்லை. பொருளாதாரங்களை உபயோகப்படுத்துவது மில்லை அல்லது வ்ருத்தி செய்வது மில்லை.

"கடைசியாய் நாம் நமது ஜனங்கள் ராஜாங்க ஸம்பந்தமான விஷயங்களில் ரொம்ப ஸௌக்யமாக இருக்கவேண்டியதற்கு நாம் அக்கறை பாராட்ட வேண்டும்." என்று இப்படி அபிப்ராயப்படுகிறார்.

ஜனஸமூகத்துக்காக உழைக்கும் வேலைகளில் ஒவ்வொரு வேலைக்கும் மற்றவைகளுக்கும் நெருங்கின ஸம்பந்த மிருப்பதை ரானடே எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருந்தார். மேலும் சீர்திருத்தங்களைச் செய்

வதில் பழைய வழக்கங்களை அனுஸரித்தே நடக்கவேண்டும் என்பது அவர் அபிப்ராயம்.

அவர் செய்யவேண்டும் என்று சொன்ன சீர்திருத்தங்கள் எப்படிப்பட்டவையாக இருந்தாலும் ஸரி, அந்த சீர்திருத்தங்கள், ஜனங்களுடைய ஆசாரங்கள், பொருளாதார நிலைமை, ராஜரீக ஸம்பந்தமான விஷயங்கள், மத ஸம்பந்தமான விஷயங்கள் இவைகளில் எதில் சீர்திருத்தம் செய்யவேண்டியிருந்தாலும் ஸரி, வெகுகாலமானவைவும், கெடுதல்கள் இல்லாதவையுமான பழைய வழக்கங்களோடு ஸம்பந்தம் விடாமல் இருக்க வேண்டுமென்பதும் அவருடைய அபிப்ராயம்.

ஆசார சீர்திருத்த விஷயத்தில் அவர் பழைய காலத்தில் இருந்த மேலான நோக்கங்களை இப்பொழுது அனுஷ்டானத்துக்கு கொண்டுவரவேண்டு மென்று எண்ணியிருந்தார். பையன்களினுடையவும், பெண்களினுடையவும், கல்யாண வயஸை உயர்த்துதல், விதவா விவாகம் செய்தல், ஜாதி நிர்ப்பந்தங்களைத் தொலைத்து விடுதல், முதலிய திருத்தங்களைச் செய்யவேண்டு மென்று கூறி வந்தார்.

இந்தியா முன்னேற்ற மடைவதற்கு இந்தியாவின் பொருளாதார நிலைமையை ரொம்பவும் வ்ருத்தி செய்யவேண்டு மென்பது அவரது கொள்கை. இந்தியாவில் அநேக கைத்தொழில்கள் ஏற்பட்டு அவைகள் வ்ருத்தியடையவேண்டும்; ஜனங்களுடைய ஜீவனத் தொழில்கள் பலவகை பட்டதா யிருக்கவேண்டும்; ஜனங்களுடைய கைத்தொழில்கள் வர வர நசித்துக்கொண்டு வருவதால் அந்தக் கைத்தொழில்களை விட்டுவிட்டு விவஸாயத்துக்குப் போய் விடுவதைத் தடுத்துவிடவேண்டும்; ஊக்கமுள்ள இந்தியர்கள் அன்ய தேசங்களுக்குப் போய் பொருள் ஸம்பாதிப்பதை வ்ருத்தி செய்யவேண்டும்; ஸ்தல ஆட்சியை அபிவ்ருத்தி செய்யவேண்டும். இந்தியர்கள் எந்த விதத்திலும் த்ரவ்யம் முதலான ஸாதனங்கள் உள்ளவர்களாயும், திறமை யுள்ளவர்களாயும் இருக்கவேண்டும்; இவைகளே ரானடேயின் கொள்கைகளாகும்.

கைத்தொழில் விஷயமாய் கவர்ன்மெண்ட் என்ன செய்யவேண்டு மென்பதைப் பின்வருமாறு தெரிவித்திருக்கிறார்.

"நிலங்களும், சுரங்கங்களும், காடுகளும் ஸர்க்காருக்கு ஸொந்தமானவை. விளைபொருள்களின் பலனை கவர்ன்மெண்டார் தான் அதிகம் அனுபவிக்கிறார்கள். ரொம்ப மூலதன முள்ளதும், பெரிய கைத்தொழில் செய்வதும் கவர்ன்மெண்டுதான். காப்பு வரிகளைப் பற்றிய பேச்சு இங்கு வருவதற்கில்லை. இயற்கையான ஸாதனங்கள் அளவிறந்தவையாயிருக்கின்றன. பொருள்களுக்கிருக்கும் க்ராக்கியோ தினே தினே அதிகரித்துக்கொண்டு வருகிறது. ஒழுங்கு படுத்திய வேலை ஸாமர்த்தியமும், அதை ஸரியான துறைகளில் உபயோகப்படுத்துவதுந்தான் தற்காலம் தேசத்துக்கு ரொம்ப தேவையாயிருப்பவை. இவை இரண்டும் கவர்ன்மெண்டாரிடம் இருக்கின்றன. அல்லது அவர்களுக்குக் கிடைக்கக்கூடும். இப்படி கவர்ன்மெண்டுக்கு ஸாத்யமாயிருப்பதால் தேசத்தாருடைய தொழில் முயற்சிகளுக்கு உதவிசெய்து அவைகளை அபிவ்ருத்தி செய்வது அவர்களுடைய கடமையாகிறது. தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய மூலதனத்தைத் தொழில்களில் போடுவதால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கு வேண்டிய பத்ரம் கவர்ன்மெண்டார் செய்து கொடுக்கக் கூடுமானால் இந்த தேசத்தார் மூலதனத்தை உபயோகிக்க முன் வருவார்கள்."

மிஸ்டர் ரானடே பிறந்தபின் அவருக்கு ஒரு உருவச்சிலை எழுப்ப வேண்டு மென்று ஒரு முயற்சி ஏற்பட்டது. அது இப்பொழுது தான் கைகூடிற்று. இந்த ஞாபக சின்னத்துக்காக வஸூல் செய்யப்பட்ட தொகை ரூ. 20736-7-6 ஆகும். வட்டிக்கு விட்டதில் வந்த தொகை ரூ. 6675-4-4. இதில் 17000 ரூபாய் சிற்பிக்குக்கொடுக்கப் பட்டது. அவருடைய உருவச்சிலை ஏப்ரல் மாஸம் 9௳ யன்று திறந்து வைக்கப்பட்டது.

## SELECTIONS
## விசேஷத்திரட்டு.

### THE PRESERVATION OF CATTLE MANURE.

### தொழு எரு பரிபாலனம்.

தென் இந்தியாவிலுள்ள மண் தினுசுகளில் அனேகத்தில், தாதுப்பொருட்கள் அல்லது இந்திரவஸ்து என்று சொல்லப்பட்ட பூசாரம் குறைவாயிருக்கிறது. இம்மண் தினுசுகளின் வளம் குறையாமல் சரியானபடி வைத்திருக்க வேண்டுமானல் மற்ற வழக்கமாய் உபயோகிக்கும் தினுசு பூசாரத்துடன் அதாவது எருவகைகளுடன் இந்த இந்திரவஸ்து பூசாரத்தையும் அப்போதப்போது சேர்த்து உபயோகிக்கவேண்டும். கொஞ்சமாய் உபயோகப்படுத்தும் எரு தினுசுகளைப் போலல்லாமல், எப்போதும் ஜாஸ்தி அளவாய் உபயோகப்படுத்தும் இந்திரவஸ்து உடைய எருக்களென்று பிரிக்கப்பட்டிருக்கும் எரு தினுசுகளே அப்போதைக்கப்போது மற்ற எருக்களுடன் கூட்டிக்கொள்ள லாயக்கானவை. ஜாஸ்தி அளவாய் உபயோகப்படுத்தும் அனேக தினுசு எருக்களில் தொழு எருதான் முதன்மையானது. இத்தொழு எரு கிடைக்கச்கூடிய இடங்களிலெல்லாம் இதை உபயோகப்படுத்துவது அதி சிலாக்கியமென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

கால்நடைகளிலிருந்து அன்றாடம் சேரும் புது தொழு எருவை மக்காமலே உபயோகப்படுத்தலாம். ஆனல் நிலத்தில் பயிரேறியிருக்கும்போது இந்த எருவை உபயோகப்படுத்த சாத்தியப்படாது. தொழு எருவை ஒரு இடத்தில் கொஞ்சநாள்களுக்குச் சேர்த்துக் குவித்துவைத்துக் கொஞ்சம் மக்கியபின் உபயோகிப்பது நல்லது. தொழு எருவை இப்படிச்சேர்த்துக் குவித்து வைத்து மக்கச்செய்வதால் ஒரே தன்மையுள்ள எருச்சத்துக்கிடைப்பதுடன் சாணியிலிருக்கும் பயிருணவு பயிர்கள் சுலபமாய்ப் பிரித்து உட்கொள்ளும்படியான நிலைமையையும் அடைகிறது. அதிலுள்ள எருவைச் சேர்த்துக்குவித்து வைத்திருக்கும் காலத்தில் பயிருணவும் பொருள்களின் சேர்மானம் அனேகவித மாறுதல்கள் அடைகின்றன. இம்மாறுதல்கள் நுண்ணிய அணுக்கிருமிகள் முதலிய சிற்றுயிர்களாலும், தாவர வர்க்கத்தைச் சேர்ந்தமிக நுட்பமான கண்ணுக்குப் புலப்படாத பிராணிகளாலும் உண்டாகின்றன. இவைகளால் எருவிலுள்ள பயிருணவுப் பொருள்களின் சேர்மானம், மாறி சுலபமாய் பயிர்கள் அருந்தும்படியான ஸ்திதியை அடைகிறது. இப்படி மாறுதலடைந்த எருவின் குணம் பயிரிடுகிறவர்களுக்கு அதி சிரேஷ்டந்தானென்றாலும் அந்த எருவிலிருக்கும் சத்துப் பொருள்கள் ஏறக்குறைய நஷ்டமாய்ப் போகவும் இடமிருக்கிறது. ஆகையால் எருச் சேர்த்துக் குவித்து வைக்கும் வழக்கங்களில் எந்தமாதிரி செய்வதில் எருவிலிருக்கும் சத்துப்பொருள்களின் நஷ்டம் ஜாஸ்தியாகாமல் குறைவுபடுகிறதென்பதைக் கவனித்து அதைக் கையாடவேண்டும்.

தொழுஎருவைச் சேகரித்துக் குவித்து வைத்திருக்கும்போது அதில் நஷ்டங்கள் இரண்டு விதத்திலுண்டாகும். முதலாவது எருவின் தண்ணீர் மயமான சத்துப்பொருள்கள் கீழ்வடிந்து ஊறி நஷ்டமடைவதுடன் பயிர்கள் சுலபமாய் அருந்தக்கூடியபடி பக்குவப்பட்டிருக்கும் சத்துப்பொருள்கள் அதி சுலபமாய் தண்ணீரில் கரைவதால் மேல்சொன்ன எருத்தண்ணீர் வழியாய் கழிந்துபோகிறது. இரண்டாவது நைட்ரஜன் (Nitrogen) என்று சொல்லும் வெடியுப்புசத்து, வெகு சுலபமாய் ஆவியாய் மாறிப் பறந்துபோவது. ஆகையால் தொழு எரு சேர்த்துச் குவித்து வைக்கும் அனேக முறைகள் பழுதில்லாமலும் செட்டாகவுமிருக்கவேண்டுமென்றால், மேல்சொன்ன இரண்டு நஷ்டங்கள் உண்டாகாதபடியும், எருச்குவியல் அவிந்து மக்கவேண்டியதற்கு அவசியமான சாதனங்களை மட்டுக்கு மிஞ்சி தடைசெய்யாமலு மிருக்கும்படியான விதிகளைக் கவனிக்கவேண்டும்.

எருச்சேர்த்துக் குவித்துவைக்கும் அனேக வழிகளில் எவ்விதம் கையாடினாலும், கால்நடைகளின் மூத்திரம் கீழ்வடிந்து ஊறி நஷ்டமாகாதபடி செய்தல் மிகவும் முக்கியமானது. ஏனென்றால் அதிக ஜாஸ்தியான சத்துப் பொருள்கள் தொழு எருவின் மூத்திர பாகத்திலிருக்கிறது. உறிஞ்சி வைத்துக் கொள்ளக்கூடிய வஸ்துக்களை மாடுகள் நிற்கும் இடத்தில் போடுவதால் இந்தமூத்திரபாகத்திலிருக்கும் சத்தைக்கீழ் வடிந்து நஷ்டமடையாதபடி செய்து கொள்ளலாம். மாடுகள் கழிக்கும் தீவனப்பொருள்களாகிய கழித்த

வைக்கோல் தட்டை முதலியவைகளே இக்காரியத்திற்குச் சிலாக்கியமானதுந்தவிர சுலபமாய்க் கிடைக்கக் கூடியவை. இலை, தழை, சருகுக், குப்பை, கூளம் முதலியவைகளும் பயிர்களிலிருந்து வெட்டி அப்புறப்படுத்தெறியும் களைப்பூண்டுகளும் போடலாம். மேல் சொன்னவைகளிலொன்றும் கிடைக்காதபக்ஷத்தில் சாதாரண மண்பரப்பி வைத்தால் அது மூத்திரத்தை உறிஞ்சிக்கொண்டு வெளியில் வழிந்து போகாமல் பத்திரப்படுத்திக்கொள்ளும். தொழு எரு சேகரிக்கும் எல்லா விதங்களிலும் போதுமானபடி தழை, கழிவித்தட்டை, குப்பை முதலாகிய படுக்கைப் பொருள்களைப் போடுவது அவசியமென்று மேலே ரூபித்திருப்பதால், இனித் தொழுஎரு சேகரிக்கும் வெவ்வேறு முறைகளைப்பற்றி இதனடியில் சுருக்கமாய்ச் சொல்லலாம்.

தொழுஎரு சேகரிக்க அனுஷ்டித்துவரும் அனேக முறைகளையும் சாதாரணமாய் பின்சொல்லப்பட்ட 3 வகுப்புகளுக்குள் பிரிக்கலாம். அதாவது (1) பள்ளத்தொழுவங்களில் படுக்கை செத்தை போட்டு மாடு கட்டி எருச்சேர்த்தல். (2) தொழுவங்களில் மாடுகட்டி அவையிடும் சாணம் மூத்திரம் முதலாகியவைகளை வேறே இடத்தில் வெட்டியிருக்கும் குழிக்குள் அப்புறப்படுத்திச் சேகரித்தல். (3) மாடு கட்டியிருக்குமிடங்களிலிருந்து சாதாரணமாய் குடியானவர்கள் இப்போது ஒரிடத்தில் குவியலாகக் கொட்டி வைத்துச் சேகரிப்பதைப்போல் செய்தல்.* முதலாவதில் பள்ளத் தொழுவங்கள் அமைத்து அதன் கீழ் ஈரம் இறங்காதபடி செய்து அதில் ஒரு வரிசை கனமாய் படுக்கை செத்தைபோட்டு அதில் கால்நடைகளை விட்டு அவைகள் நாள்தோறும் கழியும் சாணம் முதலியவற்றை அங்கேயே சிதறி அவற்றின் மேல் கால்நடைகள் கழித்துவிடும் புல்தட்டு இலை முதலானவைகளைக் கொஞ்சம்கொஞ்சமாய் நாள்தோறும் வாரிப்போட்டு அதன்மேல் கால்நடைகளை மிதிக்கும் படிக்கும் படுக்கும் படிக்கும் செய்து வந்தால் அந்தச் சாணிகுப்பையுடன் நன்ருய் அழுந்துவதுடன் கால்நடைகள் கழியும் மூத்திரம் தட்டு முதலிய செத்தையால் உறிஞ்சிப் பத்திரப்படுத்தப்படுகிறது.

கொஞ்சக்காலத்தில் இந்தப் படுக்கைப் பூராவும் மாடுகளால் நன்ருய் மிதிபட்டுக் கெட்டிப்படுவதால் இதனுள் காற்றுநுழைய இடமில்லாமல், சாணம் குப்பை முதலானவைகள் சரியானபடி அவிந்து மட்கி அதன் சத்துக்கள் அப்புறம் போசாமல் பாதுகாக்கப் படுகிறது. இரண்டாவது சொல்லிய முறையில் மாடுகளைக் கெட்டியாயிருக்கும் தரை யுள்ள தொழுவங்களில் கட்டி அவையிட்ட சாணம் மூத்திரம் புல் முதலியவைகளைத் தொழுவத்திற்குப் பக்கத்தில் ஒரு குழி வெட்டி அதின் அடிப்பாகத்தையும் சுற்றுப்பக்கங்களையும் தண்ணீர் கசியாமல் பந்தோபஸ்து செய்து அக்குழியில் தினந்தோறும் போட்டுச் சேர்க்கப்படும். இக்குழியில் ஜாஸ்தி ஈரமிருந்தால் காய்ந்த மண் அப்போதைக்கப்போது சிதறி கலந்து மண் அந்த ஈரத்தை உறிஞ்சிக் கொள்ளும்படியாயும், கோடைகாலத்தில் எரு குப்பையில் சரியானபடி ஈரப்பதமிருக்கும்படியாய்த் தண்ணீர் ஊற்றி பக்குவம் செய்வதுமுண்டு. மூன்ருவது குறிப்பிட்ட முறையில் கால்நடைகளைக் கெட்டித்தரையுள்ள கொட்டங்களில் கட்டி அவைகள் போடும் சாணத்தையும் கழித்த புல் வைக்கோல் முதலியவைகளையும் சேகரித்து வெளியில் ஒரு போராய்ப்போட்டு எரு சேகரிப்பது. சில வேலைகளில் இந்தக் குவியலில் மண்ணும் சேர்ப்பதுண்டு.

இம்மூன்றுமாதிரி முறைகளும் பெல்லாரி சர்க்கார் பண்ணையில் அனேக வருஷங்களால் கையாடி பரீக்ஷை செய்யப்பட்டிருக்கிறது. அதிலிருந்து கிடைத்த சராசரி லாபத்தைத் தீர்மானமாய் எடுத்துக் கொள்ளலாம்.

பின்பக்கத்தில் காட்டிய அட்டவணையில் விவரித்துக் காட்டியிருக்கும் அம்சங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, ஒரே எண்ணிக்கையான கால்நடைகளிலிருந்து ஒரே விதமாயுள்ள சந்தர்ப்பங்களில் ஒரு குறித்த காலத்தில் கிடைத்த எரு முதலில் சொன்ன எருச்சேர்க்கும் முறையில் ஜாஸ்தியாய்கிடைத்திருப்பதுடன் அதில் எல்லாவித எருச்சத்துக்களும் ஜாஸ்தியாய் அமையப்பெற்றிருக்கிறது. ஆகவே அந்த எருவின் விலையும் மற்ற முறைகளிலிருந்து சேகரித்த எருவைவிட ஜாஸ்தியாயுமிருக்கிறது. இரண்டாவது சொன்ன முறையையும் மூன்ருவது சொன்ன முறையையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மூன்ருவது சொன்ன முறை சிலாக்கியமாயிருப்பதாகத்

* பால் கறக்கும் மாடுகளை இப்படிக் கட்டுவதால் பால் குறைந்து போகிறதாகத்தெரிகிறது.—ப. ர்.

| எருசேர்த்த விதம். | வருஷத்தில் ஒரு ஜதை மாட்டிலிருந்து கிடைத்த எருவின் நிறை இராத்தல். | நைட்ரஜன் (Nitrogen) என்று சொல்லும் வெடிஉப்பு வாய்வு நிறை இராத்தல். | பொட்டாஷ் (Potash) என்று சொல்லும் சாம்பல் காரம் இருந்த நிறை இராத்தல். | பாஸ்பாரிகாசிட் (Phosphortc acid) என்று சொல்லும் பிரகாசிதாமிலம் இருந்த நிறை இராத்தல். | இந்த எருவிலிருந்த உரச்சத்துக்களின் ஏக தேச விலை மதிப்பு ரூபாய். | இதிலிருந்த இந்திரவஸ்துவின் நிறை இராத்தல். |
|---|---|---|---|---|---|---|
| முறைகளில் | | | | | | |
| 1-ம் முறை | 10140 | 90·7 | 155·3 | 56·2 | 69.4 | 3020 |
| 2-ம் முறை | 9830 | 55·5 | 70·0 | 46·3 | 37·0 | 1765 |
| 3-ம் முறை | 6070 | 60·0 | 59·8 | 44·5 | 46·0 | 2168 |

தெரிகிறது. எருக்குவியலை மழையடியிலிருந்தும் காற்றின் கெடுதிகளினின்றும் பந்தோபஸ்து செய்த காரணத்தால்தான் இது இரண்டாவது முறையிலகப்பட்ட எருவைவிட சிலாக்கியப்பட்டது. இந்தப்பந்தோபஸ்துகள் செய்யாவிட்டால் மழை யடியினுல் எருவிலிருக்கும் கரையக்கூடிய சத்துப் பொருள்கள் மழைத்தண்ணீரில் கரைந்து கீழே இறங்கி ஊறிப் போவதுடன் காற்றின் கொடுமையால் சத்துக்கள் காய்ந்து அப்புறப்படுத்தப்படுமாகையால் இதிலிருந்து குடியானவர்களுக்கு நேரிடும் நஷ்டம் அதிகமாயிருக்கும். மேலும் எருக்குவியல் சூரிய வெப்பத்தினுலும் காற்றினுலும் ஈரமில்லாதபடி காய்ந்துபோனுல், அவியத்தொடங்கி அதனுல் அதில் உஷ்ண மதிகரித்து அந்த உஷ்ணத்தினுல் அந்த எரு சத்தின் சில பாகம் கெட்டுப்போகும்.

இரண்டாவது சொல்லியிருக்கும் முறையில் எருக்குழியில் செத்தை கழிவுதட்டை முதலாகிய சாமான்கள் கொஞ்சமாய் போடப்படுவதாலும், ஜலரூபமான எருசத்து கீழ்இறங்கி ஊறி நஷ்டமடைவதாலும் உண்டாகும் நஷ்டம் அதிகம். இக்கெடுதிகளைச் சாதாரணமாய் சரிப்படுத்திக்கொள்ளலாம். இந்த நஷ்டங்கள் சம்பவிக்காமல் ஜாக்கிரதை எடுத்துக்கொண்டால் இம்முறையில் சேர்க்கும் எரு 3-வது முறையில் சொல்லிய குடியானவர்கள் சேர்த்துக் கும்பலாய் வெளியில் கொட்டும் எருவைவிட அதிசிலாக்கியமாகவே யிருக்கும். எங்கெங்கே முதல சொன்ன முறைப்படி எருச்சேர்க்க சாத்தியப்படமாட்டாதோ அந்தந்த இடங்களில், காலதேசவர்த்தமானங்களுக்குத் தக்கபடி இரண்டாவது அல்லது மூன்ருவது சொல்லிய முறைகளில் எது அந்தந்த இடங்களுக்கு இலாயக்கென்று தெரியவருகிறதோ அந்த முறைப்படி சேகரிக்கவேண்டும். பின்சொன்ன இரண்டு முறைகளில் எது தரமென்று தெரிந்தெடுத்தல் அந்தந்த இடத்தின் சீதோஷ்ண பேதங்களையும் மற்றும் இதர சந்தர்ப்பங்களையும் பொருத்தது.

டப்ளியூ. எச். ஹாரிசன்,
விவசாய ரசாயன சாஸ்திரி.

---

## THE FOREST COMMITTEE'S REPORT.

### பாரஸ்ட் கமிட்டியின் ரிப்போர்ட்.

ஸர் மார்ரே ஹாமிக் ஆக்டிங் கவர்னராயிருந்தபோது அவரால் நியமிக்கப்பட்ட பாரஸ்ட் கமிட்டி கவர்ன்மெண்டுக்கு ரிபோர்ட் அனுப்பியிருக்கின்றது. இந்த ரிப்போர்ட் எல்லா மெம்பர்களாலும் ஏகோபித்துக் கையெழுத்துச் செய்து அனுப்பப்பட்டிருக்கிறது. காடுகளில் விவசாயக் கால்நடைகளைக் கூலி யில்லாமல் மேய்த்துக்கொள்ளவும், அதில் சம்பந்தப்பட்ட விஷயங்களாகிய விறகு வெட்டிக் கொள்ளவும், வயல்களுக்குத் தழைகள் உரமாகக் கிடைக்கச் செய்யவும், சொற்பமான மரங்கள் வெட்டிக் கொள்ளவும், கிராமவாசிகளுக்குச் சுதந்திரங் கொடுக்க என்ன உபாயங்கள் செய்யலா மென்று இந்தக்கமிட்டி நியமிக்கப்பட்டது. இந்தக் கமிட்டி செய்திருக்கும் சிபார்சுகள் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், கிராம விவசாயிகளுக்குக் காட்டிலாகாவால் நேரிடும் கஷ்டங்கள் சகலமும் நீங்கி அவர்கள் சுகமடைவார்களென நம்பவில்லை யென்று இந்தக் கமிட்டி முதலெடுப்பிலேயே சொல்லுகின்றது. கிராம வாசிகள் அனுபவிக்கும் சில விசேஷ

கஷ்டங்கள் மட்டும் ஒருவாறு நீங்குமே தவிர பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் மொத்தத்தில் ஜனங்களுடைய பிரியத்தைப் பெறுமென்று கமிட்டி நினைக்கவில்லை. தேசத்தின் மொத்த நன்மைக்காக எந்தக் காடுகளைப் பத்திரப்படுத்த வேண்டுமோ, எந்தக் காடுகளை ஜனங்கள் தாங்களாகவே நிர்வகிக்கச் சக்தியற்றவர்களோ அந்தக் காடுகளின்மீது கவர்ன்மெண்டின் மேல் விசாரணை தளர்ந்துபோகும்படி எந்த சிபார்சும் செய்யவில்லை. கமிட்டி விசாரணை நடத்தின விஷயங்கள் பன்னிரண்டில் மேய்ச்சலுக்காக கிராமத்தாரிடமிருந்து வரி வசூல் செய்வதைப்பற்றிய விசாரணை முக்கியம். கிராமத்து மாடுகள் மேயப்போகுங் காடுகள், குடிகள் வசிக்கும் இடத்துக்குச் சமீபத்திலிருந்து, மாடுகள் தப்பித்தவறி காட்டுக்குள் போய்விட்டால் அவர்கள், அபராதம் முதலிய தண்டனைகள் விதிக்கப்பட்டு காட்டிலாகா கீழ் உத்தியோகஸ்தர்களால் பலவித இமிசைகளுக்கு உள்ளாகிறார்கள். கிராமத்தை யடுத்த காடுகளில் கிராம மாடுகளோ, தூர ஸ்தலத்திலிருந்து வரும் மாடுகளோ, இவைகளுக்குள் வித்தியாசத்தை யறிந்து மேய்ச்சல் பெறும்படி கவர்ன்மெண்ட் நிர்வகித்தல் சாத்தியமல்ல. ஆனால் கிராமத்தார்கள் இந்த பேதத்தை யறிந்து கிராம மாடுகளை மட்டும் மேய்ச்சலுக்கு விடுவது சாத்தியமாகும். இப்படி கிராமத்தார் செய்வதில் அவர்களைத் தைரியப்படுத்தல் அவசியம். கிராம மாடுகள் மேய்ச்சலுக்கு விடப்படும்போது அவைகளுக்கு வரி வசூல் செய்யாம லிருப்பது கமிட்டிக்குச் சரியெனப்படவில்லை. இதற்காக கமிட்டி பின்வரும் பிரேரணைகள் செய்கின்றது.

(1) தேசத்தில் சீதோஷ்ண நிலைமைகளைக் காப்பதற்காகவும் தேசத்துக்குற்ற வேறு நன்மைகளுக்காகவும் கவர்ன்மெண்டார் வசத்திலிருக்க வேண்டிய காடுகளில் தூரஸ்தலங்களி லிருந்துவரும் மாடுகள் சில அளவுக்குட்பட்டு மேய்ச்சலுக்கு விடப்பட வேண்டும். (2) உயர்ந்த மரங்களும் விறகும் உற்பத்தியாகும் காடுகளில் இவ்வளவு மாடுகள் தான் விடப்படுமென்று டிபார்ட்மெண்டிலேயே நிச்சயிக்கவேண்டும். ஆனால் கிராமப் பஞ்சாயத்துகள் சில அளவுக்குள்பட்ட பெர்மிட்(Permit)கள் கொடுக்கும்படி சுதந்திரம் பெறவேண்டும். (3) முக்கியமாய்க் கடற்கரையோரமாயிருக்கும் சில கிராமங்களில் சவுக்கு மரங்கள் கவர்ன்மெண்டாரால் பயிர்செய்யப்படுவதை நிறுத்திவிடவேண்டும். (4) கிராமத்தையடுத்த காடுகளில் விலைபெற்ற மரங்கள் உண்டாயிருக்குமானால் அவைகளைக் கிராமத்தாரிடம் சில வரி வசூல்செய்து அவர்கள் வசம் ஒப்புவித்து விடவேண்டும். எல்லா மாடுகளையும் இந்தக் காடுகளில் மேய்த்தல் சாத்தியமில்லாவிட்டால், டிபார்ட்மெண்டாரே இத்தனை மாடுகள் மேயலாமென்று நிச்சயித்து அந்த மாடுகளைப்பொறுக்கியெடுக்குங் கடமையைக் கிராமத்தாரிடம் விட்டுவிட வேண்டும். (5) மேய்ச்சலுக்கு மட்டும் உபயோகப்படும் காடுகளில் இத்தனை மாடுகள்தான் மேயவேண்டுமென்று வரையறுத்தல் அவசியமல்ல. கிராமத்தார்களே அவசியமானால் இப்படி வரையறுத்துக் கொள்வார்கள். (6) எதுக்கும் பிரயோசன மில்லாமல் பூண்டுகள் முளைத்துக் கெட்டுப்போயிருக்குங் காடுகளைப் பற்றிக் கமிட்டியார் ஒரு சிபார்சும் செய்யவில்லை. அநேக காடுகளில் மேய்ச்சலுக்காகப் பெர்மிட்கள் கொடுக்கும் வழக்கத்தை நிறுத்திவிடலாம். எங்கே பெர்மிட்கள் அவசியமோ அவைகளைக் கிராமத்தாரே கொடுக்கலாம். சிறிய ரிஸர்வ் காடுகள் அங்கங்கே சிதறிக் கிடக்குமானால் அவைகளைக் கிராமப் பஞ்சாயத்துகளிடம் ஒப்புவித்துவிட வேண்டும். அவைகளுக்குப் பஞ்சாயத்துகள் சில ஸ்திரமான தொகையைக் கவர்ன்மெண்டுக்குக் கொடுக்கவேண்டும். காட்டிற் கிடைக்கும் விறகுகளைப் பைசல் செய்யும் கவர்ன்மெண்ட் முறையானது சரியென்று கமிட்டி அபிப்ராயப்படுகின்றது. காலக்கிரமத்தில் உற்பத்தியாகும் விறகுகள் அதிகப்பட்டு நன்மைசெய்யும். உரத்துக்காக விவசாயிகள் தழைகள் பெறுவதில் கவர்ன்மெண்டார் இப்போது அனுஷ்டிக்கும் முறையில் எவ்வித மாறுதலும் வேண்டியதில்லை. பச்சை எருக்கள் உற்பத்தி பண்ணி அவைகளின் விதைகளை விவசாயிகளுக்குக் கொடுப்பது பாரஸ்ட் டிபார்ட்மெண்டின் வேலையாயிராமல், ரெவினியூ உத்தியோகஸ்தர்களின் வேலையாயிருக்கவேண்டும். முடிவில் கமிட்டியானது அவர்கள் செய்யும் சிபார்சுகளைக் கவர்ன்மெண்ட் அனுஷ்டிக்கும் பட்சத்தில் அதிக நஷ்டமுண்டாகாதென்றும் நேரிடக்கூடிய சிறிது நஷ்டம் ஜனங்கள் அனுபவிக்கும் சௌகரியங்களால் ஈடு செய்யப்படுமென்றும் சொல்லுகின்றது.

இந்த மாகாணத்தில் கிராம வாசிகளுக்குப் பெரும்

இமிசை யுண்டு பண்ணி, அவர்களுக்குப் ப… அதிருப்தி கொடுத்திருக்கும் விஷயத்தைப்பற்… ட்டி விஸ்தாரமாய்த் திறமையுடன் வாதித்திருக்… றது. காட்டிலாகாவிலுள்ள சொற்பச் சம்பளம் வாங்கும் கீழ்ச் சிப்பந்திகள் லஞ்சம் வாங்குவதும் கிராமத்தார்கள் லஞ்சங் கொடுப்பதும் சாதாரணமா யிருக்கின்றது. அநேக குடிகள் 50, 60 மைல் யாத்திரை செய்து கமிட்டி கூடும் இடத்துக்கு வந்து தங்கள் குறைகளைச் சொல்லிக் கொண்டார்களென்றால், அவர்களுக்குள்ள குறைகள் உண்மை யென்றும், தீவிரமானவை யென்றும் நாம் சொல்ல வேண்டியதில்லை. இவர்கள் சொல்லிக்கொண்ட குறைகள் அநேகமாய் உண்மையென்றும், அவர்கள் மனம் நொந்து போயிருக்கிறார்களென்றும், கமிட்டி ஒரே மனதாய் ஒப்புக் கொள்கின்றது. பாரஸ்ட் இலாகாவில் கிராமத்தாருடன் பழகும் சில்லரை உத்தியோகஸ்தர்களால் ஜனங்களுக்குச் சகிக்கக்கூடாத தொந்தரவுகள் உண்டாகின்றன வென்பதில் சந்தேகமில்லை. பாரஸ்ட் கார்டுகளுக்கு 12-ரூபாய்க்கதிகம் சம்பளங் கொடுப்பதில்லை. அவர்களுக்கு ஒத்தாசையாக 6 ரூபாய் சம்பளம் பெறும் காவல்காரர் இருக்கிறார்கள். இவர்கள் மேற் பார்வை பார்க்கும் காடுகள் சுமார் 16 மைல் சுற்றளவு உள்ளனவாயிருக்கின்றன. இவர்கள் லஞ்சம் வாங்கிக் குடிகளை இமிசிக்கிறார்களென்று சாட்சிகள் அனைவரும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்த ரல்லாதவர்களும் சொல்லி யிருக்கிறார்கள். ஆகையால் கிராமங்களை யடுத்தும் மத்தியிலும் உள்ள காடுகளைக் கிராமத்தார் நிர்ணயிக்கும்படியான பொறுப்புக் கொடுத்து அவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் காக்க முன்வரும்படி செய்யவேண்டும். ஆகையால் சாத்தியமான இடங்களிலெல்லாம் மாடுகள் வைத்திருப்பவர்களிற் சிலரை பஞ்சாயத்துகளாகச் சேர்த்து, இந்த பஞ்சாயத்துகள் வசம் கிராமத்தை யடுத்துள்ள காடுகளின் நிர்வாகம் ஒப்புவிக்கப்பட வேண்டும். இவைகளில் இத்தனை மாடுகள்தான் மேய்க்க வேண்டுமென்று வரையறை இருக்கவேண்டும். நல்ல மரங்களும் விறகும் உற்பத்தியாகும் காடுகளை இப்படி ஒப்புவிக்கக்கூடாது. இப்படி மாடுகள் மேய்க்கப்படும்போது அவைகளுக்குச் சில வரிகள் வாங்கப்படவேண்டும். அப்போதுதான் பஞ்சாயத்துகளுக்குக் காடுகளை சம்ரக்ஷிப்பதில் பொறுப்புண்டாகும். இம்மாதிரி …ல அனுஷ்டிக்கப்பட்டு …கின்றது. பஞ்சாயத்து …ப்படி நியமித்து அவர் … நிர்வகிக்கத் தவறிப் போனா… தை அவர்களிட மிருந்து பிடுங்கிவிடலா… த்து மெம்பர்கள் சில காலத்துக்குத்த…ன …மிக்கப்படவேண்டும். பஞ்சாயத்துகள் இந்தக் காடுகளைச் சரியாக நிர்வாகிக்காமலே இருக்கும் பட்சத்தில் அந்தக் காடுகள், மறுபடியும் பாரஸ்ட் இலாகாவசம் ஒப்புவிக்கப்பட்டுப்போமென்று ஏற்பாடு செய்தால் அவர்களுக்குப் பொறுப்பும் அச்சமும் நேரிட்டு காடுகளைச் சரியாய் நிர்வகிக்க ஏதுவாகும்.

---

## ORGANIZATION OF VILLAGE LIFE.

### க்ராம வாழ்க்கை.

திருச்சினாப்பள்ளியில் நடந்த சென்னை மாகாணக் கான்பரென்ஸின் அக்ராஸனாதிபதியாகிய ஆனரபில் மிஸ்டர் எம். ராமச்சந்த்ரராவ் தம்முடைய ஆரம்பப் ப்ரஸங்கத்தில் க்ராம வாழ்வைப் பற்றிச் சொன்னதை நமது நேயர்கள் பலரும் நன்றாய் அறியவேண்டியது அவச்யமாகையால் அதன் மொழிபெயர்ப்பை சுதேசமித்திரனிலிருந்து எடுத்துத் தருகிறோம்.

தேச நிர்வாகத்தில் முக்கியமாகச் செய்யவேண்டிய திருத்தம் கிராம வாழ்வைச் சரியான அஸ்திவாரத்தின்மேல் அமைக்கவேண்டியதே. கிராமப் பொருளாதாரச் சம்பந்தமான விஷயங்களில் பலகவர்ன்மெண்ட் இலாகாக்கள் பிரவேசித்து மேல் விசாரணை செய்வதால், கிராமத்தார்களின் சுயேச்சை முற்றிலும் ஒழிந்துபோய்விட்டது. கிராமத்தார்கள் ஒவ்வொருவரிடத்திலும் கவர்ன்மெண்டின் கீழ்த்தரஉத்தியோகஸ்தர்கள் தனித் தனியாக நடவடிக்கை நடத்துவதால், கிராமப்பொது வாழ்வென்பதே இல்லாமற் போய்விட்டது. படிப்பினாலும் இப்பொழுது ஜனங்களுக்கு உண்டாயிருக்கிற ஊக்கத்தினாலும் அவனவன் தன் தன்னுடைய பாத்யங்களுக்கே சண்டை போடுகிறான். இவ்விஷயத்தைச்சில வருஷங்களுக்கு முன் அதிகாரப் பிரிவினைக் கமிஷன் நன்றாய்ப் பரிசீலனை செய்து பார்த்ததில், அதிகாரப் பிரிவினை செய்வதற்காகவும், ஸ்தல சுய ஆட்சியில் ஜனங்களைச் சம்பந்தப்படுத்துவதற்காகவும், கிராமப் பஞ்சாயத்தை ஏற்படுத்தி அதை

விருத்தி செய்து அ... களை நிர்வாகம் செய்ய... செய்யப்பட்டது கீழ்த்... இப்பொழுது இருக்கும் ப... அவற்றை கிராமப் பஞ்... க வேண்டிய விஷயம் மிக அ... வேண்டியதாயிருந்தும், அவ்விஷய... அந்த மாகாணக் கவர்ன்மெண்ட் விசேஷக் கவலை வைக்கக்காணோம். கிராம ஜனங்களுடன் அன்றன்று சம்பந்தப்படுவது ரெவினியூ இலாக்காதான். தரிசு நிலத்தை உபயோகத்துக்குக் கொண்டு வருதல், சர்க்கார் நிலத்தில் அனுமதியின்றி பிரவேசித்தல், குடியிருப்புக்கேற்ற காலி மனைகளை விநியோகம்செய்தல், பட்டா நிலங்களை விட்டுவிடுதல், பட்டா நிலங்களை ஸப்டிவிஷன் செய்தல் முதலிய பலவிஷயங்களில் கிராம உத்தியோகஸ்தர்களும் ரெவினியூ இன்ஸ்பெக்டர்களுமே கிராமத்தாரின் வேண்டுகோள்களைக் கவர்ண்மெண்டுக்கு அறிவிக்கும் ஹோதாக்களாக இருக்கிறார்கள். அவர்களே அனுஷ்டானத்தில் ஸர்வாதிகாரிகளாகவும் இருக்கிறார்கள்.

தாசில்தாரின் தீர்மானத்தின்மேல் அப்பீல்கள் செய்யப்படலாம்; ஆயினும் கிராம ஜனங்களின் பொதுவான அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அப்பீலை முடிவு செய்ய ஒருவித ஏற்பாடுமில்லை. கிராமப் பஞ்சாயத்து வேண்டுமென்று நாம் கேட்பதைச் சிலர் சரியாக அறியவில்லை. சென்ற மாதத்தில் நடந்த சட்டசபை மீட்டிங்கில் பட்ஜட்பிரஸ்தாபம் நடந்தபோது, அநேக நூற்றாண்டுகளிருந்து பிறகு இல்லாமற் போய்விட்ட கிராமப் பஞ்சாயத்தை மறுபடி உண்டுபண்ணுவதென்றால், இறந்தவனைப் பிழைக்கச் செய்வதாகும் என்று ஆனரபில் ஸர் ஜான் அட்கின்ஸன் சொன்னார். பெரியோர் சொற்படி நடப்பது என்ற பழைய பஞ்சாயத்து ஏற்பாட்டை உண்டு பண்ணும்படி நாமும் கேட்கவில்லை. கிராமத்திலுள்ள ஜனங்களின் பிரதிநிதிச் சபையாக ஒரு ஸ்தாபனம் உண்டுபண்ணப்பட வேண்டுமென்றே நாம் கேட்பது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இப்பொழுது செய்யும் சில வேலைகளை அந்த ஸ்தாபனம் செய்ய வேண்டுமென்று கேட்கிறோம். இவ்விதப் பஞ்சாயத்தே இக்கால நிலைமைகளுக்குப்பொருந்தியது. பஞ்சாயத்துச் சபையால் நன்மை விளையவேண்டுமானால்,

...திச் சபையாகத்தான் இருக்க வேண் ...ரப் பிரிவினைக் கமிஷன் இவ்விஷயமாக ...ரமாக விசாரணைசெய்து, கிராமத்திலுண்டாகும் அற்ப ஸிவில், கிரிமினல் விவகாரங்களைப் பஞ்சாயத்துச்சபை பைசல் செய்யவேண்டுமென்றும், கிணறிறக்கல், குளம் கெட்டல் முதலிய சிறிய மராமத்து வேலைகளைப் புதிதாகச் செய்யவும் பழுது பார்க்கவும் பஞ்சாயத்துக்கு அதிகார மிருக்க வேண்டுமென்றும், சாலைகளையும் சாவடிகளையும் சந்தைகளையும் கால்நடை பவுண்டுகளையும் அந்தசபை நிர்வாகம்செய்யவேண்டுமென்றும் அந்தக் கமிஷன் சிபார்சு செய்தது. கிராம சுகாதாரம், கிராம ஐக்கிய நாணயம்,வியவகார விருத்தி, கிராமக்கல்வி முதலிய விஷயங்களைப்பற்றிச் சமீப வருஷங்களில் செய்யப்படும் பிரேரணைகளைக் கொண்டு முன் சொன்னது போன்ற பஞ்சாயத்தென்ற கிராம நிர்வாக சபை எவ்வளவு அவசியமென்று விளங்கும். அற்ப ஸிவில் வியவகாரங்களைத் தீர்ப்பதற்காகப் பஞ்சாப் மாகாணத்தில் பஞ்சாயத்தை உண்டு பண்ண, அந்த மாகாணக் கவர்ன்மெண்ட் 1911-ம் வருஷத்திலேயே சட்டஞ் செய்துவிட்டது. அவ்விதச் சட்டம் செய்வதைப்பற்றி வெங்காளத்தில்ஆலோசனை செய்யப்பட்டுவருகிறது. 1911ம் வருஷத்தில் மைசூரில் குளப் பஞ்சாயத்துச் சட்டம் என்று ஏற்படுத்தப்பட்டது மிகவும் ஆழ்ந்த யோசனையுடன் செய்யப்பட்டதாயிருக்கிறது. ஒரு கிராமத்தில் 20 ரூபாய் நன்செய்தீர்வையோ அல்லது 10 ரூபாய் புன்செய்த்தீர்வையோ செலுத்துகிறவர்கள் சேர்ந்து சில பிரதிநிதிகளைப் பொறுக்கி ஒரு சபையை அமைக்கவேண்டும். அந்தப் பஞ்சாயத்தின் அதிகாரத்துக்குள் இருக்கும் குளத்தின் ஜலத்தை நன்செய் சாகுபடிக்கும் பன்செய் சாகுபடிக்கும் பிரித்துக்கொடுக்கும் அதிகாரம் அந்தச் சபைக்கு இருக்கிறது. நன்செய் நிலத்துக்கு நீர் சப்ளை செய்ய முடியாமற்போனால், தீர்வை வஜாசெய்யப்படுகிறது. ஜலத்தைப் பங்கிட்டுக் கொடுப்பதற்காகவும், ஜலாதார மராமத்து வேலைகளைச் செய்யவும் அந்தச் சபைக்கு ஸர்வாதிகாரம் இருக்கிறது. கிராம வாழ்வைப்பற்றி ஸிலோன் கவர்ன்மெண்டார் செய்திருக்கும் ஏற்பாடு இன்னும் விசேஷமாக இருக்கிறது. இந்த மாகாணத்தில் கோர்ட்டுகளுக்கு இருக்கும் பல அதிகாரங்கள் ஸிலோனில் கிராமச் சபைகளுக்கும் கிரா

மக்கோர்ட்டுகளுக்கும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. கிரமமான கோர்ட்டுகளால் இங்கு விசாரிக்கப்படும் அற்பக்கிரிமினல் கேஸ்கள் அந்த தேசத்தில் கிராமக் கோர்ட்டார் பைஸல் செய்யப்படுவதுடன், நீர்ப்பாய்ச்சல், விவசாயம் செய்தல் முதலிய விஷயங்களில் சர்க்கார் விதிகளுக்கு மீறி நடக்கும்குற்றங்களும் அந்தக் கிராமகோர்ட்டினாலேயே பைஸல் செய்யப்படுகின்றன. ஜனசமூகத்தின் நன்மைக்கான பலவிஷயங்களிலும் விதிகளைச் செய்ய கிராமச்சபைக்கு அதிகாரமிருக்கிறது. கால்கடைகளின் மேய்ச்சல் முதலிய பொதுக்காரியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் தரிசுகளைப் பாதுகாத்தல்,கால்நடைகளை விருத்தி செய்தல், கால்நடை வியாதியைத்தடுத்தல், அசங்கியங்களைத் தடுத்தல், எவ்வித சாராயத்தையும் ஸ்திரீகளுக்கு விற்பது குற்றமென்று விதித்தல், கிராம ரஸ்தாக்களையும் கிராமப் பள்ளிக்கூடங்களையும் கிராம கோர்ட்டுகளையும் நல்ல நிலைமையில் வைத்திருத்தல், முதலிய பலவித நிர்வாக வேலைகள் விலோனில் கிராமச் சபைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் கிராமப் பஞ்சாயத்தை உண்டுபண்ணுவதற்காகச் சட்டம் செய்யவேண்டிய அவசியத்தை நாம் கவர்ன்மெண்டுக்கு வற்புறுத்த வேண்டியது. ஒற்றுமையான பொதுவாழ்வு கிராமத்தில் இல்லை என்று கவர்ன்மெண்டார் சொல்வது சரியல்ல. காட்டிலாகாக் கமிட்டி விசாரணையில் மேல்கண்ட விஷயம் வெளியாயிற்று. வெகு நாளாக உள்ள கிராம வழக்கங்களை மீறி நடப்பதற்காகக் கிராமப் பஞ்சாயத்தார் விதிக்கும் அபராதத்தை ஜனங்கள் இன்னும் கொடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்று காட்டிலாகாக் கமிட்டி விசாரணையில் தெரிந்த காரணத்தால்தான், பொறுப்புள்ள ஸ்தானங்களை வகிக்கும் 3-கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள் காட்டு விசாரணைக்காகப் பஞ்சாயத்துகளை வைக்கவேண்டுமென்று சிபார்சு செய்தார்கள். ஆகையால் வாதம் செய்து காலத்தைச்செலவிடாமல் கிராமப் பஞ்சாயத்தை உண்டுபண்ணச் சட்டம் செய்ய வேண்டியது அவசியம்,''

## MADURA-RAMNAD CO-OPERATIVE CONFERENCE.

## மதுரை இராமநாதபுரம் ஜில்லா கோ ஆபரேடிவ் கான்பரன்ஸ்.

சென்ற மார்ச்சுமீ 22, 23ந் தேதிகளில் மதுரை காலேஜ் ஹாலில் நடைபெற்ற மேற்கண்ட கான்பரென்ஸில் அடியில்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:—

(1) விவசாயத் தொழிலே, கூட்டுறவின் மூலமாய் விருத்திசெய்ய வேண்டியதற்கு மதுரை இராமநாதபுரம் ஜில்லாக்களில் உதவியும்ஆலோசனையும்வேண்டியிருக்கிறபடியால் மதுரையை தலைமை ஸ்தானமாகக் கொண்ட ஜில்லா கோ ஆபரேடிவ் சங்க மொன்று கீழ்க்கண்ட கருத்துகளுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று இந்தக் கான்பரன்ஸ் தீர்மானிக்கிறது (1) மதுரை இராமனுதபுரம் ஜில்லாக்கள் முழுவதிலும் விவசாய ஐக்கியச் சங்கங்களை ஸ்தாபித்து. (2)சங்கத்தைச்சேர்ந்த மெம்பர்களுக்காகவும் உப சங்களுக்காகவும் விவசாயத்திற்கு உபயோகப்படக் கூடியவைகளை வாங்கி வைப்பது, (3) விளையும் பொருள்களைச் சரியான விலைக்கு விற்பதற்குத் தகுந்த இடத்தைத் தேடுவது. (4) நல்ல எருதுகளை வாங்கி வைத்து மெம்பர்களிடம் வாடகைக்கோ அல்லது விலைக்கோ கொடுத்துதவுவது (5) விவசாய சம்பந்தமான விஷயங்களை சேகரித்து வைத்தல் (6) இரண்டு ஜில்லாக்களிலும் பலவேறுபட்ட ஸ்தலங்களில் விவசாயப் பொருட்காட்சிகளும் கான்பரன்ஸ்களும் நடத்த ஏற்பாடு செய்வது(7)விவசாய சம்பந்தமான நூதன விஷயங்களைத் துண்டுப்பத்திரிகைகள் மூலமாயும், ஊரூராய்ச் சுற்றிப் பிரசங்கஞ்செய்தும் சகல ஜனங்களுக்கும் தெரிவிப்பது (8) கைத்தொழில் சம்பந்தமாயும் விவசாய சம்பந்தமாயுமுள்ள பல விஷயங்களையும் விவசாய இலாகாவுக்கு எடுத்துரைப்பது (9) விவசாய விருத்தியடைந்து க்ஷேம மடைவதற் குரித்தான வைகளெனத் தோன்றும் விஷயங்களைக்கையாடுவது.

(2) மேற்கண்ட முதல் தீர்மானத்தில் கண்ட விஷயங்களை நிறைவேற்றுவதற்காக இருபதுபேரடங்கிய கமிட்டி யொன்று ஏற்படுத்தவேண்டும்.

(3) விவசாய சம்பந்தமான கல்வியைச் சிறுவர்களுக்குப் போதிப்பதற்கான பள்ளிக்கூடங்கள் ஏற்படு

த்தப்பட வேண்டும். அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் வந்து சேருமாறு பிள்ளைகளுக்குத் தகுந்த உதவி செய்யவேண்டும். இத்தகைய பள்ளிக்கூடங்களில் நியமிக்கப்படும் உபாத்தியாயர், விவசாயத் தொழில்தெரிந்தவர்களா யிருப்பது அவசியமானதால் அவர்களைப் பரீக்ஷார்த்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்ணைகளில் பழகும்படி செய்யவேண்டும்.

(4) கிராமாந்தரங்களில் சுகாதார நிலைமையைக்குறித்து கோவாபரேடிவ் சங்கங்கள் கவனிக்கவேண்டும். சுகாதாரத்தை விருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளை கிராமப் பஞ்சாயத்தாரைக் கொண்டு தயார் செய்வித்து அப்பேர்பட்ட ஏற்பாடுகளுக்கு லோக்கல் போர்ட்டுகளைத் தகுந்த பணஉதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளவும் வேண்டும்.

(5) கீழ்கண்டவிதமான சங்கங்கள் பொருத்தமான இடங்களில் ஸ்தாபிக்கப்பட்ட வேண்டும்.(1) கோ-ஆபரேடிவ் (கூட்டுறவு)அரிசி இயந்திரசாலை (2) கோ ஆபரேடிவ் எருத் தொழிற்சாலை (3) கோ ஆபரேடிவ் பருத்தி தொழிற்சாலை(4) கோ ஆபரேடிவ் எண்ணெய் இயந்திரசாலை (5) கோ ஆபரேட்டிவ் பால் வெண்ணை தயாரிக்கும் தொழிற்சாலை (6) கோ ஆபரேட்டிவ் தான்யபாங்கி (7) கோ ஆபரேட்டிவ் மிருக இன்ஷியூரன்ஸ் ஸொஸைட்டி.

(6) நெருக்கமாகக் குடியிருந்து வரும் ஜனங்களுக்கு சௌகரியத்தை யுண்டுபண்ணுவதற்காக அவர்களுக்கு வாசஸ்தல சௌகரியங்கள் செய்து கொடுக்கும் கோ-ஆபரேடிவ் சங்கங்கள் ஏற்படுத்தப் படவேண்டும். அப்பேர்ப்பட்ட சங்கமொன்று மதுரையில் ஏற்படுத்தப்படவேண்டும்.

(7) கோ-ஆபரேஷன் சம்பந்தமாயும் விவசாய சம்பந்தமாயுமுள்ள புஸ்தகங்கள், மாதாந்த பத்திரிகைகள் கணக்குவிபரங்களடங்கிய ரிப்போர்ட்டுகள் முதலிடன அடங்கிய புத்தகசாலை ஸ்தாபிக்கப்படவேண்டும். அந்தப் புத்தகசாலைக்கு சகல கவர்ன்மெண்ட் பிரசுரங்களையும், அது நிலைபெற்று நடைபெறுமாறு பொருளுதவியையும் செய்யும்படி கவர்ன் மெண்டைக் கேட்டுக் கொள்ளவேண்டும்.

(8) கோர்ட்-ஆப்-வார்ட்ஸ்களி னுடையவும் மத சம்பந்தமானதும்தர்மஸ்தாபனங்களைச்சேர்ந்ததுமான நிதிகளை சட்டப்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்ட கோ ஆபரேடிவ் பாங்கிகளில் டிபாஸிட் செய்யும்படி அதற்குடையவர்கள் கேட்டுக்கொள்ளப்படவேண்டும்.

(9) விவசாய சம்பந்தமான விஷயங்களைப்பற்றி கிராமாந்தரங்களிலுள்ள கோ-ஆபரேடிவ் சொஸைடிகளுக்கு ஆலோசனை சொல்வதற்காக விவஸாயஇன்ஸ்பெக்டர் ஒருவரை நியமிக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளவேண்டும்.

(10) கோ-ஆபரெடிவ் சங்கங்களில் ஜனங்களுக்கு அதிக உணர்ச்சி யுண்டாவதன்பொருட்டும்மெம்பர்கள் சிறிது சிறிதாகச் செலவழிக்கும் தொகையையும் மிகுத்து அதனால் அவர்கள் பலனடையும் பொருட்டும், சிறு தொகையையுங்கூட கோ-ஆபரேடிவ் சங்கங்கள் பெற்று ஜனங்களுக்குள் கூட்டுறவு ஊக்கத்தை விருத்திபண்ணவேண்டும்.

(11) பல இடங்களிலும் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகள் ஒன்றோடொன்று வியாபாரம் நடத்திக்கொள்ளவேண்டும்.

(12) கோ ஆபரெடிவ் சங்கங்கள், அவைகளைச் சேர்ந்த மெம்பர்களைக் கடன்களினின்று மீட்பதையே நோக்கமாககொண்டிருக்கவேண்டும். இதன் முடிவாக ஒவ்வொரு கோ ஆபரெடிவ் சங்கமும் அதைச் சேர்ந்த மெம்பர்களில் எத்தனை பேர் அவ்வாறு உதவி பெற்றார்களென்றும், வருஷத்திற்கு வருஷம் அத்தகைய மெம்பர்களின் தொகை எவ்வளவு தூரம் குறைதிருக்கிறதென்பதையும் காட்டக்கூடிய கணக்குகள்வருஷவாரி தயாரிக்கவேண்டும்.

(13) கூட்டுறவு விவசாயம் பலப்படக் கூடிய விதமாக எல்லா கிராமாந்தரச் சங்கங்களும் உபச்சட்டங்கள் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

(14) கிராமாந்தரவாசிகள் கையாடிவரும் கைத்தொழில்கள் அபிவிருத்தி யடைய வேண்டுவதற்காக, ஸென்ட்ரல் கோ ஆபரேடிவ் சொஸைட்டியார், அந்தக் கைத்தொழிலாளிகளுக்கு வேண்டிய விலை பொருள்களைத் தயாரித்து கொடுக்கவேண்டும்.

(15) கோ-ஆபரெடிவ் சங்க ரிஜிஸ்டிரார், அவரது ரிப்போர்டில் சொஸைட்டிகளின் பஞ்சாயத்தார்களின் கவனக் குறைவால் நேரிடும் குற்றங்களைக் குறிப்பிட்டிருப்பதைக் கவனித்து, சங்கங்களில் அதிகமாக ரொக்க இருப்பு வைத்திருத்தல், பஞ்சாயத்தார்களுக்குள் கடன் கொடுத்தால் ரசீது கொடுக்க மறுத்துவிடுதல், நபர் ஜாமீன் நிலுவைநிற்கும் தொகைகளை வசூ

விக்காதிருத்தல், கடனிருக்கும்போதே கடன் கொடுத்தல், ஒருவன் தனியாகவே ஸொஸைட்டி ஸ்தாபித்து நடத்துதல் முதலியவைகளை நீக்கி, குற்றங்களை விலக்கிக்கொள்ள வேண்டும்.

(16) மதுரை இராமனாதபுரம் ஜில்லாக்களிலுள்ள விவசாயிகள் பாலூரில் அதிகாரிகளின் பார்வையில் நடத்தப்பட்டு வரும் விவசாயப்பண்ணையைப் பார்த்து வரும்படி செய்வது சஷ்டசாத்தியமா யிருக்கிறபடியால், மேற்சண்ட ஜில்லாக்களில் எந்த பாகத்திலாவது அதுபோன்ற ஒரு பண்ணையை, பரீக்ஷார்த் ஏற்படுத்தவேண்டும்.

(17) சென்னை மாகாணக் கான்பரன்ஸின் முதலாவது கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டபடி மாகாண கோஆபரேடிவ் யூனியன் ஒன்று ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பது அவசியமென்பதை இந்தக் கான்பரென்ஸ் உறுதிப்படுத்துவதோடு, அந்த யூனியன் சங்கத்தைச் சீக்கிரத்தில் ரிஜிஸ்டர் செய்யும்படிக்கு ரிஜிஸ்ட்ராரைக் கேட்டுக்கொள்கின்றது.

## REVIEW OF THE PRESS.
## பத்ரிகை ஆராய்ச்சி.

**Vegetable *versus* Meat Diet.**

**காய்கறி உணவும், மாம்ஸ உணவும்:**—"வித்யாபானு" பத்ரிகையில் மிஸ்டர் எம். ஆர். கந்தஸாமிக் கவிராயர் மனிதர்க்குநல்லுணவு மாமிசமா? காய்கறியா? என்று ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

அவர், பல்லாயிரம் வருஷங்களுக்கு முன்னாலேயே ஹிந்துக்கள் இவ்விஷயத்தை ஆராய்ச்சி செய்து மனிதர்க்குக் காய்கறியே நல்ல ஆகாரம் என்று கண்டறிந்திருப்பதாகவும், மற்ற தேசத்தவர்கள் இந்த வழக்கத்தை ஹிந்துக்களிட மிருந்தே கண்டறிந்தார்கள் என்றும், தற்காலம் மேல்நாட்டில் அநேகர் மாம்ஸத்தை நீக்குவதற்கான ஸபைகள் ஏற்படுத்தி யிருக்கிறார்கள் என்றும், இப்படியிருக்க ஹிந்துக்களில் பெரும்பாலார் மாம்ஸம் சாப்பிடுகிறவர்களாயும், இதுவரையில் மாம்ஸம் சாப்பிடாமலிருக்கும் உயர்ந்த வகுப்பாரில் சிலரும் தற்காலத்து நாகரீகம் பேசி புதிய வழக்கமாக மாம்ஸம் சாப்பிடுபவர்களாயும் இருக்கிறார்கள் என்றும், இது மிகவும் பரிதாபமான நிலைமை யென்றும் சொல்லுகிறார். மாம்ஸ உணவின் தீமையைப்பற்றி எழுதுகிறார்.

"மாமிசவுணவு அஜீர்ணம், குன்மம், கீல்வாய்வு, க்ஷயம் முதலிய அநேக வியாதிகட்குக் காரணமானதென்றும், உண்பதற்காகவே கொழுக்க வளர்க்கப்பட்ட ஆடு கோழி முதலியவை முறைதப்பிய வுணவு கொடுக்கப்படுவதால் ஏதேனும் ஒருவித நோய்க்கு வித்தாகவே வளர்கின்றன வென்றும், இவற்றின் மாமிசங்களின் மூலம் சில விஷக்கிருமிகள் மனித சரீரத்துட் புகுந்து பலவித கெடுதிகளைச் செய்கின்றன வென்றும் சாஸ்திர நிபுணர்கள் காரணங்காட்டி விரித்தெழுதியுள்ளார்கள். மாமிசவுணவு உடம்பில் ரத்த மிகுந்து சூடு அதிகப்பட்டு ரத்தாசயத்தின் தொழில் அளவுக்கு மிஞ்சி நரம்புத்தளர்ச்சி அதிகரித்து உயிர்வலிமை குன்றி அவதிப்படுதற்கே ஏதுவாகின்றது. உடற்கூறு அறிந்த சாஸ்திரிகள் மனிதனுடைய பற்கள், இரைப்பை, ஆகாரக்குழல் இவைகளின் அமைப்பையும், ஜீர்ணிக்கும் தன்மையையும் உற்றுநோக்கிப் பரீக்ஷித்து மனிதன் தழை குழை முதலிய சாகபக்ஷணிப் பிராணிகளையே யொத்திருக்கின்றான்; மாமிச பக்ஷணிப்பிராணிகளை யொத்திருக்கவில்லை; ஆனதால் மாமிசவுணவு மனிதருக்கு ஏற்றதன்று என்கிறார்கள்.

"மாமிசங்களின் இயற்கைத் தன்மையையும் தழை, குழை, காய்கனி முதலிய சாகபக்ஷணங்களின் இயற்கைத்தன்மையையும் பரீக்ஷித்துப் பார்த்தால் தசை வளரவும் நரம்புகள் பலப்படவும் சரீர புஷ்டி கொள்ளவும் வேண்டிய சத்துக்கள் சாக பக்ஷணங்களில் தான் நிறைந்திருக்கின்றன என்பது தெளிவாகும். சரீரவளர்ச்சிக்கு ஆதாரமான கொழுப்பும் லோக வஸ்துக்களும் மாமிசங்களில் இருப்பதினும் காய்கறி வகைகளில் அதிகமாகவே இருக்கின்றன. அன்றியும் மாமிசவர்க்கத்தில் இல்லாத சில சத்துவர்க்கங்கள் காய்கறிவகைகளில் இருக்கின்றன. இது மட்டோ! மாமிசங்களிலுள்ள கெட்ட வஸ்துக்கள் காய்கறி வர்க்கங்களில் சிறிதும் இல்லை. கசாப்புக்கடையிலிருந்து மாமிசத்தைக் கொண்டு வரும் போது பார்த்தால் மாமிச பக்ஷணிக்கும் அருவருப்பேயுண்டாகும். சிலர் வாந்தியெடுப்பதுமுண்டு. காய்கறி பதார்த்தங்களைக் காணும்பொழுதே மனோரம்மியமுண்டாகும்."

பின்பு, இந்த மாம்ஸ உணவு சாப்பிடும் ஏற்பாடு பழக்கத்தால் வந்த ஒருகேடென்றும் மாம்ஸ ஆகாரத்தின் தீமைகளை அறிந்துகொண்ட விவேகிகள் அவைகளை நீக்கிவிட, விவேகத்தாலும், மனோதிடத்தாலும் நீக்குவதற்கு சக்தியற்றவர்கள் தங்களுக்குத் தோன்றியவாறு வாதிக்கிறார்கள் என்றும் சொல்கிறார். மாம்ஸ ஆகாரம் சாப்பிடுபவர்கள் சொல்லும் ந்யாயங்கள் பின்வருமாறு.

(1) பரம்பரையாக சாப்பிட்டு வந்ததால் குற்றமில்லை.

(2) மாம்ஸத்தாலாகிய தேகத்துக்கு மாம்ஸமே பலத்தைத் தரக்கூடியது.

(3) விச்வாமித்ரர் முதலிய மஹான்களும் மாம்ஸம் தின்றார்கள்.

(4) கண்ணப்பநாயனார் கூட கடவுளுக்கு மாம்ஸம் நிவேதனம் செய்தார்.

(5) இத்தனை காலம் தின்று இப்பொழுது நிறுத்திவிடுவதால் பலனில்லை.

இவற்றிற்கு ஸமாதானம் கூறுகிறார்.

(1) முதல் ந்யாயம் பார்க்கும்போதே நன்றாயில்லை. எப்படி கள்ளத்தொழிலை ஜாதிவழக்கமாயுடைய ஒருவன் அதன் தீமையை யறிந்தவுடன் அதை விட்டு நீங்குதல் வேண்டுமோ அதே போல் எந்தத் தீமையையும் கண்டறிந்தவுடன் இது வெகுகாலமாய் அனுஷ்டித்ததென்று எண்ணாமல் விட்டுவிட வேண்டியதே முறையாகும்.

(2) சாகபக்ஷணிகள் அதிககாலம் ஜீவித்திருப்பார்கள். மாம்ஸ பக்ஷணிகள் குறைந்தகாலமே ஜீவித்திருப்பார்கள். மாம்ஸம் சாப்பிடுகிறவர்களிடம் தொத்துநோய் அதிகம் பரவுகிறது. மற்றவர்களுக்கு அப்படியில்லை. மாம்ஸபக்ஷகர்களைக் காட்டிலும் சாகபக்ஷகர்கள் அதிக ஸத்வகுண விசேஷமும், புத்தி கூர்மையும், தேகாரோக்யமும், அழகும் அடைந்திருப்பது ப்ரத்யக்ஷம். சாகபக்ஷகர்கள் அதிகபலமும்வீரமும் உறுதியும் உள்ளவர்கள். இதற்கு உதாரணமாக சாகபக்ஷகர்களான வீக்ய காலாட்படையையும், தான்யஉணவு உண்ணும் ஸ்காட்மென்களையும் சொல்லலாம். மூடத்தனமான மூர்க்கத்வத்தை வீரமென்றும் பலமென்றும் கருதுவது தவறு. மூர்க்கமும் குரூரமுமுள்ள புலியைக் காட்டிலும் குதிரைக்குத்தான் தசை வலி அதிகமாயிருக்கிறது. சிங்கத்துக்கு அதிக மூர்க்ககுண முண்டேயொழிய யானைக்குள்ள பீரங்கியை இழுக்கும் பலம் அதற்குக் கிடையாது.

(3) தவவலிமையால் சாபானுச்ரஹ சீலர்களாக விளங்கும் விச்வாமித்ரர் முதலிய பெரியோர்கள் உலகத்தில் தோன்றும் எல்லாப் பொருள்களையும் ஈச்வராம்சமாகக் காணும் ஞானநோக்குள்ளவர்களாதலால் அவர்களுடைய செயல்களை நாம் ஆராய்வதற்கில்லை.

(4) கண்ணப்ப நாயனார் புலாலுணவைக் கடவுளுக்கு நிவேதனம் செய்ததும், பரம கருணாநிதியாகிய எம்பெருமான் அதனை அமுதினும் இனிதாக ஏற்றருளியதும் உண்மையே. அப்புண்ய மூர்த்தியைப்போல அன்பு கசிந்து தன்னையும் மறந்து இரு கண்களையும் தோண்டிச் சாத்தும் திடபக்தி முதிர்ச்சி நமக்கு வந்தால் நமது செயல்களில் குணாகுண ஆராய்ச்சிக்கு இடமில்லையாம். எப்பொழுதும் மாயவலைக்குட் சிக்கி யான் எனது என்னும் அகங்கார மமகாரங்களில் முழுகிக்கிடக்கும் நமது சிறுமை யெங்கே! அவரது பெருமையெங்கே!

(5) அறியாமையால் செய்த இழிவான தொழில்களை எல்லாம் அறிவு வந்தபோது நீக்கிவிடுவதுதான் அறிவின் பயனாகும். குழந்தை பெரியவனானவுடன் ஆடையணிதலும், மலமூத்ராதிகளைக் கண்டால் அருவருப்புக்கொள்வதும் உலக இயல்பாகும். என்று இவ்விதமாக 5 கேள்விக்கும் ஸமாதானம் கூறுகிறார்.

இன்னம் ஆராயுமிடத்து புல், மரம், ஈ, எறும்பு, பக்ஷி, ம்ருகம், மனிதன் இவையனைத்திற்கும் உயிரும் மனமும் ஸுகதுக்கமும் உண்டு. இவைகள் எல்லாருக்கும் ஒன்று போலவே யிருக்கின்றன. நமக்கெப்படி உயிர் அருமையோ அப்படியே மற்ற ப்ராணிகளுக்கும் அருமையாகவிருக்கிறது. வயிற்றை நிரப்புவதாகிய அல்ப ஸுகத்துக்காக ஒரு ப்ராணியின் வாழ்நாள் இன்பத்தைக் கெடுப்பது ந்யாயமாகாது. இது ந்யாயமென்றால் ஒரு ராக்ஷஸன் நம்மைச்சொன்று தின்பதும் ந்யாயமாகும்.

ம்ருகங்கள் ஒன்றை ஒன்று கொன்று தின்பதாகிய ந்யாயம் ம்ருகந்யாயமே ஒழிய மனிதந்யாயமாகாது ஆகையால் ம்ருக உணவு தகாது என்கிறார்.

மாம்ஸபக்ஷணத்தால் மதுபானமும் அதனோடு கூடவரும் வேறு பாபங்களும் ஸம்பவிக்கின்றன. மேலும் ஆத்மஞானம் அடைவதற்கு மாம்ஸ ஆகாரம் தடையாக இருந்து மனஸை அடக்கமுடியாமல் செய்துவிடுகிறது என்கிறார்.

### Holiday Tours in Colleges and Schools.

வித்யாசாலைகளில் விடுமுறைகால யாத்ரைகள்.—வடக்கே ஹரித்வார் என்னும் க்ஷேத்ரத்தில் குருகுலமென்னும் பெயருள்ள காலேஜ் ஒன்று இருக்கிறது. அதை பஞ்சாப் மகாணத்து ஆரிய ஸமாஜத்தார் வைத்து நடத்திவருகிறார்கள். இந்த குருகுலத்தில் பழையவேத சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டிருக்கும் தர்மத்திற்கும் மதாசாரங்களுக்கும் விரோதமில்லாமல் பழையகுருகுல வாஸத்தை யனுஸரித்து ஹிந்துப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்கப்படுகிறது. மாணவர்கள் மதாபிமானிகளாகவும், தேசாபிமானிகளாகவும், ராஜபக்தர்களாகவும் வளருகிறார்கள். இந்தியாவிலுள்ள மற்றகாலேஜ்களில் இல்லாத இந்த குருகுல காலேஜில் மாத்ரமுள்ள ஒரு முக்யமான ஏற்பாடு இருந்துவருகிறது. அதென்னவென்றால் மாணவர்களில் சிலர் ஒரு தக்க உபாத்யாயருடன் அநேக இடங்களுக்கு யாத்ரை செய்வதே. ஸமீபத்தில் நடந்த ஒருயாத்ரையைப்பற்றி "ஹிந்துஸ்தான் ரெவ்யூவில்" ஒருவர் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். குருகுலத்தைச் சேர்ந்த 19-காலேஜ் பிள்ளைகளும் அஸிஸ்டெண்ட் மானேஜர் நந்த லாலும் நாலு வேலைக்காரர்களும் ஸரஸ்வதி யாத்திரை யென்று ஹரித்வாரிலிருந்து ஸிம்லாவுக்கு யாத்ரைபோனார்கள். இந்த இரண்டு இடத்துக்கும் உள்ள தூரம் 350-மைல். இவ்வளவு தூரத்தையும் ஸெப்டம்பர் மாஸம் முழுதும் பிள்ளைகள் வெறுங்காலால் நடந்து போனார்கள். வழியில் ஆலயங்களிலும் தர்மசாலைகளிலும் சில இடங்களில் டாக் பங்களாவிலும் இறங்கி சமையல்செய்து சாப்பிட்டுக் களைப்பாறிச் சென்றார்கள். ஒரு நாளைக்கு ஸராஸரி 10-அல்லது 12 மைலுக்கு அதிகம் நடந்ததில்லை. போன வழியெல்லாம் மலைப்ரதேசமானதால் பல மலைச்சிகரங்களையும் அரண்யங்களையும், பள்ளத்தாக்குகளையும், செழிப்பான க்ராமங்களையும் பார்த்துக்கொண்டு போனார்கள். இந்தப் பிள்ளைகள் அனைவரும் ஒரே மாதிரியாய் காலையில் 3 அல்லது 4 மணிக்கு எழுந்து, அந்த நாள் ப்ரயாணத்துக்கு எவ்வித குழப்பமுமில்லாமல் தயார் செய்வார்கள்.

இப்படி, குருகுல வாஸத்துப் பிள்ளைகள் யாத்ரை செய்ததில் அவர்களுக்கு தேக ஆரோக்யம் உண்டாகி, அவர்கள் மனப்பயிற்சி பெற்றது மல்லாமல் உயர்ந்த கருத்துகளும் ஜீவகாருண்யமும் சாந்தமும் தெய்வ பக்தியும் பெற்றார்கள். அவர்கள் யாத்ரைபோன காலமெல்லாம் அவர்கள் வாயிலிருந்து ஒரு ஆத்ரமான சொல்லாவது அவர்கள் சரீரத்தினால் கடுமையான செயலாவது உண்டானதில்லையாம் என்று ஷை வ்யாஸத்தில் கூறுகிறார்.

இதைப்பற்றி சுதேசமித்திரன் எழுதுகையில் குருகுலத்து வாஸத்துப் பிள்ளைகள் அடக்கமும், பெரியோரிடத்தில் உபசாரமும், தெய்வ பக்தியும், ப்ராணிகளிடத்தில் தயவும் பெற்றார்களென்றால், இதைவிட அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய விலைபெற்ற பொக்கிஷம் என்ன இருக்கக்கூடும்? என்கிறது. மேலும் மற்ற காலேஜ்களும் ஸ்கூல்களும் குருகுலத்து மாணவர்கள் செய்ததுபோல் யாத்ரை செய்வது நலமென்றும், தென்னிந்தியாவில் நேர்த்தியான அரண்யங்களும், அருவிகளும், நதிகளும், மலைப்ரதேசங்களும், நீலகிரி, சேர்வராயன்மலை, கொடைக்கானல், குற்றாலம், இவைகள்போன்ற தேக ஸௌக்யமும் மனஸுக்கு ஸந்தோஷமும்,ஸுகமும் கொடுக்கக் கூடிய இடங்களும் அநேகம் இருக்கின்றன வென்றும், மாணவர்களுக்கு வருஷத்தில் ஸுமார் மூன்று மாஸம் விடுமுறை காலமிருப்பதால் அக்காலத்தில், ஒரு நல்ல உபாத்யாயர் மாணவர்களில் சிலரை அழைத்துக்கொண்டு இந்த இடங்களுக்குப் போய்ப் பார்த்து வந்தால் குருகுல வாஸத்துப் பிள்ளைகளுக்கு உண்டான நன்மைகள் இவர்களுக்கும் உண்டாகலாம் என்றும் சொல்லுகிறது.

"நம் தேசத்துச் சிறுவர்கள் பலர் தேசசஞ்சாரம் செய்யாமலே முதுமையடைகிறார்கள். ஆகையால் இவர்களுக்குக் குறுகின புத்தியும், வீண் கர்வமும், அன்னியரிடத்தில் அவமதிப்பும், அனுபோக மின்மையும் உண்டாகின்றன. ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் எந்த மலைப் பிரதேசமானாலும் அந்த இடத்தில் காலேஜ் பிள்ளைகள்வந்து தங்கி, பலவிதமாய் ஆனந்தமும் உற்சாகமும் மன உயர்வும் சரீரத்திடனும் பெற்றுப் போகிறார்கள். இப்படி விடுமுறை காலங்களில் மலைப்பிரதேசங்களில் போய் வசிப்பது அங்கு காலேஜ் பிள்ளைகளுக்கு வெகு பிரியமென்று சொல்லப்படுகின்றது. மூளை வேலை செய்து களைத்துப்போன பெரியோருக்கும் மலை வாசத்தால் சரீரமும் மனசும் களைப்பு நீங்கி, எப்போதையும் விட

அதிக திடனையடைகின்றன. மேற்கண்ட உத்தம குணங்களைப் பெற்று, நம் சிறுவர்கள் குண்டுசெட்டியில் குதிரையோட்டும் கேவலம் புஸ்தகப் பூச்சிகளாய் வளராமல், கை, கால்கள், காது, வாய், முதலிய அவயவங்களும் அதனதன் சேஷ்டைகளுக்கு உற்ற வசதிகள் பெற்று, அவைகள் செய்யும் உத்தமமும் பரிசுத்தமுமான வேலைகளால் மனதுக்கு ஞானமுண்டாகி, ஆண்மையும் அறிவும் பெற்ற உத்தம புருஷர்களாகவும் யோக்கியதையும் பரோபகாரச் சிந்தையும் உள்ள பிரஜைகளாகவும் முன்வரவேண்டும்."

**The Price of the Bride.**

பெண் விலை.—ப்ராமண ஜாதியிலும் இன்னம் மற்ற சில ஜாதிகளிலும் கல்யாணகாலங்களில் வரனுக்கு தக்ஷிணையாக ஏராளமான தொகை கொடுக்க வேண்டியிருக்கிறதே யென்று கஷ்டப்பட, நாட்டுக்கோட்டை வைச்ய ஜாதியில் செட்டிமார்கள் பெண்களுக்கு ரொம்ப அதிகப்பணம் கொடுக்கவேண்டியிருக்கிறதென்று முறைப்பாடாயிருக்கிறது. 'வைசிய மித்திரனில்' ஸமீபத்தில் இதைப்பற்றி ஒரு வ்யாஸம் வெளிவந்திருக்கிறது.

பெண்களைக் கன்னிகாதானம் செய்து கொடுக்காமல் பெண்களுக்காகப் பணம் வாங்குதல் மகா பாபம் என்றும் அப்படி பெண்களை விலைப் படுத்துபவர்கள் நிக்ருஷ்டம் என்றும், இந்த ஏற்பாடு மற்ற ஜாதிகளில் இருப்பதைவிட நாட்டுக்கோட்டை வைச்யர் வகுப்பில் ரொம்ப மும்முரமாயிருக்கிறதென்றும் சொல்லுகிறது. ஸுமார் 50 வருஷங்களுக்கு முன்னுலுங்கூட பெண்களுக்கு அதிக பணம் கொடுத்துக் கல்யாணம் செய்தார்கள் என்று தெரிய வருகிறது. "1860ஹூ த்திற்கு முன் 1050 ரூபாயாக விலைப்படுத்தப்பட்டு பின்னர் 1866-ம்ஹூ-ல் கூடிய வைசிய மஹா ஸபையார் பெண் விலைப்படுத்துவதை ஆலோசித்து 1050ரூக்கு மேல் விற்பவர்கள் 100க்கு 25 வீதம் ஐக்ய ஸ்தானங்களாக வைத்துக்கொண்டிருக்கும் ஒன்பதுகோயில்களுக்கும் அவைகளின் அதிகார வரம்புக்குள்பட்ட ஜனங்கள் செலுத்திவிட வேண்டுமென்று தீர்மானித்தார்கள். அதுபோல் 96 ஊர்களுக்கும் சுற்று விளம்பரம் அனுப்பப்பட்டது" என்று ஷை பத்திரிகை எழுதுகிறது. இந்தத் தீர்மானத்துக்குப்பிறகும் பெண்களின் விலை காலக்ரமத்தில் உயரலாயிற்று. ஷை தீர்மானத்தை மாற்றூர் கோயிலிலும் வைரவன் கோயிலிலும் அனுஷ்டானத்துக் கொண்டுவந்து விட்டார்கள். மற்ற ஏழு கோயில்களின் ஐக்யத்திற்கும் அதிகாரத்துக்கு முள்பட்ட ஜனங்கள் தங்கள் எளிய நிலைமையின் கொடுமையால் பெண்ணைவிலைப்படுத்தும்போது கோயில்களுக்குப் பாகம் கேட்பது ஸரியல்லவென்று முறையிட ஆரம்பித்தார்கள். அதிலிருந்து மேற்படி ஏழு கோயில்களிலும் மகா ஸபையாரின் தீர்மானத்தை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவில்லை. அதன் பின்னர் மாற்றூர் கோயில் அதிகாரத்திற் குட்பட்ட ஜனங்களும் முறையிடத் தொடங்கினார்கள். அதன் மேல் வைச்யர்களில் முக்யஸ்தர்கள் சிலர் சேர்ந்து இது விஷயம் ஆலோசித்து கடைசியாகக் கோவிலுக்குப் பாகம் கொடுக்கவேண்டியதில்லை என்று தீர்மானித்தார்கள். இன்னம் பெண்விலையில் ஒருபாகம் பெற்றுவந்த வைரவன் கோயிலிலும் அந்த வழக்கத்தை நிறுத்திவிட்டார்கள்.

முதலில் பெண்விலை 1050 ரூபாயாக இருந்தது. ஸுமார் 50வருஷகாலத்துக்குள் 30,000 ரூபாயாக ஏறிவிட்டது. அதோடு பெண்ணுக்கு 3500 ரூபாய்க்கு நகைகள் போட வேண்டும் என்றும் வழக்கம் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஏற்பாட்டால் அதிக கஷ்டநஷ்டங்கள் ஏற்படவே 1909-ம் வருஷத்தில் செல்வாக்குள்ளவர்கள் பலர்சேர்ந்து தேவகோட்டை சிவன்கோவிலில்கூடி இதைப்பற்றி யோசித்தார்கள். பெண்களை விலைப் படுத்துவதால்நேரிடும் அனர்த்தங்களை உணர்ந்தாலும் முற்றிலும் நிறுத்துவதற்கு முடியாமல் 7000 ரூபாய் மேல் விற்கக்கூடாதென்றும் மீறி நடப்பவர்கள் ஜாதிய அமுலுக்கு உள்படுத்தப் படுவார்களென்றும் தீர்மானித்ததோடு கல்யாண முதலிய விசேஷ காலங்களில் செலவு செய்யப்படுவதற்கும் ஓர் திட்டம் வரையறுத்துக்கொண்டார்கள். வழக்கம்போல் ஸாதாரண ஜனங்கள் இந்த தீர்மானத்தை அனுஷ்டித்து வந்தார்கள். செல்வவான்கள் இதை உல்லங்கனம் செய்துவிடவே ஸாதாரண ஜனங்களும் அப்படியே தீர்மானத்தை அலக்ஷ்யம் செய்யலானார்கள்.

பின்பு அந்த வ்யாஸத்தில் இவ்வித ஏற்பாட்டால் மணமகன் கடன்பட்டுப்போவதையும், அநேக சிறுவர்கள் கல்யாணமாகாமல் துர்நடத்தைகளுக் குள்

பட்டுபோவதையும் இன்னம் மற்றக் கெடுதிகளையும் விவரித்திருக்கிறது.

செல்வாக்குள்ளவர்களும் த்ரவ்யவான்களும் சேர்ந்து இந்த விஷயத்தில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்றும், அந்த ஜாதியார் ஸ்தாபித்திருக்கும் பற்பல ஸபைகளும் இந்த விஷயத்தை எடுத்துப்பேசவேண்டு மென்றும் இந்த வழக்கத்தை நிறுத்த கவர்ன்மெண்டார் சட்டம் செய்யும்படி கேட்கவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறது.

## BOYS' SECTION.
## பையன்கள் பகுதி.

### Tobacco & Boys.

புகையிலையும் பையன்களும்:—புகையிலையில் நிகோடின் என்று ஒரு விஷம் இருக்கிறது. மனிதர்களை வெகு சீக்ரம் கொல்லக்கூடிய விஷங்களில் ப்ரவிக் ஆஸிடுக்கு அடுத்தபடி இது முதன்மையானது. பெரியவர்கள் புகையிலைச் சுருட்டுக்குடிக்கும் விஷயத்தில் அபிப்ராயபேதம் என்ன விருந்தாலும் அது பையன்களுக்கு ரொம்ப கெடுதலானது என்பதில்அபிப்ராயபேதமே கிடையாது. வளர்ந்துவரும் சிறு பையனுடைய தேகத்தில் சிறிதளவு அதன் விஷம் சேர்ந்தாலும் ரொம்ப கெடுதலை யுண்டுபண்ணும் என்பதில் ஸந்தேகமேயில்லை. ஸிகரட்டுகள் இன்னம் ரொம்பக் கெடுதலானவை.

### A Big Steamer.

அக்விடேனியா என்ற பெரியகப்பல்:—ப்ரிட்டிஷ்காரருக்கு ஸொந்தமான அக்விட்டேனியா என்ற பெரிய கப்பல் புதிதாய்க் கட்டப்பட்டிருக்கிறது. அது 900 அடிக்கும் அதிகமான நீளமுள்ளது அதில் 4000 ப்ரயாணிகளும், 1100 கப்பல் மாலுமிகளும் இருக்கலாம். அந்தக் கப்பலில் 11 அடுக்கு மெத்தைகள் இருக்கின்றன. பிரயாணிகளின்ஸெளகர்யத்திற்கு யாதொரு குறைவும் இல்லாமல் கட்டப்பட்டிருக்கிறது. அதைப்பார்த்தால் ஒரு அரண்மனையைப்போலிருக்கிறது. அதில் ஸ்திரீகள் கூடுவதற்கும் சுருட்டுப் பிடிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் பெரிய அறைகள் இருக்கின்றன. தவிர ஒரு சிங்காரத் தோட்டத்தையும் உண்டுபண்ணி யிருக்கிறார்கள். அதில் பலவிதச் செடிகள் வைக்கப்பட்டிருக்கின்றன.

### The London "Times."

லண்டன் "டைம்ஸ்" பத்ரிகை:—லண்டனில் வெளியாகும் பேர்போன "டைம்ஸ்" பத்ரிகை 1785-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. அது காலக்ரமத்தில் ரொம்ப செல்வாக்கும் க்யாதியும் பெற்று இப்போது உலகத்திலுள்ள முதன்மையான பெரிய பத்ரிகைகளில் ஒன்றாக இருக்கிறது. சிலர் இதுவே முதன்மையான பத்ரிகை என்பார்கள். இதன் விலை ஒரு ப்ரதிக்கு மூன்றணாவாக இருந்தது. சென்ற 5௳ முதல் இதன் விலையை 2-அணாவாகக் குறைத்திருக்கிறார்கள். ஒழுங்காய் வருஷசந்தா கொடுத்துவரும் சந்தாதாரர்களுக்கு 1911-ம் வருஷம் பிப்ரவரி மாஸம் முதல் கொண்டே இந்தக் குறைந்த சந்தாவுக்கு கொடுக்கப்பட்டுவந்திருக்கிறது. மற்ற பெரியபத்ரிகைகள் ½-அணாவுக்கும் 1-அணாவுக்கும் விற்கப்படுகின்றன.

லண்டன் டைம்ஸுக்கு "தண்டரர்" அல்லது இடிமுழக்கம் செய்வோன் என்று பெயர் கொடுக்கப்பட்டிருந்தது. ப்ரிடிஷ் ஜனங்கள் தங்களுடைய குறைகளை ராஜாங்கத்தாருக்குத் தெரிவிக்கவேண்டுமானால் 'டைம்ஸுக்கு எழுதினால் போதும்" என்று சொல்வதுண்டு. ஒரு வருஷத்துக்கு டைம்ஸ் பத்ரிகை வாசித்துவந்தால் ஒரு பெரிய என்ஸைக்லோபீடியாவை (ஸர்வ சாஸ்த்ர அகராதி) வாசிப்பதினால் கிடைக்கும் பலனைவிட அதிகம் கிடைக்கும் என்று சொல்வதுண்டு.

இந்தப் பத்ரிகைக்கு இதற்கு முன்னால் பற்பல காலங்களில் ஏற்பட்டிருந்த விலை விவரம் பின்வருமாறு.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 7 | 1796 | 4½ | அணா |
| 1 | 1 | 1799 | 6 | „ |
| 22 | 5 | 1809 | 6½ | „ |
| 1 | 9 | 1815 | 7 | „ |
| 15 | 9 | 1836 | 5 | „ |
| 1 | 7 | 1855 | 4 | „ |
| 1 | 10 | 1861 | 3 | „ |
| 5 | 5 | 1913 | 2 | „ |

### Root & Stem.

வேரும் தண்டும்:—வேருக்கும் தண்டுக்கும் உள்ள வித்யாஸங்கள்.

1. பொதுவாக வேர் கீழ்நோக்கிச் செல்லுகிறது. தண்டுமேல் நோக்கிச் செல்லுகிறது.

2. வேரானது வெளிச்சத்தைவிட்டு விலகிச்செல்லு றது. தண்டு ஸாதாரணமாய் ஸூர்ய வெளிச்சத் தையே நாடிப்போகிறது.

3. வேரில் முளை அல்லது குருத்தாவது இலையாவது கிடையாது. தண்டில் இவை இரண்டும் உண்டு.

4. வேரில் வளர்ந்து செல்லும் நுனிப்பாகமானது ஒரு உறையினுல் மூடப்பட்டிருக்கிறது. தண்டில் நுனியானது தோலிபோன்ற இலைகளால் மூடப்பட்டிருக்கிறது.

5. வேரில் மெல்லிய ரோமம்போன்ற வேர்கள் உண்டாகின்றன. இந்த மயிரிழைவேர்கள் பூமியிலிருந்து ஜலம், தாதுப்பொருள்கள் உணவுப் பொருள்கள் ஆகிய இவற்றை க்ரகிக்கின்றன. தண்டில் சில ஸமயங்களில் மயிர்போன்ற பாகங்கள் உண்டாகின்றன. ஆனுல் தண்டிலுள்ள ரோமங்கள் ஆகாரம் க்ரகித்துக் கொள்வதற்காக ஏற்படவில்லை. செடியை காப்பாற்றுவதற்காகவே ஏற்பட்டிருக்கின்றன.

6. கிளை வேர்கள் நடுவேரின் உள்பக்கத்திலுள்ள பாகங்களிலிருந்து உண்டாகின்றன. தண்டின் கிளைகள் நடுத்தண்டின் வெளிப்பக்கத்திலுள்ள பாகங்களிலிருந்து வளருகின்றன.

7. ஒரு செடியின் முதல்வேர் என்ன உள்ளமைப்புடன் இருக்கிறதோ அதேமாதிரிதான் அதன் கிளை (கிளை வேர்கள்) களும் இருக்கின்றன. ஆனுல் தண்டிலோ, தண்டின் அமைப்பிலிருந்து வித்யாஸப்படும் வெவ்வேறு உள்ளமைப்புள்ள அங்கங்கள் உண்டாகின்றன.

8. வேருக்கு இலைகள் போல் பல வர்ணங்கள் இல்லை. வேர் ஸாதாரணமாய் மஞ்சள் கலந்த அல்லது, மங்கின வெண்மை கலந்த பழுப்பு நிறமுள்ளது. னுல் தண்டும் அதைச் சேர்ந்தவைகளும் நல்ல வர்ணங்கள் கொண்டவை. தண்டு ஸாதாரணமாய் பசுமை நிறமாயிருக்கும். இந்தப் பசுமை நிறம் செடி ஆகாரத்தை ஜீர்ணிப்பதற்கு ரொம்ப அவச்யமானது.

**Sir A. Seshaiyah Sastri.**

ஸர் எ. சேஷய்யா சாஸ்த்ரி.—சென்ற மாஸம் ஸர் சேஷய்ய சாஸ்த்ரியைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தோம். திவான்பகதூர் நாகமய்யா செய்த ப்ரஸங்கத்தின் ஸாராம்சம் பின்வருமாறு:—ஸர் எ. சேஷய்ய சாஸ்த்ரியார் திருவாங்கூரில் திவானுக இருக்கையில் நல்ல பெயரும் கீர்த்தியும் ஸம்பாதித்தது மன்றி, ஜனங்களிடத்தில் ப்ரியம், ஸத்யம், பாரபட்சமின்மை, ஔதார்யம், இரக்கம், தயை, தாட்சண்யம், ராஜபக்தி, ப்ரிட்டிஷ் அரசாட்சியில் நம்பிக்கை, அவர்களுடைய சிறந்த குணங்களைக்கண்டு மகிழ்ச்சி யடைதல், முதலிய உத்தம குணங்களுடன் விளங்கி வந்தார். இந்தியர்கள் ஸாமர்த்ய முள்ளவர்கள், எந்தக் கார்யத்தையும் த்ருப்திகரமாய் ஸமாளிக்க சக்தியுள்ளவர்கள் என்ற நம்பிக்கை வகித்தவர். அவருடைய உத்தம குணங்களைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் யாருடைய மனவில் உதிக்கிறதோ, அவனே தன்யவானுன். இவர் இப்படிப் பேசிய பிறகு, ஸப் ஜட்ஜ் மிஸ்டர் எ. எஸ். பாலஸுப்ரமண்ய அய்யர் ஸர் எ. சேஷய்ய சாஸ்த்யாரின் ஸாமர்த்யத்தைப் பற்றிப் புகழ்ந்துபேசினுர். அதன் பிறகு ஸர் ஹாரோல்ட்ஸ்ட்டுவர்ட் எழுதின கடிதம் ஸபையின் முன்பாக வாசிக்கப்பட்டது. அது பின்வருமாறு:—

"அந்த ராஜ தந்த்ரியின் ஸாமர்த்யம், அவர் செய்திருக்கும் வேலை முதலியவைகளை நான் நினைக்கும்பொழுதெல்லாம், எனக்குண்டாகும் ஸந்தோஷத்திற்கு அளவில்லை. இந்த ஸந்தர்ப்பத்திற்கு என்னை வரவேண்டும் என்று நீங்கள் எழுதியிருந்த வரவழைப்புக் கடிதத்தைக் கண்டு நான் மிக ஸந்தோஷம் கொண்டேன். ஆனுல் கவுன்ஸிலில் நான் வரவு செலவு மெம்பராக இருக்கிறதில் எனக்கு ஏற்பட்டிருக்கும் வேலைத் தொந்தரவை உத்தேசித்து, கும்பகோணத்திற்கு வர எனக்கு ஸாவகாசம் இல்லாமல் போனதற்காக நான் விஸனப்படுகிறேன்."

**The Childhood of Animals.**

ம்ருகங்களின் சிறுவயது :—ம்ருகங்களின் சிறுவயது, அந்தந்த ம்ருகத்தின் ஆயுஸுப்ரமாணம், அதன் தேகத்தின் அளவு, அதன் எல்லா உருவங்களும் தோன்றியிருக்கின்றனவா என்பது, ஆகிய இவற்றைப் பொருத்ததாயிருக்கிறது. ரொம்ப காலம் ஜீவித்திருப்பனவும், பெருந் தேகமுள்ளனவும், எல்லா அங்கங்களும் நன்ருய் வ்ருத்தியாகி இருக்கின்றனவுமான ம்ருகங்களுக்குக் குழந்தைப்பருவம் ரொம்ப காலம் நீடித்திருக்கிறது.

கல்விகற்ற மனிதன் வளர்ந்து பெரியவனுக 20-வருஷம் செல்லுகிறது. காட்டுமுராண்டியாகிய நாகரீகமில்லாதவனுக்கு 15 வருஷம் செல்லுகிறது. மேலான ஜாதிகளாகிய கொரில்லா, ஒராங் என்னும்

குரங்குகளுக்கு 12-முதல் 14-வருஷம் செல்லும். பாபூன் என்னும் குரங்குக்கு பால்யப் பருவம் 8-வருஷம் வரையில் இருக்கிறது. சிறிய குரங்குகளுக்கோ ஸுமார் 4-வருஷமாம்.

அறிவுமட்டான பூனைவர்க்கத்தில், பெரிய ம்ருகங்களுக்கு பால்யப்பருவம் 4-5வருஷங்களாம். அறிவு மட்டான சாகபக்ஷிணிகள் அநேகமாய் சீக்ரத்திலேயே பெரியவைகளாகி விடுகின்றன. உதாரணமாக எருமை, பெரிய மான்கள் முதலியவைகளின் பால்யப்பருவம் இரண்டேவருஷந்தான். ஷாமாய் என்னும் ம்ருகத்து பால்ய பருவம் இன்னும் கொஞ்சம் அதிகம். ஆனல் கிராபி என்னும் ஒட்டைச்சிவிங்கி பெரியதாக ஐந்தாறு வருஷம் செல்லும்.

ரொம்பப் பெரியதும், அதிக அறிவுள்ளதுமான யானைக்குப் பால்யப் பருவம் கழிய 20, 24 வருஷம் செல்லுகிறது. பறவைகளினுடைய இளமைப் பருவம் மிகக் குறைவானது. 3-வாரம் அல்லது, 3 மாஸத்துக்குள் குஞ்சுகள் தங்களைத் தாங்களே பார்த்துக் கொள்ளும் ஸ்திதிக்கு வந்துவிடுகின்றன. 1-வருஷம் முதல் 4 வருஷத்துக்குள் பெரியவையாய் விடுகின்றன.

ஆமை, முதலை முதலிய சில ஜந்துக்கள் ஆயுஸு முழுவதும் வளர்ந்து பெரியனவாய்க்கொண்டே இருப்பதாக தோன்றுகிறது

## LADIES' SECTION.
## ஸ்த்ரீகள் பகுதி.

### Suffragette Conference.

ஸ்த்ரீ ஸ்வதந்த்ரவாதிகள் கான்பரென்ஸ்.—வங்காளத்தில் பாபு க்ருஷ்ண குமார மித்ராவின் புத்ரியாகிய மிஸ் குமுதினிமித்ரா ஸரஸ்வதி பி. எ. என்பவர் ஐரோப்பாகண்டத்தில் புடாபெஸ்த் என்ற நகரத்தில் அடுத்த ஜுன் மாதம் 15-ந்தேதி கூடப்போகிற ஸர்வதேச ஸ்த்ரீ ஸ்வதந்தரவாதிகள் கான்பரென்ஸுக்கு ஒரு டெலிகேட்டாய் வரும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். அந்தக் காங்க்ரெஸில் அவர் ஒரு வ்யாஸம் எழுதிக்கொண்டு வந்து வாசிக்கும்படியாயும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

### The Montenegrin Women.

மாண்டிநீக்ரோ ஸ்த்ரீகள்.—சென்ற பங்குனி மாஸத்து ஸஞ்சிகையில் "மாண்டி நீக்ரோ பெண்ணின் சமர்த்து" என்று ஒரு குறிப்பு எழுதியிருந்தோம். மாண்டி நீக்ரோ பெண்ணுக்கு புருஷனை வரித்துக்கொள்வதில் எவ்வளவு ஸ்வதந்த்ரங்கள் இருந்தபோதிலும் கல்யாணமாகி ஒருமிக்க வாழும்போது அவளுக்கு ஒரு பெரிய நிர்ப்பந்தம் இருக்கிறதென்று தெரியவருகிறது. அவள் தன் புருஷனுடன் பேசும்போது புருஷன் என்ன சொன்னபோதிலும் மறுத்துச் சொல்லக்கூடாது. புருஷனோடு பேசும் போது அவன் சொல்லுவதை மறுக்காமலிருப்பதாக அவள் வாக்குத்தத்தம் செய்யவேண்டியது கல்யாணத்தின் முக்யமான கார்யங்களில் ஒன்றாம். ஒவ்வொரு கல்யாணப் பெண்ணும் தான் மணந்து கொள்ளும் புருஷன் என்ன சொன்னாலும் ஸரி அதை மறுத்துச் சொல்லுவதில்லை என்று கல்யாணம் நடக்கும் கோவிலில் ஸத்யம் செய்யவேண்டுமாம்.

### Present Day Women.

தற்காலத்து ஸ்த்ரீகள்.—முப்பது நாற்பது வருஷத்துக்கு முன்னால் ஸ்த்ரீகள் மட்டமான உடையிலும் ஸாமான்யமான ஆகாரத்திலும் த்ருப்தியடைந்திருந்தார்கள். இப்போதோ, நாகரீகம் முதிர்ந்து அறிவு வ்ருத்தியாகவே, ஸ்த்ரீகள் பட்டுப்புடவைகளும் நேர்த்தியான ஆடையாபரணங்களும் வேண்டுமென்கிறார்கள். புருஷர்களும் ஸ்த்ரீகள் சொல்லுவனவற்றைக்கேட்டு அவர்களிஷ்டப்படி வாங்கிக் கொடுத்து த்ருப்திசெய்ய வேண்டியிருக்கிறது. ஹிந்து ஸ்த்ரீகள் பார்ப்பவர்களுக்கு லக்ஷணமாயும், நாகரீகமாயும் இருக்க முயலுவதில் அவர்களுக்குக் ரொம்ப செலவு ஏற்பட்டுவிடுகிறது. சில குடும்பங்களில் ஆகாராதிகளும் மற்ற அவச்யமான ஸாமான்களும் எப்படிப் போனாலும் போகட்டுமென்று விட்டுவிட்டு நேர்த்தியான ஆடையாபரணாதிகளில் பணத்தைச் செலவழித்துக் கஷ்டப்படுகிறார்கள். புருஷனுக்கு வைத்யம் பண்ணிக்கொள்ள கையில் பணமில்லை என்று சொன்னாலும் அவனுடைய அகமுடையாள் ஆறவராகன் தறிபுடைவைக்குக் குறைந்து கட்டுவதில்லை.

**Married under Difficulties.**

கஷ்டப்பட்டு கல்யாணமானது.—அமெரிக்காவில் ஐக்ய மாகாணங்களில் மிஸ்டர் ஸ்மித் என்ற ஆகாய கமனி யொருவர் மிஸ். எமே கோர்ட் என்ற ஓர்மாதை மணந்துகொள்ள விரும்பினர். பெண்ணும் அவரையே தன் புருஷனைத் தெரிந்துகொண்டாள். ஆனல் பெண்ணுடைய தாய் தந்தையர் அந்தக் கல்யாணத்துக்கு ஸம்மதிக்கவில்லை. இப்படியிருக்க ஓர் நாள் ஸ்மித், தன்னுடைய ஆகாயக் கப்பலில் பறந்துவந்து பெண்வீட்டுக்குஸமீபத்தில் ஓர் வயலில் வந்து இறங்கி, ஏற்கனவே தங்களுக்குள் முடிவுகட்டிக்கொண்டிருந்த ப்ரகாரம் அவளைத் தன் கப்பலில் ஏற்றிக்கொண்டு 75-மைல் தூரம் பறந்துபோய் ஹல்ஸ்டேல் என்ற சிற்றூரில் இறங்கி இருவரும் கல்யாணம் செய்துகொண்டார்கள். புருஷனுடைய தொழில் ஆபத்துள்ளதெனப் பெண்ணின் பெற்றோர்கள் அந்தக் கல்யாணத்துக்குத் தடங்கல் செய்திருந்தார்கள். கல்யாணம் முடிந்தபின் கல்யாணப்பெண் தந்தி மூலமாய் அக்கார்யத்தைத் தன் தாய் தந்தையர்களுக்குத் தெரிவித்து மன்னிப்புக் கேட்டாள். அதற்குப்பெற்றோர், 'மன்னிப்பு கொடுத்தாயிற்று; ஆனல் ரெயில்வண்டி வழியாய்த் திரும்பி வாருங்கள்' என்று பதில் கொடுத்தார்களாம்.

**Decrease in Parsi Birth Rate.**

பார்ஸி ஜாதியில் ஜனன விகிதக்குறைவு.—பம்பாய் மாகாணத்தில் பார்ஸி ஜாதியாருக்குள் ஜனனவிகிதம் வர வர க்ஷீணித்து வருகிறதென்று தெரியவருகிறது. ஸமீபத்தில் வெளியான ஸென்ஸஸ் ரிபோர்ட்டினல் பார்ஸீ ஸ்த்ரீகளுக்குள் விவாகம் குறைந்து வருகிறதென்றும், இருபது வயஸிற்கு முன்பு பெரும்பாலும் பார்ஸி ஸ்த்ரீகள் விவாகம் செய்துகொள்வதில்லை என்றும், இருபது வயஸிற்குமேல் நாற்பது வயஸிக்கு உள்பட்டிருக்கும் ஸ்த்ரீகளில் பலர் விவாகமின்றி யிருக்கிறார்களென்றும், 1901-ஆம் வருஷத்தில் 100-க்கு 28 பார்ஸி ஸ்த்ரீகள் விவாகமின்றி யிருந்திருக்க, இப்போது 100 க்கு 32பேர் விவாகமின்றியிருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. பார்ஸி ஜாதியாரின் ஜனனவிகிதக் குறைவுக்கு இது ஒரு முக்ய காரணமா யிருக்கலாம்.

**Princess Indira.**

இந்திரா ராஜகுமாரி.—பரோடாவை யாளும் கெய்க்வார்மகாராஜாவின் புத்ரியாகிய இந்திரா என்பவர் எந்த ராஜகுமாரனை மணம்செய்து கொள்வாரோ தெரியவில்லை. கொஞ்ச காலத்துக்கு முன்னல் அவர் ஸிந்தியா மகாராஜாவைக் கல்யாணம் செய்து கொள்ளப்போவதாக வதந்தி இருந்தது. ஸிந்தியா மகாராஜாவுக்கு ஏற்கனவே ஒரு மனைவி இருப்பதால் இரண்டாவது கல்யாணம் செய்துகொடுப்பது நல்லதல்ல என்று ஜனங்கள் சொன்னார்கள். கடைசியாக அந்தக் கல்யாணப்பேச்சு நின்று போயிற்று. பிற்பாடு, கூஜ்பேகார் மகாராஜாவின் ஸகோதரராகிய ஜிதீந்த்ர நாராயண ராஜகுமாரருக்கு இந்திராவை விவாகம் செய்து கொடுக்கப்போவதாக வதந்தி யேற்பட்டது. இந்த விஷயத்தை மாசி மாஸத்தில் குறிப்பிட்டிருந்தோம், இப்பொழுது அந்தக் கல்யாணமும் நடைபெறாது என்று தெரிகிறது. அதைப்பற்றின விஷயங்கள் பின்வருமாறு.

சில காலத்துக்கு முன்னல் ஜிதீந்த்ர ராஜகுமாரர், தாம் இந்திராவைக் கல்யாணம் செய்துகொள்ள விரும்புவதாக கெய்க்வாரிடம் தெரிவித்தார். ஆனல் கெய்க்வாரும், பரோடாராணியும் இதற்கு ஸம்மதிக்கவில்லை. ஆனல் கெய்க்வார் இந்த விஷயத்தைப்பற்றி ஆலோசித்த பிறகு கல்யாணத்துக்கு ஸம்மதித்துவிட்டார் என்று சொல்லப்பட்டது. உண்மையில் அவர் ஸம்மதிக்கவில்லை. மேலும் இந்திராவை தங்களுடன் ஐரோப்பாவுக்கு அழைத்துப் போவதாகத் தீர்மானித்தார்கள். ஜிதீந்த்ரர் மறுபடியும் கெய்க்வாரைக்கேட்டு அவரை ஸம்மதிக்கச் சொல்லலாம் என்ற எண்ணத்துடன் பம்பாய்க்குச்சென்றார். அப்பொழுது கெய்க்வாரும், மகாராணியும், இந்திராவும் பம்பாயில் இருந்தார்கள். இதன் நடுவில் கல்கத்தாவினருகில் ஜிதீந்த்ரருடைய வாஸஸ்தலமாகிய "வுட்லண்ட்ஸ் என்னு மிடத்தில் கல்யாணத்துக்கு ஆக வேண்டிய கார்யங்கள் நடந்துகொண்டிருந்தன என்று தோன்றுகிறது.

ஜிதீந்த்ரர் கெய்க்வாரைக்கண்டு கேட்டதில் கெய்க்வார் கல்யாணத்துக்கு ஸம்மதிக்க முடியாதென்று சொல்லிவிட்டார். ஆகவே ஜிதீந்த்ரர் தமது ஊருக்கு திரும்பவேண்டியதாயிற்று. ஆனல் ஜிதீந்த்ரர் இங்க்லாந்துக்குச் சென்று மறுபடியும் ஒருமுறை ப்ரயத்தனம் செய்வார் என்று சொல்லப்படுகிறது. கெய்க்வாரும், பரோடா மகாராணி, இந்திரா ராஜகுமாரி முதலியவர்களும் மேமீ 3-தேதி யன்று பம்பாயிலிருந்து, புறப்பட்டு இங்க்லண்டுக்குப் போய்விட்டார்கள்.

# AGRICULTURE.
# விவஸாயம்.

## Some Agricultural Experiments.

சில விவஸாய சோதனைகள் :—ஸாமல்கோட்டை விவஸாயப் பண்ணையில் சில பரீக்ஷைகள் நடத்தி வருகிறார்கள். இதுவரையில் நடத்திவந்த பரீக்ஷைகளால் பின்வரும் விஷயங்கள் தெரியவருகின்றன.

(1) ஆமணக்குப் பிண்ணாக்கு எருவாக இட்ட கரும்புப் பயிருக்கு சாஸ்த்ரீய ரஸாயன எருக்கள் கூடப்போடுவதில் ப்ரயோஜனமில்லை.

(2) நாற்றங்காலில் நாற்றுக்காக ஏகராவுக்கு 700 ராத்தல் வீதம் விதைவிதைத்தால் விதை நஷ்டமே ஒழிய வேறு பலனில்லை. மேலும், நெல் மாஸூலும் குறைந்துபோகிறது. (ஏகருக்கு 210 ராத்தல் விதை நெல் வீதம் விதைத்துப் பரீக்ஷை செய்யப்போகிறார்களாம்.)

(3) நாற்றை இரண்டு தடவை பிடுங்கி நடுவதால் (சாத்து நடுவதால்) லாபம் ஒன்றுமில்லை.

## Entomologist and Agriculturists.

பூச்சி சாஸ்த்ரியும் கிருஷிகர்களும் :—பயிரில் நோய் நொடிகள் கண்டவுடனே அதைப்பற்றி ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்குத் தெரிவித்து, அவர் தாசில்தாருக்கும், தாசில்தார் கலெக்டருக்கும், கலெக்டர் விவஸாய டிரெக்டருக் கெழுதி, அவர் கோயம்பத்தூரிலிருக்கும் பூச்சி சாஸ்த்ரியை அனுப்பத் தாமஸமாகுமாதலால் இந்த வழிகளெல்லாம் போகாமல் உடனே கோயம்பத்தூர் பூச்சி சாஸ்த்ரிக்கு நேரில் எழுதிவிட்டால் கூடுமானால் அவர் நேரில் வந்து பார்ப்பாரென்று சென்னை விவஸாய இலாகா டிரெக்டர் மிஸ்டர் சாட்விக் அவர்கள் ஸமீபத்தில் நடந்த திருவள்ளூர் விவஸாய ஸங்கத்து வருஷாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார்.

## Selected Seed Cotton.

பொறுக்கி யெடுத்த பருத்தி விதை.—விதைப்பதற்கென்று பொறுக்கி யெடுத்த பருத்தி விதையை விதைப்பதில் பல ஸௌகர்யங்கள் இருக்கின்றன. முதலாவது, தோட்டத்தில் பலவிதமான உருவம், அடர்த்தி முதலிய வித்யாஸமுள்ள செடிகளிருப்பதற்கு பதிலாக தோட்டத்திலுள்ள பருத்திச்செடிகள் அநேகமாய் ஒரே அளவும் உருவமும் உள்ளவையாயும் நல்ல பலன் கொடுப்பவையாயும், இருக்கின்றன. பருத்தி மாஸூலும் ரொம்ப ஜாஸ்தியாகிறது. மேலும் பருத்தியிலிருந்து விதை யெடுக்கையில் பருத்தியின் அளவு அதிகமாயிருப்பதாலும், பருத்தியின் இழைகள் நன்றாயிருப்பதாலும், விவஸாயிக்கு சரக்குக்கு நல்ல விலை கிடைக்கிறது. இன்னொரு ஸௌகர்யமும் இருக்கிறது. பொறுக்கி யெடுத்த விதையிலிருந்து உண்டாக்கப்பட்ட செடிகள் பார்வைக்கு ஒரே மாதிரியாயிருப்பதோடுகூட செடிகளில் பருத்திக் காய்கள் ஒரேகாலத்தில் வெடிக்கின்றன. இதனால் பருத்தி யெடுப்பது ரொம்ப ஸுலபமாயும் அதிக செலவில்லாமலும் நடக்கக்கூடும். ஸாதாரண விதையைப் போட்டுப் பயிர்செய்த பருத்திச் செடிகளில் அநேகந்தடவை பருத்தி யெடுக்க வேண்டிருக்க, பொறுக்கி யெடுத்த விதைகள் போட்டுப் பயிர்செய்த தோட்டத்தில் 3-தடவை பருத்தி எடுப்பதே போதுமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

## Green Manure Seeds.

பசுந்தாள் பயிர் விதை.—சென்னை விவஸாய டிபார்ட்மெண்டின் 1911 - 12-ம் வருஷத்து ரிபோர்ட்டில், பசுந்தாள் பயிர் ஸாகுபடிசெய்வதில் ஊக்கம் குறையாமல் இருந்து வருகிறதென்றும், டிபார்ட்மெண்டார் பசுந்தாள் பயிரின் விதைகள் போதுமான அளவு ஸப்ளை செய்யும்படி ப்ரயத்தனப்பட்டு வருகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. பசுந்தாள் பயிரின் விதையை தஞ்சாவூர் ஜில்லாவிலும், மதுரை ஜில்லாக்களிலுந்தான் அதிகம் வாங்குகிறார்களாம். டிபார்ட்மெண்டார் ஷை விதைகளை வெளியிலுள்ள விலைக்குமேல் 100-க்கு 10 வீதம் லாபம் வரும்படி விற்கிறார்கள் என்றும், இதனால் ஜனங்களே ஷை விதைகளில் வ்யாபாரம் செய்வதற்கு இடமிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது.

## Maintenance of Fertility.

நிலத்தின் செழுமை குறையாது காப்பாற்றல்:—செடிகளைச் சுட்டெரித்த சாம்பலைப் பரீக்ஷித்து அதில் என்னென்ன ஸத்துக்கள் இருக்கின்றன என்று பார்த்து, அதைக்கொண்டு என்ன விதமான எரு அந்தச் செடிகளுக்கு ச்லாக்யமானது என்று நிச்சயமாய் தெரிந்து சொள்ளலாம் என்று எண்ணியிருந்தார்கள். பாரன் லீபிக் என்னும் நிபுணர் இந்த விதமாயே அபி

ப்ராயாயம் கொண்டிருந்தார். ஆனால் இந்தப் பரீக்ஷையை அப்படியே நம்புவதற்கில்லை என்று ஒரு விவஸாய இங்க்லீஷ் பத்ரிகையின் நிருபர் தெரிவிக்கிறார். செடியில் இருந்த அளவுக்கு அந்தச் செடியின் சாம்பலை நிலத்தில் எருவாகப்போட்டால் செடி நன்றாய் வளர்ந்து நல்ல பலன்கொடுக்கும் என்று எதிர்பார்ப்பது இயல்பே. ஆனால் இந்த அளவு சாம்பல் போதாமல் போகிறதென்று தெரியவருகிறது. இந்த ஸித்தாந்தத்தை ஆதாரமாகக்கொண்டு தயார்செய்யப்பட்ட லீபிக் என்பவருடைய உரங்களும் த்ருப்தி கொடுக்கவில்லை. ஏனென்றால் சில செடிகளுக்கு சில பயிருணவு வகைகள் அதிகமாக வேண்டியிருக்குமென்றும், அப்படி அதிமாகவேண்டியிருக்கும் பயிருணவு வகைகள் அந்தச் செடிகளின் சாம்பலில் இருக்க வேண்டியது அவச்யமில்லை என்றும், அவர்கள் கவனிக்காமல் உரங்கள் தயார்செய்தார்கள்.

## The Madura Cattle Show.

மதுரைக் கால்நடைக் காட்சி.—சென்ற மாஸம் மதுரையில் நடந்த கால்நடைக்காட்சி ஸம்பந்தமாய் ஒரு மீட்டிங்கு கூடியபோது விவஸாய இலாகா டிரெக்டர் மிஸ்டர் சாட்விக் பின்வருமாறு பேசினர். "மதுரை மிஸ்டர் ராமஸ்வாமி சாஸ்த்ரிகள் பசுந்தாளுரம், ஒற்றை நாற்றுநடுதல், இவற்றைப்பற்றிப் பேசினர்; இன்னொரு விஷயம் ரொம்ப அவச்யமானது, அது நல்ல விதையை உபயோகித்தல். உலகத்திலுள்ளவை யெல்லாம் மும்மூன்றாக இருக்கின்றன; ஆதலால் மூன்றென்பது ஒரு சுபமான எண்ணாகும். பசுந்தாள் உரம், ஒற்றை நாற்று நடுகை, நல்லவிதை இவைகள் மூன்றையும் விவஸாயிகள் கைக்கொண்டால் இதனால் வரும் பலனும் மூன்றாகவே இருக்கும். அதாவது, விவஸாயிக்கு நல்ல பணமும், ஆகாரமும், முகத்தில் புன்சிரிப்பும் ஆகிய இவை மூன்றுமே" என்று சொன்னார்.

கோயில்பட்டி விவஸாயப் பண்ணை மானேஜர் மிஸ்டர் திருமுருகநாதபிள்ளை வாசித்த வ்யாஸத்தில் விவஸாயிகள் ரொம்ப விலைகொடுத்து தழை எருவும், குப்பையும் வாங்குவதைவிட, கொளுஞ்சி, டெயின்சா இவைகளைத் தங்கள் வயல்களில் பயிர்செய்து மடக்கி உழுததால் ரொம்ப லாபம் இருக்கிறதென்று சொன்னார். மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி ப்ரதேசத்திற்கு கைத்தொழில் ஸூபர்வைஸராயிருக்கும் மிஸ்டர் ரெங்கநாதய்யர் ஜலாதார வ்ருத்தியைப் பற்றி ஒரு வ்யாஸம் வாசித்தார். அதில் கிணறுகளிலிருந்து ஆயில் இஞ்சினால் ஜலம் இறைக்கவேண்டுமானால் கிணற்றை ரொம்ப ஆழமாய்க் கட்டுவதோடு ரொம்ப ஜலம் இருக்கும்படி பெரியதாயும், கோடைகாலத்திலும் ஜலம் குறைந்து போகாதபடி ஆழமாயும் கட்டவேண்டுமென்று சொன்னார். எஞ்ஜின் பம்புகள் வருஷத்தில் 200 நாட்களே வேலைக்குதவும் என்றும், மற்ற நாள்கள் மழைகாலமாயும், அறுவடையாகும் காலமாயும் இருப்பதால் அவைகளைக் கொண்டு உதவிக் கைத்தொழில்கள் நடத்த முயலவேண்டுமென்றும், அந்தத் தொழில்களில் அரிசிமில், சர்க்கரைமில், எண்ணெய் ஆட்டும் மெஷின், பருத்திக்கொட்டை எடுக்கும் யந்த்ரம் இவைகள் ஸம்பந்தப்பட்ட தொழில்கள் ச்லாக்கியமென்றும் சொன்னார்.

## Purchase of Bulls.

எருதுகள் வாங்குதல்.—எருதுகளை விலைக்கு வாங்கும்பொழுது மாட்டிலுள்ள லட்சணம், குறி, அடையாளம், ரோமச்சுழி முதலியவைகளை கவனித்து அவை பொறுத்த முள்ளவையாயிருந்தால் வாங்குவது வழக்கம். கண்களுக்குமேலே நெற்றியில் ஒருசுழியும், முதுகிலே முள்ளெலும்பின்மேலே ஏரியிலிருந்து வால்பக்கமாக ஒருசாணளவு தூரத்திலே ஒரு சுழியும் இருந்தால் அம்மாட்டைப் பொருத்த முள்ளதென்று சொல்வார்கள். இந்த இடத்திலே இருக்கிற முதுகுச்சுழியைப் பிள்ளையார் சுழி யென்பார்கள். நெற்றியிலே ஒன்றன்மேலொன்றாக இரு சுழி இருந்தால் அதைக் கொடைச்சுழியெனவும், அம்மாட்டை உடையவர்களுக்கு இடைஞ்சல் நேரிடுமெனவுஞ் சொல்லப்படுகிறது. முள்ளெலும்பின் மேலே பின்பக்கத்திலே இரண்டு பக்கமும் இரண்டு சுழியிருந்தால் இது விலங்குச் சுழியென்னப்படும். இம்மாட்டை வைத்திருப்பவர்கள் ஜெயிலுக்குப் போவார்கள் என்றும் சொல்வார்கள். வாலின் தண்டிலே அதாவது வாலின் அடிப்பக்கத்திலே சுழியிருந்தால் அம்மாடுள்ள வீட்டில் லக்ஷ்மி வாசஞ்செய்யாளெனவுஞ் சொல்லப்படுகிறது.

வட்டக்குளம்புள்ளதும், படவாள்போன்ற காலுள்ளதும், எலிவாலைப்போலச் சிறுத்த வாலுள்ளதும், வாலின் தொங்கலிலேயுள்ள மயிர் குஞ்சம்போன்ற இலட்சணமுள்ளதும், சிறுத்த முகமும், விழிபுறப்பட்ட கண்களும், மெல்லிய ரோமமும், பட்டிபார்த்த கொம்பும், அகலமான நெஞ்சும், வில்போன்ற விலாவும், நேரிய முள்ளந்தண்டும், விருத்தமுள்ள பின்பக்கமும் உள்ளதுவே வேலையிற் சீக்ரமுள்ள மாடென்பார்கள்,

# COMMERCE.

## வ்யாபாரம்.

### Business Enterprise in India.

**இந்தியாவில் வ்யாபார ஊக்கம்:**—இந்தியாவில் சென்ற பிப்ரவரி மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 19 கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

| | | |
|---|---|---|
| 1 | பாங்கி லேவாதேவி கம்பெனி | ...ரூ. 10,00,000 |
| 5 | இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் | ... 1,00,80,000 |
| 7 | வ்யாபாரக்கம்பெனிகள் | ... 10,60,000 |
| 3 | பருத்தி மில் கம்பெனி | ... 1,05,04,000 |
| 1 | தேயிலை தோட்டக்கம்பெனி | ... 2,00,000 |
| 2 | சுரங்கக்கம்பெனி | 22,00,000 |
| 19 | ஆகமொத்தம் ரூ. | 2,50,44,000 |

### Bullock Cart Traffic in Bombay.

**பம்பாயில் மாட்டு வண்டிகள்:**—பம்பாயில் பருத்தி, நிலக்கரி, இரும்பு, யந்த்ரங்கள் முதலிய பாரமான ஸாமான்களை ஓரிடத்திலிருந்து மற்ற விடத்துக்குக் கொண்டுபோக மாட்டு வண்டிகள் தான்ரொம்பவும் உபயோகப்பட்டு வருகின்றன. இப்போது அவைகளுக்குப் பதிலாக மோட்டார் வண்டிகளை உபயோகிக்கப் போகிறார்கள். அங்கே புதிதாய் ஸாமான் கொண்டுபோகும் மோட்டார் வண்டி கம்பெனி ஒன்று ஸ்தாபிக்கப் போகிறார்கள். 25 மோட்டார் வண்டிகள் வேலை செய்யும். ஒவ்வொன்றும் 3-முதல் 10 டன் வரையில் ஏற்றிக்கொண்டு போகக்கூடும். வண்டிகளனைத்தும் ஏற்றிக்கொண்டு போகக்கூடிய மொத்த நிறை 100 டன் ஆகும். கொலாபாகாட்டன் க்ரீன், ஸூரி என்னும் இடங்களிலிருந்து ரேவுக்கு தினம் 10 தடவை வண்டிகள் போகுமென்று வைத்துக் கொண்டால், தினம் 1000 டன் ஸாமான்களை ஏற்றிச் செல்லக்கூடுமென்று சொல்லலாம். அநேக மில்லுக்காரர்களை இது விஷயமாய் அவர்கள் அபிப்பிராயம் என்னவென்று கேட்டதற்கு அவர்கள் இந்த ஏற்பாட்டைப்பற்றி அனுகூலமாகவே அபிப்ராயப்படுகிறார்களாம். மில்லுகளுக்கு பருத்தி வருவதும் ரேவுத்துறைக்கு நூலைக்கொண்டு போவதும் துரிதமாக நடக்கும் என்கிறார்களாம். ஸாமான்களை ஏற்றுவதற்கும் இறக்குவதற்கும் வேலைக்காரர்களுடைய தேவையில்லாமலே அந்த வேலைகள் எல்லாம் யந்த்ர ஏற்பட்டாலேயே நடைபெறும்.

### Sugar Imports.

**சர்க்கரை இறக்குமதி:**—உலகத்திலுள்ள மற்றெல்லா தேசத்தையும் விட இந்தியாவில் ரொம்ப அதிகமான சர்க்கரை செய்யப்படுகிறது. அதோடு ரொம்ப ஏராளமான சர்க்கரையும் இறக்குமதி செய்யப்படுகிறது. ஆனால் இந்த வருஷம் நமது தேசத்தில் செய்யப்படும் சர்க்கரை இதற்கு முன் வருஷங்களின் அளவை விட ரொம்ப அதிகமாயிருக்கு மென்று எண்ணுகிறார்கள். ஆதலால் வெளிநாட்டுச் சர்க்கரை இந்த வருஷம் குறைவாக வரலாம். கடைசியாகப் போட்ட மதிப்பின்படி இந்த வருஷம் 25 லக்ஷம் டன் சுத்தம் செய்யாத (பழுப்பு) சர்க்கரை கிடைக்கும். இது சென்ற வருஷத்திய அளவைவிட 100,900 டன் அதிகமாயிருக்கிறது. சென்ற 5 வருஷங்களின் ஸராஸரி அளவைவிட 4,22,000 டன் அதிகமானது. இதனால் என்ன தெரிகிறதென்றால் பற்பல மகாணத்து விவஸாய டிபார்ட்மெண்டார்கள் சென்ற சில வருஷங்களாக நல்ல மாதிரியான கரும்பு ஸாகுபடி செய்வது, சாஸ்த்ரீய முறைப்படிப் பயிர் செய்வது, அதிக சேதம் ஏற்படாதபடி சர்க்கரை காய்ச்சுவது முதலிய பல சீர்திருத்தங்களை ஜனங்களிடத்தில் பரவச்செய்து அனுஷ்டிக்கும்படி செய்திருக்கிறார்கள் என்பதே இந்தியா முழுமைக்கும் வேண்டிய சர்க்கரையை இந்தியாவிலே செய்து வெளிநாட்டுக்கும் அனுப்பும்படியான நிலைமை வருவதற்கு இன்னம் காலம் செல்லும் என்றாலும் மேற்கண்ட முயற்சிகள் வீண் முயற்சிகளாகிவிட வில்லை யென்று நாம் இதனால் அறியலாம்.

### Seaports in the Madras Presidency.

**சென்னை ராஜதானியில் துறை முகங்கள் :**—சென்னை ராஜதானியில் 16 துறைமுகங்கள் இருக்கின்றன. அவைகளில் 30 கோடி ரூபாய் வ்யாபாரம் நடந்து வருகிறது. தூத்துக்குடித் துறைமுகம் மிகவும் செழிப்பானது. அதில் 7 கோடி ரூபாய் வ்யாபாரம் நடந்து வருகிறது. அதற்கு அடுத்த கொச்சி, காக்கிநடா, கள்ளிக்கோட்டை, கூடலூர், நாகப்பட்டணம், மங்களூர் இவைகளில் ஒரு கோடி முதல் 6 கோடி ரூபாய் வரையிலும் வ்யாபாரம் நடந்து வருகிறது. 1911-12 ம் வருஷத்திய வ்யாபாரம் முந்தின வருஷத்திய வியாபாரத்தைவிட அதிகம். 1911-12-ம் வருஷத்தில் கடல் ஸம்பந்தமான வேலைகளில் செலவான ரூபாய் $2\frac{1}{2}$ லட்சம். அவைகளில் கடல் ஸம்பந்தமான ஸர்வே வேலையும், தூத்துக்குடியில் கட்டி முடித்த ஸாமான்கள் இறக்கும் மேடை வேலையும் முக்யமானவை. தூத்துக்குடி துறைமுகத்தில் அதிகமான சரக்குகள் ஏற்றுமதியாயிருக்கின்றன. $2\frac{1}{4}$ லட்சம் ரூபாய் மதிப்புள்ள பருத்தி ஏற்றுமதி யாயிருக்கிறது.

# INDUSTRY.
## கைத்தொழில்.

**Supervisor of Scraps.**

**துண்டு துணுக்குகள் பரிசோதகர்.**—விளக்கு எரியும்போது எதுவும் நஷ்டமடைவதில்லை என்பது பள்ளிக்கூடங்களில் கற்பிக்கப்பட்டுவரும் ஒரு உண்மையான வசனம். குப்பை கூளம், உதவாத ஸாமான்கள் என்று சொல்லப்படுவனவெல்லாம், இருக்கத்தகாத இடங்களில் இருக்கும் உபயோகமான வஸ்துக்களே. இப்படி உபயோகமில்லை என்று சொல்லப்படும் துண்டு துணுக்குகள் குப்பைகள் முதலியவை எந்த விதத்தில் உபயோகமாகும் என்று கண்டு பிடிப்பதுதான் நிபுணர்களின் வேலை. ஒரு கைத்தொழில் கம்பெனியார் தமது கம்பெனியில் துண்டு பாகங்கள் முதலிய உபயோகமற்றவைகளைப் பரிசோதிப்பதற்கு ஒருவரை நியமித்ததில் ஒரு ஆளின் சம்பளம் லாபமானதோடு கைத்தொழிலிலும் சில ஸமயம் நல்ல லாபம் கிடைத்ததாம். இந்த வேலைக்காரரின் கடமை யென்னவென்றால், தூர எறிந்துவிடும் துண்டு ஸாமான்களையும், மற்றவைகளையும் கொண்டுபோய் ஒரு மூலையில் கொட்டுவதற்கு முன்னால் அவைகளை அவர் சோதித்துப் பார்க்கவேண்டியது. பிற்காலத்தில் உபயோகமாகக்கூடிய ஸாமான்களின் சிறிய பாகங்கள், வார்ப்புகள், இவைகளைக் குறிப்பிட்டு எழுதி வைத்துக்கொண்டு, ஓரிடத்தில் பத்ரப்படுத்திவைப்பார். அநேகந்தடவைகளில் பழைய மாதிரியான யந்த்ரங்கள் செய்யவேண்டுமென்று யாராவது ஆர்டர் கொடுக்கும்போது, பத்ரப்படுத்திவைத்திருக்கும் பாகங்களை உபயோகப்படுத்துவார்கள்.

**Cocoanut Industry of the West Coast.**

மேற்குக்கரை தென்னைப் பயிர்த்தொழில்:—சென்ற ஏப்ரல்மீ நடந்த சென்னை லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் மீட்டிங்கில் ஆனரபில் மிஸ்டர் குன்ஹிராமன் நாயனர் அவர்கள் பேசிய பட்ஜட்பேச்சில் மேற்குக்கரை தென்னை பயிர்த்தொழிலைப் பற்றிப் பின் வருமாறு பேசினர். "மேல்கரை ஜில்லாக்கள் ஸம்பந்தப்பட்ட மட்டில் வேறொரு முக்ய விஷயத்தைக் குறித்து நான் சிப்பார்சு செய்யத் துணிகிறேன. அவ்விஷயம் தென்னைப் பயிர்தொழிலைப் பற்றியது. அப்பயிர்த் தொழிலின் பிற்கால நிலையைப்பற்றிக் கவலை யெடுக்கவேண்டியதா யிருக்கிறது. மேல்நாடுகளுக்கு ஏற்றுமதியாகும் தென்னஞ் சரக்குகளில் அநேகம் மலையாளம் தென்கன்னடம் இவ்விரண்டு ஜில்லாக்களிலுமிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வருஷத்துக்கு வருஷம் ஏற்றுமதி அதிகமாய்க் கொண்டே போகிறது. மலையாளம் கொப்பறைக்கும், தேங்காய் நார்க் கயிறுக்கும் உள்ள க்ராக்கி யதிகமாய்க் கொண்டேபோவதில் தடையில்லை. இப்படி தேவை யதிகமாய்க்கொண்டே போகிறபடியால் அதிக நிலங்களில் தென்னை பயிர் செய்யப்பட்டு வருகிறது. மலையாளம் கொப்பறைச் சரக்குக்கு ஐரோப்பா கண்டத்தில் நல்ல விலை கிடைத்துக்கொண்டிருக்கிறது. ஆனல் மட்ட (கீழ்த்தரமான) நிலங்களில் தென்னை பயிர் செய்யப்படுமானல் அதற்குள்ள க்ராக்கிகுறைந்து போய்விடும். தென்னை மரங்களில் புதிய நோய்கள் உண்டாகின்றன வென்றும் தெரியவருகிறது. இது விஷயம் ஜாக்ரதையா யிராவிட்டால் தென்னை மரப் பயிர்த்தொழிலுக்கு ரொம்ப நஷ்டம் சீக்ரம் ஏற்பட்டுவிடும்.

ஆகையினலே மலையாளத்திலாவது தென் கன்னடத்திலாவது நிலவளமுள்ள ப்ரதேசத்தில் பரீட்சார்த்தமாய் கவர்ன்மெண்டார் ஒரு தென்னம் பண்ணை ஏற்படுத்தி அதில் எவ்வித நோய்க்கும் ஈடு கொடுக்கக்கூடிய தென்னம் பிள்ளைகளைப் பயிர்செய்து பார்க்கவேண்டும் என்று சொன்னர்.

இதற்கு ஆனரபில் மிஸ்டர் பட்டர் வொர்த் பதில் சொன்னர். ஆனரபில் மிஸ்டர் குன்ஹிராமன் நாயனர் மலையாளத்தில் சில விடங்களில் தென்னை மரங்களில் நோயுண்டாகி யிருக்கிறதென்று சொன்னது வாஸ்தவந்தான் என்றும், அது டிபார்ட்மெண்டாருக்குச் சிலகாலமாகத் தெரிந்திருக்கிற தென்றும், கவர்ன்மெண்ட் மைகாலஜிஸ்ட் மிஸ்டர் மக்ரே இந்த வ்யாதி விஷயமாய் ஆராய்ச்சிசெய்து கொண்டிருக்கிருரென்றும், ஆரைபில் மிஸ்டர் நாயனர் விவஸாய டிரெக்டரிடம் இது விஷயமாய் முதனள் பேசிக்கொண்டிருந்ததில், டிப்பார்ட்மெண்ட் இந்த விஷயமாய் அச்ரத்தையாயில்லை என்பதை அவர் அறிந்து கொண்டிருப்பார் என்றும் பதில் சொன்னர்.

# ECONOMICS.
## பொருளாதாரம்.

### Cattle Mortality.

கால்நடை மரணங்கள்.—1911-12-ம் வருஷத்தில் 28,354 கால்நடைகள் மரணமடைந்திருக்கின்றன. 1912-ம்வருஷம் ஸெப்டம்பர் மாஸம் முடிவு வரைக்கும் எடுத்த கணக்கின்படி சென்ற வருஷத்தைவிட 1165-கால்நடைகள் அதிகமாக மரணமடைந்திருக்கின்றன. அதிக மரணத்திற்குக் காரணம் தொத்து வ்யாதி என்று சொல்லலாம். 9717-க்கு கால்நடை வ்யாதி அம்மை குத்தப்பட்டது. அதினால் மரணங்கள் குறைந்திருக்கின்றன. காட்டு ம்ருகங்களுக்கு 5,620 கால்நடைகள் இரையாயின. மலையாளத்திலும் தென் கன்னடத்திலுந் தான் இவ்வித மரணங்கள் அதிகம். விஷம் வைக்கப்பட்டு இறந்துபோன கால்நடைகளின் ஸங்க்யை 42. இவ்வித மரணங்களுள் வேலூர் தாலூகாவில் 18 நேர்ந்திருக்கின்றன.

### Deaths from Plague in Madras Presidency.

சென்னை ராஜதானியில் ப்ளேக் என்னும் வ்யாதியால் மரணம்.—1898-ம் வருஷம் முதல் 1912-ம் வருஷம் அக்டோபர் மாஸம் வரையிலும் சென்னை ராஜதானி முழுவதும் 1,22,144-பேர்களுக்கு ப்ளேக் நோய்கண்டது. அதில் 95,006 பேர் இறந்துபோனார்கள்.

| | | மரணம் |
|---|---|---|
| பல்லாரியில் | ... | 434,59 |
| சேலம் | ... | 175,86 |
| கோயமுத்தூர் | ... | 14,184 |
| வட ஆற்காடு | ... | 6,103 |
| அனந்தபுரம் | ... | 4,259 |
| தென்கன்னடம் | ... | 3,282 |

ஸ்வதேச ராஜ்யங்களில், சாந்தூர் ராஜ்யத்தில் 138 பேருக்குக் கண்டு 116 பேர் இறந்துபோனார்கள். குண்டூர், பங்கனபல்லி, புதுக்கோட்டை இவைகளில் ப்ளேக்கே இல்லை.

### Occupation of the People.

ஜனங்களின் தொழில்கள்:—1911-ம் வருஷ ஸென்ஸ்படி 10,000 க்கு 6,818 விவஸாயிகள்; 1901-ம் வருஷ ஸென்ஸஸ்ப்படி 10000 க்கு 6,831 விவஸாயிகளாயிருந்தார்கள். மீன் விற்கிறவர்கள் தொகை100-க்கு 8 அதிகமாயிருக்கிறது; மீனைப் பதப்படுத்துகிறவர்களுடைய தொகையோ 100-க்கு 30 அதிகமாயிருக்கிறது.

ஸ்வல்பமாயுள்ள பஞ்சாலைகள், சணல்சாலைகள், சர்க்கரை ஆலைகள், ஸிமெண்ட் சாலைகள் இவற்றை நீக்கிவிட்டுப் பார்த்தால், தற்கால முறைப்படி அமைக்கப்பட்டுள்ள தொழில்சாலைகள் சென்னை மாகாணத்தில் இல்லை. இக்குறைவுக்கு நிலக்கரி இல்லாமலிருப்பது ஒரு முக்ய காரணமாயினும், படித்த வகுப்பார்கள் தொழில் முயற்சிகளிலிருந்து முற்றிலும் ஒதுங்கி நிற்பதே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

### Milk Supply of Bombay.

பம்பாய் பால் ஸப்ளை:—பம்பாய், கல்கட்டா, சென்னை போன்ற பெரிய பட்டணங்களில் சுத்தமான பால் கிடைப்பது அருமை யென்பது தெரிந்த விஷயம். கலப்படமாயுள்ள பாலை வாங்கிச் சாப்பிட்டு ஜனங்கள் பல நோய்களுக்கு உள்ளாகிறார்கள். அப்பாலை குழந்தைகளுக்குக் கொடுப்பதால் அவைகள் கழிச்சல் முதலான குடல் நோய்கள் தாக்கப்பெற்று இறந்து போகின்றன. இப்படி அசுத்தப்பாலைச் சாப்பிட்டு குழக்தைகள் ஏராளமாயிறப்பதைத் தடுப்பதற்கும், பொதுவாய் ஜனங்களின் தேகஸௌகத்தைக் காப்பதற்கும், பம்பாயில் ஒரு பால்சாலை ஸ்தாபிக்கப்படப் போகிறதென்று தெரிந்து ஸந்தோஷிக்கிறோம். டாக்டர் கெ. எம். துபாஷ் என்ற வைத்யர் ஒருவர் பால் ஸப்ளை கம்பெனியொன்று ஸ்தாபிப்பதற்கு வேண்டிய ப்ரயத்தனங்களைச் செய்ய, அதற்கு 50,000-ரூபாய் மூலதனம் ஏற்கெனவே சேர்ந்துவிட்டது. அந்த கம்பெனியின் ஸ்தாபனத்தை பம்பாய்க் கார்பரேஷனைச் சேர்ந்த ஹெல்த் டிபார்ட்மெண்டாரும் பம்பாய் ஸௌகாதார ஸங்கத்தாரும் அங்கீகாரம் செய்திருக்கிறார்கள். தர்மசிந்தை மேலிட்ட அநேக ப்ரபுக்களும் அந்தக் கம்பெனியை ஆதரிப்பதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். அந்தக் கம்பெனியாருக்கு அதிக லாபம் ஸம்பாதிப்பதாய் யோசனையில்லை. குழந்தைகளின் மரண விகிதம் குறையும் வழிகளைத் தேடவேண்டு மென்பதே அவர்களின் நோக்கம். அந்தக் கம்பெனி பம்பாய்க்கு வெளியிலே ஒரு பால் தயிர் வெண்ணைச் சாலையை ஸ்தாபித்து தினந்தோறும் பாலைப் பம்பாய்ப் பட்டணத்துக்கு யெடுத்துவந்து விற்கப்போகிறார்கள்.

# CO-OPERATION.

## கோவாபரேஷன்.

### Co-operative Credit Banks for Agriculture.

**விவஸாயிகளுக்கு ஐக்யநாணய பாங்கிகள்.**— விவஸாயிகளுக்கு வட்டி குறைச்சலாய் பணம் கொடுத்து உதவுவதில் இங்க்லாந்து தேசம் மற்ற தேசங்களுக்கு ரொம்ப பின்தங்கியிருக்கிறது. இங்க்லாந்தில் ரொம்ப பெரிய பண்ணைகளே அதிகம். பண உதவி தேவையாயிருக்கும் சிறு பண்ணைக்காரர்கள் ரொம்பக் குறைவு.

இங்க்லாந்தில் போர்ட் ஆப் அக்ரிகல்சரின் ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் ரன்ஸிமன் என்பவர் ஐக்ய நாணய பாங்கிகளுக்கு உதவி செய்யும் விஷயமாய் ஜாயிண்ட் ஸ்டாக் பாங்கிகளோடு ஆலோசனை செய்ததில், ப்ரபல பாங்கிகளில் அநேகம் ரெஜிஸ்டர் செய்த கோவாபரெடிவ் க்ரெடிட் ஸொஸைடிகளோடு வ்யாபார நடவடிக்கை வைத்துக்கொள்ள ஸம்மதித்திருக்கின்றனவென்று தெரியவருகிறது. ஷை பாங்கிகள் ஸங்கங்களின் டிப்பாஸிட்டுகளைப் பெற்றுக்கொண்டு ஸமயத்துக்குத் தகுந்தபடி எவ்வளவு அதிக வட்டி கொடுக்கலாமோ அவ்வளவு கொடுப்பதாகவும், அவைகள் அட்வான்ஸ் வேண்டுமென்றால் ஸாதகம் செய்து கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டிருக்கின்றன. அப்படிக்கு ஸங்கங்களுக்குக் கொடுத்த கடன், பெயருக்கு மாத்ரம் கேட்கும்போது திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றாலும், ஸாதாரணமாக ஒரு குறிப்பிட்ட வட்டியின்பேரில் 12-மாஸம் வரையில் கொடுபடாமலிருக்கலாம், அப்புறம் கடனைப் புதுப்பிக்கவோ பாதியாகக் கொடுக்கவோ அல்லது முழுமையுமே அடைத்துவிடவோ செய்யலாம். அந்த பாங்கிகளின் நாட்டுப்புறத்து மானேஜர்கள் ரெஜிஸ்டர் செய்யப்பட்ட ஸங்கங்கள் ஸ்தாபிப்பதிலும், அவைகளை வைத்து நடத்துவதற்கு வேண்டிய ஆலோசனைகள் சொல்லுவதிலும் உதவுவார்கள். இன்னம் வேண்டுமானால் அந்த ஸங்கங்களில் மெம்பராக இருக்கவேண்டுமென்ற நிபந்தனை யில்லாவிட்டால் பாங்கி மானேஜர்கள் அந்த ஸங்கங்களின் சம்பளமில்லாத பொக்கிஷக்காரராயுமிருப்பார்கள்.

### Use of the Word "Co-operative".

கோவாபரேடிவ் என்னும் வார்த்தையை உபயோகித்தல் :—பின்வரும் விளம்பரம் வங்காள கவர்ன்மெண்டாரால் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறது.

1912-ம் வருஷத்து கோவாபரெடிவ் ஸொஸைடீஸ் ஆக்ட் 47-ஸெக்ஷன், 1-வது உள்பிரிவுப்படி, அந்த ஆக்டின்படி ரெஜிஸ்டர் செய்யப்பட்ட கோவாபரெடிவ் ஸொஸைடிகளைத் தவிர மற்ற எவரும் மாகாண கவர்ன்மெண்டின் அனுமதியில்லாமல் கோவாபரெடிவ் என்ற பதம் சேர்ந்துள்ள பெயருடன் இனிமேல் தொழில் நடத்தக்கூடாதென்றும், அதே ஸெக்ஷன் 2-வது ஸப் ஸெக்ஷன்படி, இந்த நிபந்தனையை மீறி நடப்பவர்கள் அபராதத்துக்கு உள்ளாவார்கள் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மேலே சொன்ன 47-வது ஸெக்ஷனில் குறித்திருக்கிறபடி, 1912-ம் வருஷம் மார்ச்சுமீ 1-தேதிக்கு முன்னால் நடந்துவந்த தொழிலின் பெயரை நடத்தி வந்தவர் அல்லது அவருடைய வார்ஸுகள் இன்னம் உபயோகித்து வருவதில் கோவாபரெடிவ் என்ற சொல் இருப்பதற்கு அந்த ஸெக்ஷனின் மேலே குறித்த நிபந்தனைகள் பாதிக்கமாட்டா."

### Village Punchayets and Co-operation.

**க்ராமப் பஞ்சாயத்து.**— சென்ற மார்ச்சுமீ 22-ந் தேதி யன்று மதுரையில் நடந்த மதுரை ராமநாதபுரம் கூட்டுறவுக் கான்பரன்ஸில் ஒருவிசேஷ போதனை முறை நடந்தது. ஒரு ஐக்ய நாணய ஸங்கத்தை க்ராமப் பஞ்சாயத்தார்கள் நடத்த வேண்டியது எப்படி என்றும், நடத்துவதால் உண்டாகக்கூடிய நன்மைகள் என்ன என்பதும், சில சிறு பிள்ளைகளைக்கொண்டு நாடகம்போல் நடத்திக் காட்டப்பட்டது. பையன்கள் நன்றாய்த் தாயார் செய்யப்பட்டிருந்தார்கள். ஐக்ய நாணய ஸங்கத்தில் மெம்பர்களாக சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்களின் விண்ணப்பங்களை அந்தப் பஞ்சாயத்தார்கள் மிகக் கவனத்துடன்சோதித்துப் பார்த்தும், கடன் வேண்டுமென்று கேட்டுக்கொண்டவர்களுடைய விண்ணப்பங்களைத் தொகையைக் கொடுப்பதற்குமுன் நன்றாய் ஆராய்ந்துபார்த்தும் கெட்ட நடத்தை உள்ளவர்கள் கூட்டுறவுநாணய ஸங்கங்களின் மெம்பர்களாவதால் நல்ல நடத்தை உள்ளவர்களாகத் திருந்துவதையும், மட்டுக்கு மிஞ்சி செலவு செய்கிறவர்கள் ஐக்ய நாணய ஸங்கங்களைச் சேர்ந்து செட்டுள்ளவர்களாகத் திருந்துவதையும், குடிக்கு இரையானவர்கள் அந்தக் கெட்ட பழக்கத்தை விட்டு விடுகிறதையும், க்ராம ஜனங்கள் ஐக்ய நாணய ஸங்கங்களைச் சேர்வதால் ஒற்றுமைப்பட்டுப் பொது விஷயங்களில் ஊக்கமுடையவர்களாவதையும் அந்தப் பையன்கள் ஆச்சர்யமாக நடித்துக்காண்பித்தார்கள்.

# BANKING.

## பாங்கி வ்யாபாரம்.

### Royal Commission on India Office Finance

ராயல் கமிஷன்.—இந்திய பண விஷயத்தைப்பற்றியும் கரென்ஸி நோட்டுகளைப் பற்றியும் நிர்வாக ஸம்பந்தமான விஷயங்களை விசாரிப்பதற்காக ஒரு ராயல் கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கமிஷனுக்கு ரைட் ஆனரபில் ஆஸ்டின் சேம்பர்லெய்ன், எம். பி. சேர்மனாவார். ஒன்பது மெம்பர்கள் இருக்கிறார்கள்.

இந்தியா கவர்ன்மெண்டின் மிச்சப் பணத்தை எந்த விடத்தில், அதாவது இந்தியாவிலா அல்லது இங்க்லாந்திலா வைத்திருப்பது; எப்படி மானேஜ் செய்வது, கௌன்ஸில் பில்லுகளை லண்டனில் விற்பது, மாற்றுவது, 1898-ம் வருஷத்து கரன்ஸிகமிட்டியின் யோசனைகளை அனுஸரித்தோ, அவைகளோடு கூட வேறு வழிகளாலோ ரூபாய்க்கும் பவுனுக்கும் உள்ள ஸம்பந்தத்தை நிலைநிறுத்த இந்தியா கவர்ன்மெண்டும் இந்தியா ஸெக்ரடரியும் செய்திருக்கும் ஏற்பாடுகள், முக்யமாய் சோல்ட் ஸ்டாண்டர்டு, பேபர் கரன்ஸி ஆகிய இந்த ரிஸர்வுபணங்களை எங்குவைத்திருப்பது, எப்படி உபயோகப்படுத்துவது, இப்பொழுது நடந்துவரும் அனுஷ்டானங்கள் இந்தியாவுக்கு அனுகூல மானவையா இந்தியா ஆபீஸின் பண ஏற்பாடுகள், அனுஷ்டானங்கள், ஆகிய இவற்றைப்பற்றி விசாரணை செய்து யோசனை செய்வதற்காக இந்தக் கமிஷன் ஏற்பட்டிருக்கிறது.

### Responsibilities of Banking Institutions.

பாங்கிகளின் பொறுப்பு.—சென்ற வருஷத்தில் முறிந்து போன பர்மா பாங்கின் உத்யோகஸ்தர்கள் சிலர்மேல் குற்றஞ் சுமத்தப்பட்டு அவர்கள் ஸமீபத்தில் ரெங்கூன் சீப் கோர்ட்டால் தண்டிக்கப்பட்டார்கள். அவர்கள் அப்பீல் செய்திருக்கிறார்கள். அவர்கள் தண்டிக்கப்பட்டதைப்பற்றி 'காபிடல்' என்ற ஆங்கிலோ இந்தியப் பத்ரிகை ஆத்ரப்பட்டு எழுதுகிறது. "பாங்கி முறிந்துபோகும்போதெல்லாம் டிரெக்டர்களுக்கோ அல்லது பங்காளிகளுக்கோ கடுங்காவல் தண்டனை விதித்துவிட வேண்டுமென்று ஏற்பட்டு விட்டால் மிக நன்றாகத்தானிருக்கும்! சீனாவில் ஒரு பாங்கி முறிந்துபோனால் அதன் டிரெக்டர்களையும் மானேஜர்களையும் அந்த பாங்கின் கணக்குப் புஸ்தகங்களுடன் சேர்த்து வைத்துக் கொளுத்திவிடுகிறார்களாம். அந்த மாதிரி செய்வதால் ப்ராஸிகூஷன் செய்யும் ச்ரம மில்லாமற் போய்விடும். இம்முறையை பர்மாவிலும் சென்னையிலும் அனுஷ்டிக்கப்ரியப்படுவார்களென்று நினைக்கிறோம். அந்த மாகாணங்களில் சில கேஸ்களில் நீதி செலுத்தப்பட்டதைப்பார்க்க இங்க்லீஷ் முறைப்படி நீதி செலுத்தப்படுவதாக நமக்குத் தெரியவில்லை. ஸர் ஜார்ஜ் அர்பத்நட்டை சென்னையில் விசாரித்தது நேற்றுத்தான்போல் நமக்கு நன்றாய் ஞாபகமிருக்கிறது. அந்தக் கேஸின் விசாரணையின் போது ப்ராஸிகூஷன் வக்கீலும் ஜூரிகளும் வெகு அன்யோன்யமாகப் பேசிக்கொண்டார்கள். அந்தக் கேஸில் அப்பீல் செய்யப்பட்டிருந்தால், விசாரித்த ஜட்ஜிக்கு வெட்கமுண்டாகும்படி ப்ரிவிகவுன்ஸில் ஜட்ஜ் அபிப்ராயஞ் சொல்லி யிருப்பர். ஆனால் அந்தக் கேஸில் அப்பீல் செய்யாமலிருந்தால், ஸர் ஜார்ஜ்மேல் வேறு நடவடிக்கை ஒன்றும் செய்யப்படமாட்டாது என்று சென்னைக் கவர்ன்மெண்டார் சொன்னார்கள். அதனால்தான் ஸர்ஜார்ஜ் அப்பீல் செய்யவில்லை". இவ்வாறு "சாபிடல்" பத்ரிகை எழுதியதைப்பற்றி சுதேசமித்திரன் பின்வருமாறு எழுதுகிறது.

இந்தப் பத்ரிகை சொல்லுவதைக் கேட்டால், ஒரு பாங்கி முறிந்து போனவுடன் பாக்கி இருக்கும் ஸ்வல்பத் தொகையை பாத்ய முள்ளவர்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டு இருக்க வேண்டியதுதான். பாங்கை நடத்தினவர்கள் வேண்டுமென்று மனப்பூர்வமாக ஜனங்களை மோசம் செய்திருந்தாலும் அவர்களை ஒன்றும் செய்யக்கூடாது. அவ்வித நிலைமை உண்டாய் விட்டால், பாங்கிகளிடத்தில் ஜனங்களுக்கு எவ்விதம் நம்பிக்கை உண்டாகும்? பாங்கிகளை மிகுதியாக நம்பி ஜனங்கள் தங்களுடைய பணங்களை அவற்றில் போட்டு வைத்தாலல்லவோ, தேசத்தின் த்ரவியமானது வ்யாபாரம், தொழில் முயற்சி, முதலிய அவச்யங்களுக்கு உபயோகப்படும். மெஸ்ஸர்ஸ் அர்பத்நட் பாங்கி முறிந்த காரணத்தினாலே, அநேகர் பாங்குகளில் பணத்தைப்போட நம்பிக்கை இழந்திருக்கவேண்டும். பாங்கிகளின் நிர்வாகம் ஒழுங்காய் நடைபெறுமென்றும், ஒழுங்குத் தவறு உண்டானால், ஸம்பந்தப்பட்ட உத்யோகஸ்தர்கள் தண்டனைக்குள்ளாவார்கள் என்றும் ஜனங்களுக்கு நம்பிக்கை இருக்க வேண்டியது அவச்யம். ஆகையால் கோர்ட்டுகள் எவ்விதம் தீர்மானம் செய்தபோதிலும், குற்றஞ் செய்ததாக எந்த பாங்கின் உத்யோகஸ்தர்கள் மீது ஸந்தேகம் உண்டாகிறதோ அவர்களை கவர்ன்மெண்டார் விசாரணைக்கு கொண்டு வருவது முற்றிலும் விரும்பத்தக்கதே என்று எழுதுகிறது.

# INSURANCE.
# இன்ஷ்யூரென்ஸ்.

### Cost of Assurance.

இன்ஷ்யூரென்ஸின் செலவு:—அநேகம் பேர்கள் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ஸ்வல்ப ப்ரீமியத்தைப் பெற்றுக்கொண்டு சீக்ரத்தில், அதாவது இன்ஷ்யூர் செய்து ஒரு வருஷங்கூட ஆவதற்கு முன்னுலேயே, இறந்துபோனுல் ஏராளமான பணம் கொடுக்கக்கூடு மென்று நினைப்பதாகத் தோன்றுகிறது. அதாவது ஸுமார் 50 ரூபாய் ப்ரீமியம் மாத்ரம் கொடுத்துவிட்டு 1000 ரூபாய் வேண்டு மென்கிறுர்கள். மேலும் ஒரு கம்பெனியில் சேர்ந்தவர்கள் ஏதாவது ஒரு காரணத் தைக்கொண்டு ப்ரீமியம் கட்டுவதை நிறுத்திவிட்டால் கம்பெனியார்கள் தாங்கள் நிறுத்திய தேதிவரையில் கொடுத்துவந்ததொகை முழுவதையும் திருப்பிவிட வேண்டுமென்றும் சொல்லுகிறுர்கள். இது எப்படி ந்யாயமாகும்? ஒரு கம்பெனி வைத்து நடத்துவ தென்றுல் அதற்குரொம்ப செலவு ஏற்படும் என்பதை அவர்கள் மறந்துவிடுவதாகத் தோன்றுகிறது. முதல் சிலவருஷங்களில் இறந்து போகிறவர்களுக்குப் பணம் கொடுத்தாகவேண்டும். இன்ஷ்யூர் செய்து நடுவில் விட்டுவிடுகிறவர்கள் அதுவரையில் கொடுத்துவந்த பணத்தில் ஒருபாகம் மேலே சொன்னபடிக்கும், இன்னம் மற்ற கார்யங்களுக்கும் செலவழிந்துபோயிருக் குமாதலால் நடுவில் இன்ஷ்யூரென்ஸை நிறுத்திவிடு கிறவர்களுக்குப் பூராத் தொகையும் கொடுப்பது முடியாததாகும் என்பதை அவர்கள் மறந்து விடுகிறுர்கள்.

### Agents and Selection of Risks.

ஏஜெண்டுகளும் இன்ஷ்யூர்செய்யத்தகுந்தவர் களைத் தெரிந்தெடுத்தலும்:—சில ஸமயங்களில் இன்ஷ்யூர் செய்யத் தகாதவர்கள் இன்ஷ்யூர் செய்வ தால் கம்பெனிக்கு ரொம்ப நஷ்டம் ஏற்படுவதுண்டு.

வ்யாதியால் கஷ்டப்படுகிறவர்கள், வயோதிகர்கள் முதலியவர்கள் இன்ஷ்யூர் செய்து சிலகாலத்துக்குள் ளேயே இறந்துபோனுல் அவர்களின் ஸந்ததியார் களுக்கு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள் ஏராளமான தொகை கொடுக்க வேண்டிவரும். இன்ஷ்யூர்செய் யத்தகுந்தவரா என்று தெரிந்துகொள்ளவும் தகாத வர்கள் இன்ஷ்யூர் செய்து கம்பெனிக்கு அதிக நஷ்டம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும் ஸரியான வர்களாயும் நம்பக்கூடியவர்களானவுமான ஏஜெண் டுகள் ஒரு கம்பெனிக்கு அமைதல் அவச்யம்.

சில ஏஜெண்டுகள் இன்ஷ்யூர் செய்கிறவர்கள் தகுதியானவர்களா இல்லையா என்று தீர்மானித்து இன்ஷ்யூரென்ஸை மறுத்தலும் இன்ஷ்யூர்செய்ய ஒப் புக்கொள்ளுதலும், தங்கள் பொறுப்பல்ல; கம்பெனி யின் பொறுப்பாகும் என்று சொல்லாம். ஆனுல் நல்ல ஏஜெண்டுகள்-கம்பெனியின் கார்யங்களைத் தம்கார்ய ங்களாகஎண்ணி தங்கள் கம்பெனிகளோடு தாங்களும் வித்யாஸமில்லாதவர்களாக நினைக்கும் ஏஜெண்டுகள் அப்படித் தங்கள் பொறுப்பு இல்லையென்று சொல்ல மாட்டார்கள்.

இன்ஷ்யூர் செய்யத்தகுந்தவர்களை ஸரியான படி தெரிந்தெடுத்து இன்ஷ்யூர்செய்ய விடுவ தால், இன்ஷ்யூர் செய்தவர்களில் சாவுவிகிதம் குறைவுபடும்; சாவுவிகிதம் குறைவுபட்டால் கம்பெ னிச்கு இன்ஷ்யூரென்ஸில் ஏற்படும் செலவுமட்டுப் படும். அப்படிச்செலவு எவ்வளவுச்செவ்வளவு குறை கிறதோ அவ்வளவுச்கு இன்ஷ்யூர் செய்தவர்களுக் கும், ஏஜெண்டுகளுக்கும் இன்ஷ்யூரென்ஸ் கம்பெ னிக்கும் ரொம்ப நல்லது.

### Selection of the Best Office.

இன்ஷ்யூர் செய்வதற்கு ஏற்ற கம்பெனிகள்:— இது விஷயமாய் முதலில் கவனிக்க வேண்டிய விஷ யம் ஆபீஸ் நல்ல ஸ்திதியிலிருக்கிறதா என்பது. குறைந்த ப்ரீமியம், கட்டவேண்டிய ப்ரீமியத்தில் ஒருபாகம் ரகஸ்யமாய் குறைத்துக் கொடுத்தல், முத லிய ஏற்பாடுகள் எல்லாம், தாம் கட்டும் பணம் மோசம் போகாது என்று நிச்சயமாய் ஏற்பட்டாலொழிய ஆளை ஏமாற்றுவதற்கேற்பட்ட கார்யங்களாகும். தாம் பணம் செலுத்த வேண்டியிருக்கும் எல்லா கேஸுகளிலும் கம்பெனி பணம் திருப்பிக்கொடுப்பதற்குத் தக்க ஐவேஜியிருக்கிற தென்பதை கம்பெனியார் ரூபிக்க வேண்டும். ஒரு இன்ஷ்யூரென்ஸ் கம்பெனி நன் ருய் லாபகரமாய் வேலை நடத்திவருகிறதா என்பதை அறியவேண்டுமானுல், அந்தக் கம்பெனி பாலிஸி ஹோல்டரிடம் எப்படி நடந்துவருகிறது என் பதைக் கொண்டு நிதானிக்கலாம். இன்ஷ்யூர் செய் யும் ஒவ்வொருவனும் தான் வெகுகாலமாக செட்டாக வும் முன்யோசனையோடும் இன்ஷ்யூரென்ஸ் கம் பெனியில் போட்டுவைக்கும் பணம் கம்பெனிக்கு என்ன அஸந்தர்ப்பம் நேர்ந்தாலும் நஷ்டமாகக் கூடாதென்று நிர்பயமாய்த் தூங்கவே இஷ்டப்படு வான். தனது ஸொந்த குற்றத்தாலன்றி வேறு எந்தக் காரணத்தாலும் தான் பெற்றுக் கொண்ட பாலிஸி ரத்தாகாமல் சாச்வதமாகவும் இருக்கவேண்டும் என் றும் விரும்புவான். இப்பேர்ப்பட்ட ஸௌகர்யங்கள் உள்ள கம்பெனியில் தான் இன்ஷ்யூர் செய்வது நலம்,

# EDUCATION.
## வித்யா விஷயம்.

### The Bombay College of Commerce.

பம்பாயில் விவஸாய காலேஜ்.—பம்பாயில் ஒரு வ்யாபாரக் காலேஜ் ஏற்படுத்தப்போவதாகச் சென்ற மார்ச்சுமாஸம் தெரிவித்திருந்தோம். அது விஷயமாய் பம்பாயில் கவர்ன்மெண்டார் ஒரு ஸ்கீம் (ப்ரேரணை) தயாரித்து இந்தியா மந்த்ரிக்கு அனுப்பியிருந்தார்கள். இப்போது அந்த ஸ்கீம் இந்தியா மந்த்ரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டதென்று பம்பாய் கவர்ன்மெண்டு கெஜட்டில் வெளியாயிருக்கிறது. அந்தக் காலேஜுக்கு ரூ. 1125-ரூபாயில் ஒரு ப்ரின்ஸிபாலும், ஒவ்வொருவருக்கும் 875-ரூ சம்பளத்தில் இரண்டு ப்ரொபஸர்களும், ஒவ்வொருவருக்கும் 300-ரூ முதல் 500 ரூ வரையில் சம்பளத்துடன் இரண்டு லெக்சரர்களும் நியமிக்கப்படுவார்கள். ப்ரின்ஸிபாலும் ப்ரொபஸர்களும் இங்க்லாந்திலிருந்து வருவார்கள்; லெக்சரர் வேலைகள் யோக்யதைபெற்ற இந்தியர்களுக்குக் கொடுக்கப்படும். காலேஜ் கவர்ன்மெண்டின் மேம்பார்வையில் இருக்கும். பம்பாய் யூனிவர்ஸிடியோடு சேர்க்கப்பட்டிருக்கும். இந்தக் காலேஜை மானேஜ் செய்ய 13 பேர் சேர்ந்த போர்ட் அப் மானேஜ்மெண்ட் என்று ஸபை ஏற்படுத்தப்படும். லைப் இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிகள், ப்ராவிடெண்ட் கம்பெனிகள் இவைகளை ஒழுங்கு பெறச் செய்வதற்காக ஸமீபத்தில் செய்யப்பட்ட சட்டத்தினால் பயிற்சியடைந்த ஆடிடர்களும் ஆக்சுவரிகளும் ரொம்பபேர் வேண்டியிருக்கும் என்றும், அதற்கு இந்த காலேஜ் ரொம்பவும் ஏற்றதென்றும் இந்திய மந்த்ரி அபிப்ராயப்படுகிறாராம்.

### South Indian Teachers Union.

தென்னிந்தியா உபாத்யாயர் ஸங்கம்.—தென்னிந்தியா உபாத்யாயர்களின் ஸங்கத்தார் சென்ற மாஸம் கவர்னரைக் கண்டு ஒரு அட்ரெஸ் வாசித்ததாகச் சொன்னோம். அந்த அட்ரெஸில் அந்த ஸங்கத்தின் சரித்ரத்தைச் சுருக்கமாய்க் கூறிவிட்டு, ப்ரைவேட் ஸ்கூல்களுக்கு க்ராண்டுத் தொகை அதிகமாகக் கொடுக்கும்படி கவர்ன்மெண்டார் க்ராண்டு இன் எய்ட் கோடு விதிகளை அனுகூலமாய்ப் பரிசோதனைசெய்து திருத்தவேண்டும் என்றும், ப்ரைவேட் ஸ்கூலிலுள்ள உபாத்யாயர்களுக்கு உதவியாக ஒரு ப்ராவிடண்டு பண்ட் கவர்ன்மெண்டார் ஏற்படுத்த வேண்டுமென்றும், வித்யா ஸம்பந்தமான விஷயங்களைப்பற்றி ப்ரைவேட் ஸபைகளின் அபிப்ராயங்களை கேட்கும்படியான ஸந்தர்ப்பம் வரும்போது கவர்ன்மெண்டார் இந்த ஸபையின் அபிப்ராயத்தையும் கேட்கவேண்டுமென்றும் கேட்டிருந்தார்கள். அதற்கு கவர்னர் பதிலாக, ப்ரைவேட் ஸ்கூல்களுக்கு க்ராண்ட்டுத்தொகை அதிகப்படுத்துவதற்காக க்ராண்ட் இன்-எய்ட் கோட் அனுகூலமாகத் திருத்தவேண்டும் என்ற விஷயம் கவர்ன்மெண்டாருடைய ஆலோசனையில் இருந்து வருகிறது. வருஷாவருஷம் கொடுத்துவரும் 80,000 ரூபாய் இம்பீரியல் க்ராண்டில் சென்றவருஷம் உபாத்யாயர்களின் சம்பளம் முதலியவற்றின் அபிவ்ருத்திக்காகப் பெரும்பாகம் செலவழிக்கப்பட்டது. ப்ரைமெரி ஸ்கூலுக்கு ஏற்கனவே ஏற்பட்ட க்ராண்டுத் தொகையை அதிகமாக்கிக் கொடுக்கும் அதிகாரம் இன்ஸ்பெக்டிங் ஆபீஸர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. கட்டிடத்திற்காக இதுவரையிலும் மூன்றிலொரு பாகம் க்ராண்டு கொடுத்துக்கொண்டு வந்ததை மாற்றி இப்பொழுது பேர்பாதி கொடுக்கும்படி விதி செய்யப்பட்டிருக்கிறது கவர்ன்மெண்டார் இனி ப்ரைவேட் ஸ்கூல்களின் விஷயத்தில் தாராளமாய் க்ராண்டு கொடுத்து வருவதில் ச்ரத்தை யெடுத்து வருவார்கள். 1909-ம் வருஷம் மிஸ்டர் ஜே. எச். ஸ்டோன் ப்ராவிடெண்டு பண்டு விஷயமாய் செய்த ஸ்கீமை சென்னை கவர்ன்மெண்டார் ஐவேஜி போதாதனாலும், வேறு நிர்வாக ஸங்கடங்களாலும் ஒப்புக்கொள்ள இயலாமல் போயிற்று. இப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டும், சென்னை கவர்ன்மெண்டும், ப்ராவிடெண்ட் விஷயத்தில் அதிக அக்கரை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மேலும் இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களுடைய தீர்மானத்திலும் இதுவிஷயமாய் வற்புறுத்தி யிருக்கிறார்கள். மிஸ்டர் ஸ்டோனுடைய ஸ்கீம் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. மூன்[illegible] கேட்ட விஷயத்தில் ஒன்றும் இப்போ[illegible]கள் வந்து சொல்[illegible]ன் சொல்ல முடியாவிட்டாலும் நீ[illegible]டால் கவனிக்கப்படும் அபிப்ராயம் கவர்ன்மெ[illegible]று ஸாதகமான பதில் சொன்று சொல்வேன், என்[illegible] ஸந்தோஷப்படுத்தி அனுப்பினார்.

# ECONOMIC PRODUCTS.
## விலையுள்ள பொருள்கள்.

**Weight of Cocoanut.**

தேங்காயின் நிறை.—பொறுக்கி யெடுத்த 100 தேங்காய்கள் ஸராஸரியில் 150 ராத்தல் நிரையுள்ளவை. இவைகளிலுள்ள பருப்பு 60 ராத்தலாகும். அதைக் சாயவைத்தால் 33 ராத்தல் காய்ந்த பருப்பாகும்.

**Perfumes.**

வாஸனை த்ரவ்யங்கள்:—இந்தியாவிலே வாஸனைகள் செய்ய அனுஷ்டிக்கும் முறைக்கும், மேல் நாட்டில் அனுஷ்டிக்கும் முறைக்கும் ஒரு முக்யமான விஷயத்தில் வித்யாஸம் இருக்கிறது. இந்தியாவில் செய்யும் முறையில் ஆவியாக மாறக்கூடாத நல்லெண்ணெய் போன்ற தைலங்களை உபயோகிக்கிறார்கள். மேல் நாட்டாருடைய முறையில் பொதுவாய் ஸ்பிரிட்டை (சாராயத்தை) உபயோகிக்கிறார்கள்; அப்படி முதலில் செய்யும்போது ஷை சாராயத்தை உபயோகிக்காவிட்டாலும் கடைகளில் விற்கும் போது ஆவியாக மாறக்கூடிய த்ரவ பதார்த்தங்களோடு கலந்து விற்கிறார்கள். இதனால் அத்தர்களுக்கும், ஐரோப்பிய வாஸனைப் பொருள்களுக்கும் என்ன வித்யாஸ மென்றால், அத்தர்களை வஸ்த்ரங்களில் தடவினால் வஸ்த்ரங்களில் எண்ணெய்க் கரை உண்டாகிறது. ஐரோப்பிய வாஸனைகளால் அப்படி எண்ணெய்க்கரை ஏற்படுவதில்லை. தற்காலத்து வாஸனைப் பொருள்களின் வாஸனையைவிட அத்தரின் வாஸனை அதிக நேரம் நீடித்திருக்கிறது. இருந்தாலும் தற்காலத்து வாஸனைப்பொருள்களின் ஸௌகர்யம் என்னவென்றால் அவைகள் இருக்கிறவரையில் அத்தர் வாஸனையைவிட அதிக வேகமுள்ளவையாயிருக்கின்றன.

**The Romance of Hair.**

மயிர் வ்யாபாரத்தைப் பற்றிய ஒருகதை:—மனிதருடைய தலைமயிர் வ்யாபாரத்தை முன்னொரு ஸஞ்சிகையில் எழுதியிருக்கிறோம். மனித ரோம வ்யாபாரம் மேல் நாடுகளில் ரொம்ப ப்ரபலமாக நடந்து வருகிறது. ரொம்ப லக்ஷணமுள்ள ரோமத்துக்கு நல்ல விலை கொடுக்கிறார்கள். ஆனால் ஒரு பெண்ணின் தலையிலிருந்த அழகிய மயிருக்கு ஆயிரக் கணக்காய் பணங்கொடுத்ததை நாம் கேட்டதேயில்லை. இட்டலி தேசத்தினருகிலுள்ள ஸிஸிலி தீவில் உள்ள ஒரு ஊரில் ஒரு பெண்ணுக்கு தலையில் எதேஷ்டமான மயிர் இருந்தது. அது பார்ப்பதற்கு அழகாயும் யாவர் கண்ணையும் கவரத் தக்கதாயுமிருந்தது. அவளைப் பார்த்தவர்களெல்லாரும் அவளுடைய தலைமயிரின் கருமை நிறத்தையும் அது அழகாய் படிந்து தொங்குவதையும் வியந்து பேசுவார்கள். அப்படியிருக்க, ஒரு நாள் ஒரு வ்யாபாரி அங்குவந்து அவளுடன் பலவிஷயங்களைப் பேசிவிட்டுப் பின்பு அவளை நோக்கி "உனது தலைமயிரை விற்க உனக்கு இஷ்டமா?" என்று கேட்டான். அவள் உடனே சிரித்துக்கொண்டு, "இஷ்டந்தான். ஆனால் அதற்கு லக்ஷம் ப்ராங்க் கொடுக்கவேண்டும்" என்றாள்.

அந்தத் தொகை ரொம்ப அதிகமானதே. ஸுமார் 60,000 ரூபாயாயிற்று. ஆனால் அந்த வ்யாபாரி அவ்வளவு தொகையையும் தான் அங்கேயே எண்ணி விடுவதாகச் சொல்லி கத்தரிக்கோலை எடுத்துக் கொண்டு, மயிரை கத்தரிக்கலாமா என்று கேட்டான்.

அந்தப்பெண் ஸம்மதிக்குமுன் ரொம்பவும் யோசித்தாள். அவளுடைய பெற்றோர்களும் சற்றுத் தயங்கினார்கள். அவர்கள் தங்களுடைய பந்துக்கள், ஸ்நேகிதர்கள், அந்த ப்ரதேசத்து பாதிரியார் இவர்களை யெல்லாம் ஆலோசனை கேட்டார்கள். கடைசியாக லக்ஷம் ப்ராங்க்கையும் பெற்றுக்கொண்டு பெண் ஸம்மதிக்கவே அவள் கண்களில் நீர்ததும்ப அவளுடைய அழகிய மயிர் கத்தரிக்கப்பட்டது.

ஸிஸிலியில் தலைமயிரை வாங்கி ஏற்றுமதிசெய்யும் வ்யாபாரம் ரொம்ப நடக்கிறது. அநேக ஏழை ஸ்த்ரீகளுக்குத் தலையில் ரொம்ப நேர்த்தியான மயிர் இருக்கிறது. அவர்கள் அதைப் பணத்துக்கு விற்றுவிடுகிறார்கள். ஸாதாரணமாய் அவர்களுடைய தலைமயிர் ஐந்து அல்லது ஆறு பவுனுக்கு விற்கும். அதிகமாகவும் விலை போவதுண்டு. மேலே சொன்னபடி 60,000 ரூபாய் விலை கொடுப்பது அபூர்வமாய் ஏற்பட்டது. ஆனால் இது உண்மையாய் நடந்ததுதான். அநேக கனவான்களும் பெரிய உத்யோகஸ்தர்களும் இதை யறிவார்கள். இந்த உயர்ந்த விலையுள்ள மயிர் என்னவாயிற்று என்பது மாத்ரம் தெரியவில்லை.

ஸிஸிலியில் வாங்கப்படும் மயிர் அநேகமாய் அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. அவைகள் கப்பலில் கொண்டு போகப்படும் போது திருட்டுப் போகாமலிருக்கும்படி ரொம்பகனமான ஸாமான்களுக்கு அடியில் ஜாக்ரதையாக வைத்து அனுப்புவார்கள்.

# BUSINESS METHODS.
## வ்யாபார முறைகள்.

### Failures of Business men.

வ்யாபாரிகள் நஷ்டமடைவதின் காரணம்:—அமெரிக்கா ஐக்யமகாணங்களில் 1911-ம் வருஷத்தில் 12,646 வ்யாபாரிகள் நஷ்டமடைந்து போய் விட்டார்கள். இவர்களில் 3414-பேர் ஸாமர்த்யக் குறைவினால் நஷ்டப்பட்டுப் போனார்களாம். இன்னின்ன காரணங்களால் நூற்றுக்கு இத்தனைபேருக்கு நஷ்டமேற்பட்டதென்பது பின்வரும் கணக்கால் தெரியவரும்.

| | | |
|---|---|---|
| மூலதனம் போதாமை | ... | 13·4 |
| ஸாமர்த்யக்குறைவு | ... | 17·0 |
| குறிப்பிட்டகாரணங்கள் | ... | 16·9 |
| மோசம் | ... | 10·6 |
| அனுபோகம் இல்லாமை | ... | 41·1 |
| போட்டி | ... | 2·9 |
| அஜாக்ரதை | ... | 2·2 |
| யோசனையின்றிக் கடன்கொடுத்தல் | ... | 2·0 |
| பிறர் நஷ்டமடைந்த காரணத்தால் | ... | 1·3 |
| வீண்செலவு செய்தது | ... | ·9 |
| லாபம் வரும் என்று நம்பி துணிந்து வ்யாபாரம் செய்தது | ... | ·9 |

### D. H., Doctor of Hotel Keeping.

ஹோட்டல் காரர்களுக்கு பட்டப்பெயர்.—ஹோட்டல் காரர்களுக்குப் பட்டப்பெயர் கொடுப்பதற்கு ஜெர்மனியில் ஒரு ஏற்பாடு நடந்துவருகிறது. ஸர்வதேச ஹோட்டல் கீபர்களுடைய ஸங்கத்தின் நிர்வாகக்கமிட்டியின் மீட்டிங் கொன்றில் "ஹோட்டல் அக்காடமி" என்று ஹோட்டல்காரர்களின் வித்யாசாலை ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதாம். இதை ஏற்படுத்துவதற்கு ஆரம்பத்தில் நேரிடும் செலவுக்காக ஐரோப்பாவிலுள்ள ப்ரதானமான ஹோட்டல்கள் சேர்ந்து 7500 பவுன் தருவதாக வாக்களித்திருக்கின்றன. அந்த "அக்காடமி" அநேகமாய் ஜெர்மனியில் ஸ்தாபிக்கப்படலாம். ஹோட்டல்வைக்கும் தொழிலை, மற்ற பாரிஸ்டர், வைத்யர்கள் முதலியவர்களின் தொழிலைப்போல ஒரு கௌரவமுள்ள உத்யோகமாய்ச் செய்வதும், ஹோட்டலில் வேலைசெய்பவர்களுக்கு மற்ற உத்யோகஸ்தர்களைப் போலவே ஹோட்டல் நடத்தும் தொழிலில் கல்விகற்பிக்கப்பட்டு அவர்களுக்கு டி. எச். என்னும் பட்டம் கொடுப்பதும் அதன் நோக்கங்களாம். "டி. எச்" என்பது "டாக்டர் அப்ஹோட்டல் கீபிங்" என்பதின் சுருக்கம். அதாவது ஹோட்டல் வைத்து நடத்துவதில் வித்வான் என்பது தாத்பர்யம்.

### Do Advertisements Pay.

விளம்பரங்களால் லாபமுண்டா:—வ்யாபாரிகள் அல்லது கம்பெனிகள் விளம்பரம் செய்வதனால் அவர்களுடைய பெயரை ஜனங்கள் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்திருத்தல், விளம்பரம் செய்தவருக்கு ஒரு மதிப்பு ஏற்படுதல் முதலிய பலவித ஸாதனங்கள் ஏற்பட்டாலுங்கூட, விளம்பரத்தால் ஒரு ஸாதகம் மாத்ரம் அவச்யம் உண்டாகவேண்டும். அதாவது, நல்ல வ்யாபாரம் ஏற்பட்டு விளம்பரச்செலவோடு நல்ல லாபமும் சீக்ரம் கிடைக்கவேண்டும். இல்லாவிட்டால் விளம்பரம் பலனைக் கொடுத்ததாகாது.

வ்யாபாரம் அதிகமாக நடப்பதற்காகச் செய்த ஒரு விளம்பர ஏற்பாடு எவ்வளவு நன்றாயும், நவீனமாயும், வேடிக்கையாயும், ஆச்சர்யமானதாயும் இருந்தாலும், அதனால் தொழில் வ்ருத்தியாகி நன்றாய் ஊக்கமாய் நடந்தாலொழிய அந்த ஏற்பாடுகளை அனுஷ்டித்ததற்குதகுந்தந்யாயமேயில்லை. விளம்பரம் செய்பவர் விளம்பரம் செய்யுமுன் அதனால் லாபம் கிடைக்குமா என்பதைத்தான் முதலில் கவனிக்கவேண்டும். அந்த ஒரு விஷயத்தையே ரொம்பவும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும். விளம்பரம் கவனத்தைக் கவரத்தக்கது, ஜனங்களுக்கு ஆச்சர்யத்தை உண்டு பண்ணக்கூடிய தென்னும் விஷயங்கள் அதற்கடுத்தபடியானவைகள்தான். விளம்பரத்தினால் லாபம் வராவிட்டால் விளம்பரம் ஸரியானபடி செய்யவில்லை என்று சொல்லவேண்டியதே.

விளம்பரம் செய்யவிரும்புகிறவர் விளம்பரம் செய்யவேண்டும் என்று தாம் விரும்பும் விஷயங்களை இன்னவை என்று நன்றாயறிந்திருக்கலாம். ஆனால் அவ்விஷயங்கள் முற்றிலும் தவறுதலாயிருக்கக்கூடும். ஸரியான நல்லவிஷயங்களை விளம்பரத்தில் போடவேண்டுமென்று அவர் அறிந்திருக்கலாம். ஆனால் அவருக்கு அவைகளை எப்படி விளம்பரத்தில் போடுவது; எவ்விடத்தில் விளம்பரம் செய்வது ரொம்ப லாபகரமானது என்பவைதெரியாமல் கஷ்டப்படலாம். ஸரியான விஷயங்களை ஜனங்களிடத்தில் நன்றாய்க் காட்டாமல் தவறுதலாய் எழுதி வெளிப்படுத்திவிடக்கூடும். அல்லது யாருக்கு அவைகள் தேவையில்லையோ அவர்கள் அதை வாசித்து விளம்பரம் செய்தவருக்குப் பயன்படாமல் போகக்கூடும். ஆனால் இந்தஇரண்டுவித அறிவுள்ளவர்களும் ஒன்று கூடி வேலைசெய்தால், அதாவது சரக்கு செய்யும் வ்யாபாரியும், விளம்பரம் செய்வதில் நிபுணரும் ஒன்று சேர்ந்து வேலைசெய்தால் விளம்பரத்தினால் லாபம் வரும் என்பதில் அதிக ஸந்தேக மிருப்பதற்கிடமில்லை,

# SCIENCE, MACHINERY AND INVENTION.

## சாஸ்த்ரமும், யந்த்ரங்களும், நூதன கற்பிதமும்.

### Sun Operated Motor.

ஸூர்ய உஷ்ணத்தினல் ஓடும் யந்த்ரம்:—ஸூர்ய உஷ்ணத்தினுல் ஒட்டப்படும் யந்த்ரம் ஒன்று புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த யந்த்ரத்தின் விவரமாவது, பத்துப் பதினைந்து பெரிய பெட்டிகளில் அறையாகத் தடுத்து ஜலத்தை ஊற்றி நிரப்பியிருக்கிறது. அந்தப் பெட்டிகளின் மேல்மூடி கண்ணுடியால் செய்யப்பட்டிருக்கிறது. கண்ணுடியானது ஸூர்ய உஷ்ணத்தை ஒன்று சேர்த்து ஜலத்தில் படும்படிக்கும் ஜலத்தை உஷ்ணப்படுத்தி ஆவியாக்கும்படிக்கும் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆவியானது பெட்டிகளில் இணைக்கப்பட்டிருக்கிற ஒரு குழாய் மூலமாய் விசேஷ ஏற்பாடுகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் ஒரு எஞ்சினுக்கு கொண்டுபோகப்பட்டு அந்த எஞ்சினை ஒட்ட உதவுகிறது. பிறகு அந்த ஆவி ஜலமாக மாறி வேறு ஒரு குழாய் மூலமாய் மறுபடியும் பெட்டிகளுக்கு வந்துவிடுகிறது. இந்த யந்த்ரம் அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டது.

### Warping Machine.

பாவு சுத்த மலிவான ஒரு கருவி:—தென்னிந்திய ஸங்கத்தின் 8-வது வருஷக் கொண்டாட்டத்தில் மிஸ்டர் என். ஸுப்ரமண்ய அய்யர் "சென்னையில் நெசவு" என்று ஒரு வ்யாஸம் படித்தார். அரக்கோணத்துக்கு 9 மைல் தூரத்திலுள்ள குருராஜப் பேட்டையிலுள்ள ஒரு கைக்கோளன் பாவு சுத்த ஒரு யந்த்ரம் செய்து விற்பதாகவும், அதை ஏராளமாக உபயோகத்துக்குக் கொண்டுவருதல் நன்மை என்றும், அந்த வ்யாஸத்தில் அவர் சொல்லுகிறுர். இந்த பாவு யந்த்ரம் அந்த மனிதனுல அழகாகச செய்யப்பட்டு 25 ரூபாய்க்கு விற்கப்படுகிறதாம். 50 தறிகளுக்கு வேண்டிய பாவு அதல் சுற்றப்படுகிறதுடன், நாளொன்றுக்கு 4 அணு கூலி பெறக்கூடிய ஒரு பையனே இருந்து அதை வேலைசெய்துவிடலாமாம்.

### Artificial Cow's Milk.

செயற்கைப் பசுப்பால்:-ஜெர்மெனியில் மெய்ன் நதியோரமாயுள்ள ப்ராங்போட் என்னும் பட்டணத்து ரஸாயனிகள் மூன்றுபேர் தங்களுடைய ரஸாயன சாலையில் சேர்க்கைப்பால் செய்யுமுறையைக் கண்டு பிடித்திருக்கிறுர்களாம். அப்படிச் செய்யப்பட்ட பாலை அநேக சாஸ்த்ரிகள் குடித்து சோதனை செய்து பார்த்ததில் குடிப்பதற்கு இனிமையாயிருக்கிற தென்றுர்களாம். இந்தப் பாலை லண்டனில் செய்து புட்டி 2 அணுவாக விற்கவேண்டு மென்று உத்தேசித்திருக்கிறுர்கள். இந்த செயற்கைப்பால் தாவரப் பொருள்களிலிருந்து செய்யப்படுகிறது. இந்த தாவரப் பொருள்களை யந்த்ரத்தாலாகிய செயற்கைக் குடலில் ஜீரணம் செய்து பாலாக்கு கிறுர்கள். பசுவின் பாலைக்குடிப்பதில் ஏற்படும் அஜாக்ரதையினுல் ட்யூபர்குலாஸிஸ் என்று சொல்லப்படும் நுரை யீறலைப்பற்றிய ஒருவித வ்யாதி உண்டாகிறதாம். அப்பேர்பட்ட வ்யாதி இந்த செயற்கைப் பாலால் உண்டாக இடமில்லை என்றும் சொல்லப்படுகிறது. இது நமது இந்தியாவுக்கு எப்பொழுது வருமோ தெரியவேண்டும்.

### A Cocoanut Peeler.

தேங்காய் உரப்பதற்கு யந்த்ரம்.—260 மார்க்ஸ் அதாவது 195 ரூபா (ஒரு மார்க்ஸ் 12 அணு) விலையில் தேங்காய்கள் உரிப்பதற்கான யந்த்ரம் கண்டு பிடித்து செய்துவருவதாக ஜெர்மனி யந்த்ரம் செய்பவரொருவர் ஸிலோன் விவஸாய ஸங்கத்திற்கு அறிவித்திருக்கிறுர். ஒவ்வொரு தேங்காயாக, யந்த்ரத்தின் மத்தியில் செங்குத்தாயிருக்கும் வெட்டுக்கத்தியில் வைத்து பக்கத்திலுள்ள சக்ரத்தைச் சுற்ற வளைவாகவும் ஒன்றின்மே லொன்றாகவும் வைக்கப்பட்டுள்ள சத்திகள் தேங்காயின் சரட்டைவரையில் மேல் உரிமட்டையில பாய்ந்து பிளந்துவிட ஒன்றின்மேலொன்றாக அமைக்கப்பட்டிருக்கும் கத்திகளால் மற்றொன்றும் அம்மாதிரி உரிமட்டையைப் பிளந்தெறிய மூன்று பகுதியாக உரிமட்டை நீக்கப்பட்டு சரட்டையோடுள்ள தேங்காய்மாத்ரம் தனியாக வந்துவிடுகிறதென அந்த யந்த்ர அமைப்பைப்பற்றிக் கூறப்பட்டிருப்பதிலிருந்து தெரியவருகிறது. புதுத் தேங்காய்களாயிருந்தால் வெகு ஸுலபமாக உரிபட்டுப் போமென்றும், தேங்காய்கள் பெரிது சிறிதுக்குத் தகுந்தபடி யந்த்ரத்தின் அடியில் வைக்கப்பட்டிருக்கும் வில்லினுல் வேலை செய்பவனுடைய ஒரு காலைக்கொண்டே யந்த்ரத்தை ஸரிப்படுத்திக்கொள்ளலா மென்றும், ஸாதாரணமாய் ஒரு மணி நேரத்தில் 100 தேங்காய்களுக்குக் குறையாமல் உரிக்கலாமென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# LAW.
## சட்டம்.

**Registration of Wills.**

உயில்களை ரெஜிஸ்டர் செய்தல்.—ஒரு பத்ரத்தை உயில் என்று சொல்வதனுல் மாத்ரம் அது உயிலாகாது.

ஒரு பத்ரத்தில் ஒரு விதவைக்கு ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ள அனுமதி கொடுத்திருந்தது. அதோடு ஸ்வீகாரம் எடுத்துக்கொண்ட பையனுக்கும், விதவைக்கும் விவாதம் நேரிட்டால் விதவை தன் ஆயுள் முடிய ஸொத்தை அனுபவிக்கவேண்டும் என்றும், அவளுக்குப் பிறகு ஸொத்து பையனுக்குக் கிடைக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது. இந்தப் பத்ரம் 1881-ம்வருஷத்து 5-வது ஆக்ட், 3-வது ஸெக்ஷன்படி உயிலாகாது. இது ஸ்வீகாரம் எடுத்துக் கொள்வதற்குக் கொடுத்த அனுமதிப் பத்ரமாகும். இதை ஊர்ஜிதப்படுத்த ரெஜிஸ்டர் செய்யவேண்டுவது அவச்யமாகும். 1913. ம. வா. நோ. 199.

**Marriage Contract.**

கலியாண உடன்படிக்கை.—எ-யின் பெண்ணை, பி-யின் பிள்ளைக்கும், பி-யின் பெண்ணை எ-யின் பிள்ளைக்கும் கல்யாணம் செய்யவேண்டும் என்றும், இப்படிச் செய்த ஏற்பாட்டைச்செய்து முடிக்க யார் தவறுகிருரோ அவர் மற்றவருக்கு ரூ. 5000 கொடுக்கவேண்டு மென்றும் ஒப்பந்தம் செய்து கொள்வது பொதுஜனநன்மைக்கு விரோதமானது. ஆகையால் தவறினதற்காகப் பணம் கொடுக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்த முடியாது.

கல்யாணம் நடக்கும்படி செய்வதனுல் மூன்ருவது மனிதருக்கு பணம் கிடைக்கவேண்டுமென்று ஒரு ஒப்பந்தத்தில் கண்டிருந்தாலும் அதுவும் பொதுஜன நன்மைக்கு விரோதமானது. குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்வது குழந்தைகளின் பெற்ருேர்கள் செய்யும் உடன்படிக்கை யாகவும், கல்யாண விஷயத்தில் குழந்தைகள் யாதொரு ஆக்ஷேபணமும் சொல்வதற்கில்லை யென்பதாகவும் உள்ள ஜாதி ஜனங்கள் விஷயத்திலும் இந்த ந்யாயம் ஏற்கும். 1913 ம. வா. நோ. 200.

**The Tamil Sangam Suit.**

தமிழ்ச் சங்கத்தின்மேல் வ்யாஜ்யம்.—காலஞ்சென்ற ராமனுத புரத்து ராஜாபாஸ்கர ஸேதுபதி மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு பணங்கொடுத்து உதவினர். அவருக்குப்பின் இப்பொழுதுள்ள ராஜாவின் மைனரிட்டி காலத்திலிருந்த கார்டியனும் முன்னல் ராஜா பணம் கொடுத்து வந்ததுபோலவே கொடுத்துவந்தார். இதுவரையில் 28000-த்து சொச்சம் ரூபாய் வரையில் கொடுபட்டிருக்கிறது. ஷை தொகையை ஸங்கத்தார் திருப்பிக் கொடுத்துவிடவேண்டும் என்று இப்பொழுதுள்ள ராமனுதபுரம் ராஜா ஸ்ரீமார் 2-வருஷங்களுக்கு முன் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்மேல் வ்யாஜ்யம் போட்டிருந்தார். ஷை ஸங்கத்துக்குக் கொடுக்கப்பட்ட தொகை ராமனுதபுரம் ஜமீன்தாரியில் உள்ள தேவஸ்தானங்களால் தேவஸ்தான பண்டிலிருந்து கொடுக்கப்பட்டதென்றும், காலஞ்சென்ற ராஜாவுக்கு சட்டப்படி கொடுப்பதற்கு அதிகாரம் இல்லையென்றும், ஆகையால் ஸங்கத்தார் பணத்தைத் திருப்பி செலுத்திவிடவேண்டுமென்றும், ராஜாபக்கம் வாதிக்கபபட்டது. ராஜா பணம் கொடுத்தது சட்டப்படி செல்லுமென்றும், மதஸம்பந்தமான ப்ரபந்தங்கள் தேவாரங்கள் இவைகளின் படிப்பை அபிவ்ருத்தி செய்வதும், மதஸம்பந்தமான நூல்கள் அதிகமுள்ள தமிழ்ப் பாஷையும இலக்கியமும் கற்பிப்பதும் பணம் கொடுத்ததின் நோக்கங்களாகையால் இவைகளும் மதஸமபந்தமான நோக்கங்களேயென்றும், இந்த தேவஸ்தானங்களுக்கு மான்யங்கள் விட்டவர்களின் வமசத்தவர்களும் வமச பரம்பரையாய் இந்த தேவஸ்தானங்களின் ட்ரஸ்டியாக இருப்பவர்களுமான ராமனுதபுரம் ராஜாக்கள் மத ஸம்பந்தமான பாடசாலைகள் வைத்து நடத்தி யிருக்கிருர்கள் என்றும், இதற்குகாரணமாக பெரிய கோவில்களில் ஸம்ஸ்க்ருத பாடசாலைகளும், ராமனுதபுரத்தில் ஒரு ஸம்ஸ்க்ருதபாடசாலையும் இருப்பதைச் சொல்லலாம் என்றும், இதுவரையில் கொடுக்கப்பட்ட தொகை தமிழ்க்கலாசாலையை வைத்துநடத்துவதில் செலவழிந்து போய்விட்டது, எப்படியும கொடுத்த தொகையைத்திருப்பிக் கொடுப்பது முடியாது என்றும் ஸங்கத்தின் பக்கம் வாதிக்கப்பட்டது.

சென்ற மார்ச்சு ஏப்ரல் மாஸங்களில் வ்யாஜ்யம் விசாரிக்கப்பட்டது. கடைசியில் இருவரும் ராஜியாய்ப் போய் அந்தராஜியின்படி ராமனுதபுரம ராஜா வ்யாஜ்யத்தைத்தள்ளிக் கொள்ளுகிற தென்றும், தமிழ்ச்சங்கத்தர் தேவஸ்தான பண்டிலிருந்து தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பணத்தின்மேல உள்ளபாத்யதையை விட்டுவிடுகிறதென்றும தீர்மானித்துக் கொண்டார்கள். அவரவர்கள் தங்கள் செலவைத் தாங்களே பொறுத்துக் கொள்வார்கள்.

# MEDICINE.

## வைத்யம்.

### Water in Copper Vessels.

தாம்ரப் பாத்ரத்தில் வைத்த தண்ணீர்:— தாம்ரப்பாத்ரத்தில் தண்ணீர் வைப்பதனுல் நீரிலுள்ள விஷப் பூச்சிகள் சாச, நீர் சுத்தமாய் நமக்கு வரும். விஷஜுரமுதலியவற்றை நீக்கிவிடும். தாம்ரப்பாத்ரத்தில் வெந்நீர் எப்பொழுதும் குடிக்கவே கூடாது. ஆனுல் தாம்ரப் பாத்ரத்திலுள்ள வெந்நீர் ஸ்நானம் செய்பவரது சர்மவ்யாதிகளைப் போக்குவதுடன் சரீராரோக்யத்தையும் கொடுக்கும். வயிற்று வலிக்குத் தாம்ரப்பாத்ரத்தில் வைத்த வெந்நீர் ஒத்தடம் கொடுக்கக் குணமாகும்.

### Ayurvedic Medicine.

ஆயுர்வேத வைத்யம்:—சென்ற மாஸம் பம்பாய் ஆயுர்வேத கான்பரென்ஸைப் பற்றி எழுதியிருந்தோம். அந்தக் கான்பரன்ஸுக்கு வேய் (Vai) சங்கராசார்ய ஸ்வாமிகளுள்பட 300-ஆயுர்வேத வைத்யர்கள் வந்திருந்தார்கள். வரவேற்புக் கமிட்டியின் ப்ரஸிடெண்ட் ஆயுர்வேத வைத்யத்தொழில் க்ஷீணதசையடைந்து வருவதைப்பற்றிப் பேசியதில் ஆயுர்வேத வைத்யர்கள் தங்கள் கௌரவத்தை இழந்து வருகிறுர்களென்றும், அதற்குக் காரணம், ஜனங்கள் ஆயுர்வேத சாஸ்த்ரத்தில் நம்பிக்கையையிழந்து வருகிறுர்களென்று சொல்வதற்கில்லை என்றும், ஆனுல் அந்த சாஸ்த்ரத்தை தீவிரமாய் கற்பாரில்லை யென்றும், ஆயுர்வேத சாஸ்த்ரத்தை முற்படுத்துவதற்கு ஆயுர்வேத காலேஜ்கள் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றுஞ் சொன்னுர்.

அக்ராஸனுதிபதியாகிய வித்யாரத்ன பண்டித கோபாலாசார்லு, ஸம்ஸ்க்ருத பாஷையில் செய்த நீண்ட ப்ரஸங்கத்தில், பம்பாய் மெடிகல் ரிஜிஸ்ட்ரேஷன் ஆக்டை, அதாவது, வைத்யர்கள் அத்தொழிலிற்கு அருகர்களென்று கவர்ன்மெண்ட் வைத்யாதிகாரிகளால் அங்கீகரிக்கரிக்கப்பட வேண்டுமென்ற சட்டத்தை,பலமாய் கண்டித்துப் பேசி,அந்த ஆக்டை கவர்ன்மெண்டார் என்ன எண்ணத்தோடு நிறைவேற்றியிருக்கிறுர்களோ தெரியவில்லை யென்றுர். மேலும் அவர் இவ்விஷயமாய்ச் சொன்னதாவது:— "பொது ஜனங்களின் கஷ்டமும் வருத்தமும் இதனுல் அதிகரித்தனவேயன்றி வேறில்லை. ஆயிரக்கணக்கான ஜனத்தொகையுள்ள ஒரு தாலூகாவில் கவர்ன்மெண்டார் ஒரு ஆஸ்பிடல் அஸிஸ்டெண்டை நியமிக்கிறுர்கள். எல்லா ஜனங்களுக்கும் அவரொருவரால் வைத்ய உதவி கிடைப்பதரிதாகிவிடுகிறது. கவர்ன்மெண்ட் வைத்யர்களை அபிவ்ருத்தி செய்ய வேண்டும். ஆயுர்வேத முறையில் தயாரிக்கப்பட்ட ஔஷதங்களை ஜனங்கள் உபயோகப்படுத்தும்படி தூண்ட வேண்டும். ஆயுர்வேத சாஸ்த்ரத்தைப் படித்த மாணுக்கர்களுக்கு அத்தாக்ஷிப் பத்ரங்கள் கொடுத்து அவர்களுக்கு உத்ஸாக முண்டுபண்ண வேண்டும். தற்போது நசித்துவரும் ஆயுர்வேத சாஸ்த்ரத்தை கவர்ன்மெண்ட் முன்னுக்குக் கொண்டுவர முடியாவிட்டால் சீக்ரத்தில் அந்த சாஸ்த்ரம் அழிந்துபோம். வைத்யத்தில் பலர் பழக்கமடைவதற் கனுகூலமாக கவர்ன்மெண்டார் ஆயுர்வேத காலேஜ்கள் ஸ்தாபிக்க வேண்டும். கோஷா வழக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வரும் இந்நாட்டில் ஆயுர்வேத சாஸ்த்ரத்தை ஸ்திரீகளும் கற்கவேண்டியது. அவசியமாகும்." இப்படி அவர் பேசியதோடு, ஆயுர்வேத ம்யூஸியங்கள் திறக்கப்பட வேண்டுமென்றும் வற்புறுத்திக் கூறினுர்.

### Tea.

தேயிலைத் தண்ணீர்.—ஒரு பாத்ரத்தில் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தேயிலையை எடுத்துக் கொண்டு இன்னொரு பாத்ரத்தில் வேண்டிய அளவு தண்ணீர் ஊற்றி, தேயிலை எடுத்துக்கொண்ட அளவிற்கு கொத்துமல்லி விதைகளை எடுத்துக் கொண்டு அம்மியில் ஒன்று இரண்டாய் நடத்தி, அத் தண்ணீருடன் கலந்து பத்து நிமிஷம் கொதிக்கச் செய்ய வேண்டும். பிறகு அத்தண்ணீரை தேயிலை போடப்பட்டிருக்கும் பாத்ரத்தில் ஊற்றி சில நிமிஷங்கள் கழியும வரையில் அப்பாத்ரத்தை நன்ருய் மூடிவைத்திருக்கவேண்டும். பிறகு அத்தண்ணீரை நன்ருய் ஒரு கரண்டியால் கலக்கி வடிக்கட்டி எடுத்துக் கொண்டு, கொஞ்சம் சர்க்கரையுடனும், நன்ருய்க் காய்ச்சின பாலுடனும் கலந்து உட்கொண்டால் தேகத்திற்கு ஸௌக்யத்தைத் தரும். மேலும் இது வாஸனையாயும், ருசியாயும் இருக்கும். கொத்துமல்லி பித்த வ்ருத்தியை குறைக்கிறதற்காக, அதிகமாய் உபயோகப்படுத்துகிறபடியால், தேயிலையனுல் உண்டாகும் பித்தத்தை இது அதிகரிக்கவொட்டாது.

# FUN AND ANECDOTE.
## வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

### Useless Labour.

உபயோகமற்ற வேலை.—பையன்.—அம்மா என் முகத்தை அலம்பிவிடு.

தாய்.—ஏன் உன்னால் முகத்தைச்சமுவமுடியாதா?

பையன்.—முடியும்; ஆனால் என் கையை நனைக்க வேண்டியிருக்கும். முகத்தை நனைப்பதற்காக கையை நனைப்பானேன் ?

### A Quack and a Farmer.

மூடவைத்யனும் குடியானவனும்:—வைத்யம் இன்னதென்றறியாத ஒருவன் பட்டணத்தாக்குகளில் வைத்யஞ்செய்யத் தன்னால் முடியாதென்றும் குப்பக் காட்டு மனிதரை ஸுலபமாய் ஏமாற்றலாமென்றும் நினைத்து உள்நாட்டு ஊரொன்றில் போய் ஓர் சின்ன கடைபரப்பிப் பலவித ஔஷதங்கள் விற்பனைசெய்வதுபோலப் பல வீஸாக்களையும் புட்டிகளையும் டப்பிகளையும் மேஜையில் நிரப்பிவைத்துக்கொண்டிருந்தான். அவ்வூருக்கு வந்திருந்த ஒரு குடியானவன் தனக்குத் தேவையான கார்யங்களையெல்லாம் பார்த்துக்கொண்டு, இதென்ன கடைபுதியதாயிருக்கிறதே பார்ப்போமென நமது போலிவைத்யன் கடைக்கு வந்து சரக்குகளைப் பார்வையிட்டுக்கொண்டிருந்தான். கடைக்காரன் அவனைப்பார்த்து ஐயா "இருமல் மாத்ரை சில வாங்கிக்கொள்ளுகிறீரா" என்று கேட்டான். குடியானவன் தனக்கு இருமல் இல்லை என்று சொன்னான். அப்போது கடைக்காரன், "அப்படியானால் குழந்தைகளுக்குத் தூக்கம் வருவிக்கும் மருந்துப் புட்டியொன்று வாங்கிக் கொண்டு போம்." என்றான். குடியானவன் எனக்குப் "பிள்ளைகுட்டிகளில்லையே" என்று ஏங்கினன். "அப்படியானால் மூர்ச்சை தெளிவிக்கும் உப்புவீஸா ஒன்று உமது பெண்சாதிக்கு வாங்கிக்கொண்டுபோமே" என்று வைத்யன் கேட்டான். குடியானவன் அதற்கு "என் பெண்சாதிக்கு அவ்வளவு ஸுலபத்தில் மூர்ச்சை உண்டாகிறதில்லை; அவள் நல்ல தைரியசாலி, கூட பலிசாலி" என்று பெருமையாய்ச் சொன்னான். வைத்யனுக்கு அப்போது எரிச்சலுண்டாகி, "அப்படியானால் மேஜைக்குப் பின்னால்வா நாமிருவரும் குத்துச் சண்டை போடுவோம்; பிறகு காயத்தை ஆற்ற ஏதாகிலும் ஓர் மருந்து வாங்கிக் கொண்டுபோகலாம்" என்றான்.

### Flowers for his Wife.

மனைவிக்குப் புஷ்பம் கொண்டுவந்தது.—தோழி:—கல்யாணமானதற்குப் பிறகு உன்புருஷன் முன்போல உனக்குப் புஷ்பம் கொண்டுவந்து கொடுக்கிறதுண்டோ?

புதிதாய்க் கல்யாணமானவள்:—கொடுக்கிறதுண்டு; நேற்றுக்கூட வாழைப்பூ இரண்டு கொண்டு வந்து கொடுத்தார்.

### The Funny Answer.

வேடிக்கையான விடை.—உபாத்யாயர்:—ராமா, உன் தகப்பனர் ஒருவேலையை 7-நாளில் செய்து முடிப்பார். அதே வேலையை உன் சிற்றப்பன் 9-நாளில் செய்துமுடிப்பார்; இருவரும் சேர்ந்து வேலைசெய்தால் எத்தனைநாளில் செய்து முடிப்பார்கள் ?

சிறுபையன்:—ஒருநாளும் வேலை முடியாது: அவர்கள் இருவரும் சேர்ந்தால் வேலைசெய்யாமல் வம்பளந்துகொண்டே பொழுதைப் போக்குவார்கள்.

### Her Opinion about the actor.

நாடகக்காரனைப்பற்றி அவளது அபிப்ராயம்.—

கணவன்:—பெண்ணே நாடகம் எப்படியிருந்தது? துஷ்யந்த வேடக்காரனின் ஆக்ட் பார்த்தாயா?

மனைவி:—ஸகுந்தலையின் மனஸை அவன் ஸ்வீகரித்தது போலவே என்போன்ற பெண்களின் மனஸையும் கவருந் திறமுள்ளவனுயிருக்கிறான்.

கணவன்:—போதும், போதும்! நீ நாடகம் பார்த்தது!!

### Drinking is bad.

குடி கெட்டது:—குடியன்:—அடி, மனேன்மணி, இங்கு வீஸாவில் சாராயம் ஊற்றிவைத்திருந்தேனே, அது எங்கே காணோம்.

அவன் மனைவி:—மதுரைவீரன் எடுத்துக் குடித்துவிட்டான்.

குடியன்:—ஐயையோ குடிகெட்டதே.

அவன் மனைவி:—குடி கெட்டதுதான். நல்லதென்று சொல்வாருமுண்டா? தங்களைப்போன்ற குடிகாரர்கள்தான் சொல்வார்கள். சாராயங்குடிப்பது கெட்டதென்று தாங்களுந் தெரிந்துகொண்டீர்களோ.

குடியன்:—நான் தெரிந்து கொண்டால் விட்டுவிடுவேனல்லவா.

அவன் மனைவி:—தாங்கள் விட்டுவிடுவீர்களென்று தான் மதுரை வீரன் தாங்கள் வருவதற்கு முன்னதாக வந்து கடகடவென்று விட்டுவிட்டான்,

## CURIOSITIES.
## விநோதங்கள்.

### The Heart and the Body.

ஹ்ருதயமும் சரீரமும்.—நம்முடைய ஹ்ருதயமானது இருபத்துநாலுமணி நேரத்தில், 40 டன் எடையுள்ள ஒரு ஸாமானை, பூமியிலிருந்து, ஒரு கஜம் உயரம் தூக்குவதற்கு, எவ்வளவு வேலைகொள்ளுமோ அவ்வளவு வேலை செய்கிறதாம். நம்முடைய சரீரமானது, அதே இருபத்துநாலுமணி நேரத்தில் 2 காலன் ஜில்லென்றிருக்கும் ஜலத்தை பொங்கப் பொங்கக் காய்ச்சுவதற்கு எவ்வளவு உஷ்ணம் வேண்டுமோ, அவ்வளவு உஷ்ணத்தை உண்டுபண்ணுகிறது.

### Largest Bath.

பெரிய ஸ்நான கட்டம் :—உலகத்திலுள்ள ஸ்நான கட்டங்களெல்லாவற்றிலும் பெரியதான ஸ்நானகட்டம் வீயன்னுவிலிருக்கிறதாம். அந்தஸ்நானம் செய்யுமிடம் 578 அடி நீளமும் 150 அடி அகலமும் உள்ளது. 1500பேர் ஏககாலத்தில் அதில் ஸ்நானம் செய்யலாம். தினம் மூன்றுதடவை அதிலுள்ள ஜலத்தை அப்புறப்படுத்தி புது ஜலம் விடுகிறார்கள்.

### Without Stomach.

குடலில்லாதவன்.—அமெரிக்காவில் காலிபோர்னியாவைச் சேர்ந்த ரெட்டிங்கு என்னும் இடத்தில் ஜான் ப்ராட்ஹர்ஸ்ட் என்பவன் இரண்டு மாஸமாகக் குடலேயில்லாமலிருந்தானும். இரண்டு மாஸத்துக்கு முன்னுல் அவனுக்கு ஆபரேஷன் செய்தபோது அவனுக்குத்தெரியாமல் அவனுடைய குடலைவெளியில் எடுத்து விட்டார்களாம். அவன் ஸமீபத்தில் தான் இறந்துபோனுன்.

### A Curious Happening.

ஒரு விநோத ஸம்பவம்.—ஸ்காட்லண்டு தேசத்தில் ஒரு ஊரில் வஸித்துவந்த இரண்டு ஸகோதரர்களில் மூத்தவன் 23-வருஷத்துக்கு முன்னுல் அமெரிக்காவுக்குச்சென்று ஒரு ப்ரதேசத்தில் தங்கி வஸித்துவந்தான். இளையவன் 14-வருஷம் கழித்து அமெரிக்காவுக்குச் சென்று வேறொரு இடத்தில் தங்கி வஸித்துவந்தான். சில மாஸங்களுக்குமுன்னுல் அவர்கள் இருவரும் தங்கள் ஜன்மதேசத்துக்குப் போக உத்தேசித்தார்கள். ஆனுல் ஒருவரும் தாம் ஊருக்குப் போவதாக மற்றவருக்குத் தெரிவிக்கவில்லை. இருவரும் ஒரேகப்பலில் ஏறி ப்ரயாணம் செய்திருக்கிறுர்கள். அப்பொழுது அவர்கள் ஒருவரையொருவர் அடையாளம் கண்டுகொள்ளமுடியவில்லை. தங்களுடைய தாயார் வீட்டில் ஸந்தித்தபோதுதான் ஒருவர்க்கொருவர் அடையாளம் கண்டுபிடித்துக்கொண்டார்களாம்.

### Growing 100 lbs. a month.

மாஸம் 100 ராத்தல் அதிகரித்தல்.—மலிஸ்ஸா கூபர் என்னும் நீக்ரோ ஸ்த்ரீ ஒருத்தி ஸமீபத்தில் மரணமடைந்தபோது 616 ராத்தல் எடையிருந்தாளாம். அவள் இறப்பதற்கு ஐந்து மாஸத்திற்குமுன்னுல் அவள் 145 ராத்தல் தானிருந்தாள். திடீரென்று அவள்தேகம் மாஸம் ஒன்றுக்கு 100 ராத்தல் வீதம் நிறையில் அதிகரிக்கத்தொடங்கிற்று. அநேக டாக்டர்களும் வேடிக்கை பார்ப்பவர்களும் அவள் தேகம் பருத்துக்கொண்டே வருவதைப்பார்க்க அவள் வீட்டுக்குச் சென்றுர்கள். அவள் இறந்த அன்றையதினம் அவளுடைய கழுத்து 1 கஜம் சுற்றளவுள்ளதாயிருந்தது. அவளுடைய இடுப்பின் சுற்றளவு 111 அங்குலம் இருந்ததாம். டாக்டர்கள் இவளுடைய நிலைமைக்கு காரணம் சொல்லமுடியவில்லை. இன்னம் ஒரு மாஸம் அவள் உயிரோடிருந்தால் அவள் ஒரு சிறு யானைக்குட்டியாக வளர்ந்திருப்பாள் என்று சொல்லுகிறுர்கள்.

### Lord Agni and a Library.

அக்னி தேவதையையும் புஸ்தகசாலையும்.—கல்கத்தாவுக்கு அருகிலுள்ள போக்ரா என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஒரு புஸ்தகசாலை கட்டடத்தின் சிகரத்தில் அப்புத்தகசாலை ஒருபோதும் தீக்கிரையாகாமல் காப்பாற்றப்படுமென்ற எண்ணத்துடன், அதை ஸ்தாபித்தவர்கள் அக்னி பகவானின் சின்னமொன்று வைத்திருந்தார்கள். அங்குள்ள முகம்மதியர்கள், அப்படிப்பட்ட உருவத்தை வைக்கக்கூடாதென்றும், அதை எடுத்துவிடவேண்டுமென்று அவ்வூர் டிஸ்ட்ரிக்ட் மாஜிஸ்ட்ரேட்டிடம் கேட்டுக்கொள்ள அந்த மாஜிஸ்ட்ரேட், புஸ்தகசாலை அதிகாரிகளைக் கேட்காமலேயே போலீஸாருடன் வந்து அந்த சின்னத்தை அப்புறப்படுத்திவிட்டார். புஸ்தகசாலை கமிட்டியார் மாஜிஸ்ட்ரேட்டின் செய்கையை ஆக்ஷேபித்து, வங்காள கவர்னருக்குத் தந்தி மூலமாய் மெமோரியல் அனுப்பியிருக்கிறுர்களாம்.

# HINTS AND RECIPES.

## யுக்திகளும் முறைகளும்.

### To Unscrew Can Tops.

டப்பிகளின் மூடியைக் கழற்ற.—டப்பிகளின் மூடியைக் கழற்ற வேண்டுமானால் ஒரு அங்குலம் அகலமும் ஏழெட்டு அங்குலம் நீளமும் உள்ள உப்புக் கடிதத்துண்டுகள் இரண்டெடுத்து மூடியின் ஓரத்தில் சுற்றித் திருகினால் மூடியை ஸுலபமாய் கழற்றிவிடலாம்.

### A Good Cement.

ஒரு நல்ல ஒட்டவைக்கும் பசை.—உடைந்துபோன சைனாவை (பீங்கான்) ஒட்ட வைப்பதற்குப் பின் வரும் முறை நல்லதென்று சொல்லப்படுகிறது. கருவேலம்பிசினை ஜலத்தில் ஊறப்போட்டு கெட்டிப் பசையாக்கி, அதில் ப்ளாஸ்டர் அப் பாரிஸ் என்று சொல்லப்படும் கற்பூர சிலாஸத்தைப் போட்டு நன்றாய்க் கலக்கவும். கலந்த பசை பீங்கானை ஒட்டத் தகுந்ததாயிருக்கும்படி அவ்வளவு கெட்டியாயிருக்க வேண்டும். உடைந்துபோன துண்டுகளின் ஓரத்தில் இதைத் தடவி துண்டுகளை ஒன்றோடொன்று பொருத்தி வைத்து அழுத்தவும் ; வெளியில் பிதுங்கியுள்ள பசையைத் துடைத்தெடுத்து விடவும்; அந்தத் துண்டுகளை ஒட்டி யிருக்கிறபடியே கட்டி, ஒருவாரம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் அதைத் தொடாமல் விட்டுவிட்டால் அது நன்றாய்க் காய்ந்து போய் பலமாய்ப் பிடித்துக்கொள்ளும்.

### Ink Stains.

இங்கி பட்ட கறை.—கைக்குட்டையில் இங்கி (மை) பட்டவுடன் அதை பாலில் அமிழ்த்தி ஊறவைத்தால் இங்கிக்கறை மறைந்துபோய்விடும்.

### To Increase the Flavour of Cocoa.

கோகோவின் ருசியை அதிகப்படுத்த.—கோகோ பானம் செய்கையில் கோகோவைக் கலந்த பிற்பாடு ஒரு சிட்டிகை உப்புப் பொடியை பானத்தில் கலந்தால் ருசி யதிகமாவதோடு, பானத்தில் ஜலம் போல் ருசி தட்டுவதும் நின்று போகும்.

### Cleaning Lamp Chimney.

விளக்குச் சிம்னிகளைத் துடைத்தல்.—சில ஸமயம் விளக்குச் சிம்னிகள் ரொம்ப கருப்பாய்ப் புகையடைந்து போய்விட்டால் ஜலத்தை விட்டுத் துடைத்தால் மட்டும் போவதில்லை. ஜலத்தில் சிறிது ஸ்பிரிட்ஸ் அப் வைன் சாராயத்தைக்கலந்து அதனால் துடைத்தால் ரொம்ப ஸுலபமாய் சுத்தமாகிவிடுகிறது.

### Castor Oil for Children.

குழந்தைகளுக்கு ஆமணக்கெண்ணெய் கொடுப்பது.—சிறுவர்களுக்கு ஆமணக்கெண்ணெய் கொடுக்கவேண்டுமானால், ஒரு சிறு பாத்ரத்தில் சூடான பால் கொஞ்சம் ஊற்றி பாலின் நடுவில் எண்ணெயை ஊற்றி, எண்ணெயின்மேல் இன்னம் கொஞ்சம் பாலை எண்ணெயை மூடும்படி ஜாக்ரதையாக ஊற்றிவிடவேண்டும். இதைக் கலக்காமல் ஒருமிக்க குடித்துவிட்டால் எண்ணெயின் ருசி கொஞ்சங்கூட குடிக்கையில் தெரியாது.

### To Clean Articles made of Bone.

எலும்பினால் செய்த ஸாமான்களை சுத்தம் செய்ய.—எலும்பினால் செய்த கத்திப்பிடிகளையும் மற்ற எலும்பு ஸாமான்களையும் சுத்தம் செய்யவேண்டுமானால் அதற்கு எலுமிச்சம்பழமும் உப்பும் உபயோகிப்பது நல்லது. ஸாமானை எலுமிச்சம்பழ ரஸத்தினால் நன்றாய்த் தேய்த்துப் பிறகு உப்பினால் தேய்க்கவும். இதனால் கத்திப்பிடி முதலிய ஸாமான்களின் மேல் உள்ள கறைகள், கொழுப்புப்பட்ட கறைகள் இவை மறைந்துபோகும்.

### Cleaning the Lamp.

விளக்கை சுத்தம்செய்தல்.--விளக்கு மங்கினதாய் எரிந்தாலும் ஸரி, புகைகட்டினாலும் ஸரி அதற்குக் காரணம் திரி அழுக்கடைந்திருக்கலாம். பர்னரை (திரியுள்ள "காய்") ஸோடா கரைத்த ஜலத்தில் போட்டுக் கொதிக்கவைத்து எடுத்துத் துடைத்து விடவும். திரியை நன்றாய் சுத்தம் செய்யவும். அல்லது புதுத் திரி உபயோகிப்பது நல்லது. எண்ணெய் நல்லதாயிருக்கவேண்டும். சிம்னியை துடைத்து சுத்தமாய் வைத்திருக்கவேண்டும்.

### A Good Remedy for Sore Throat.

தொண்டைப்புண்ணுக்கு வைத்யம்.—தொண்டை புண்ணாகி வலியுண்டானால் பின்வருமாறு செய்யவும். உருளைக்கிழங்கு ஒன்றை நெருப்பில் சுட்டெடுத்து அதைப் பிளந்து ஒரு ப்ளானல் துண்டில் போட்டு தொண்டையில் ஒத்தடம் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்தால் ஒரே ராத்ரி குணமடைந்துவிடும்.

# TAMIL LITERATURE.
## தமிழ்க் கல்வி.

### Newspapers & Journals in Madras Presidency.

சென்னை ராஜதானியில் ப்ரசுரமாகும் ஸமாசாரப் பத்ரிகைகளும், ஸஞ்சிகைகளும்.—சென்னை ராஜதானி முழுவதிலும் 1911-12-ம் வருஷத்தில் (ஸ்வதேச ராஜ்யங்களும் சென்னை ராஜதானியில் ப்ரஞ்சுக்காரருக்கு ஸொந்தமான நாடுகளுஞ் சேர்ந்து) ப்ரசுரமாகும் ஸமாசாரப் பத்ரிகைகள், ஸஞ்சிகைகள் இவைகளின் மொத்தம் 387. அதற்கு முந்தின வருஷத்தில் 385. அவைகளுள் தினஸரிப் பத்ரிகைகளின் மொத்தம் 9. அந்த ஒன்பதில் சென்னையில் ப்ரசுரமாகும் இங்கிலீஷ் தினஸரிப் பத்ரிகைகள் 5. பெங்களூரில் ப்ரசுரமாகும் இங்கிலீஷ் தினஸரி 2. ஹைதராபாத்தில் உருது பாஷையில் ப்ரசுரமாகும் தினஸரி ஒன்று. சென்னையில் தமிழில் ப்ரசுரமாகும் தினஸரிப் பத்ரிகை ஒன்று. வாரம் இரண்டுமுறை, வாரம் மும்முறை வாரத்தில் ஒருமுறை ப்ரசுரமாகும் பத்ரிகைகளின் மொத்தம் 95. ஒரே பாஷையில் ப்ரசுரமாகும் ஸஞ்சிகைகளுள் இங்க்லீஷில் 90, தமிழில் 74, மலையாளத்தில் 66, தெலுங்கில் 49, கன்னடத்தில் 26, உருது பாஷையில் 26, ஸம்ஸ்க்ருதத்தில் 5, ப்ரெஞ்சில் 4, உரியா பாஷையில் 8, இத்தாலிய பாஷையில் ஒன்று, போர்த்துகீஸியருடைய பாஷையில் ஒன்று, இங்க்லீஷுடன் தேசபாஷை கலந்து ப்ரசுரமாகும் ஸஞ்சிகைகளுள் தமிழ் 9, மலையாளம் 7, தெலுங்கு 5, கன்னடம் 3, உருது 2, குஜராத்தி 1, ஸமஸ்க்ருதமும் கன்னடமும் கலந்து ப்ரசுரமாகும் ஸஞ்சிகைகள் 5. எதிர் பார்த்திருந்தபடி ஸமாசாரப் பத்ரிகைகளுக்கும் அதிலும் முக்யமாகத் தமிழ் பத்ரிகையின் ப்ரசுரத்திற்கும் சென்னைதான் மத்யஸ்தானம். ஆனால் தஞ்சை, திருச்சி, மதுரை, திருநெல்வேலி இந்த ஜில்லாக்களி லிருந்து சில தமிழ்ப் பத்ரிகைகள் வெளியாகின்றன. கோதாவரி, க்ருஷ்ணா, குண்டூர், சென்னை இவ்விடங்களிலிருந்து தெலுங்குப் பத்ரிகைகள் வெளியாகின்றன. ஹைதராபாத்து, மைஸூர், சென்னை இவ்விடங்களிலிருந்து உருதுப் பத்ரிகைகள் வெளியாகின்றன. திருவாங்கூர் ஸமஸ்தானத்திலிருந்து மலையாளம் பத்ரிகைகள் வெளியாகின்றன. மைஸூர் ஸமஸ்தானம், தென் கன்னடம் இவ்விடங்களிலிருந்து கன்னடப் பத்ரிகைகள் வெளியாகின்றன. ராஜாங்க விஷயத்தைப்பற்றி வெளிப்படுத்தின ஸமாசாரப் பத்ரிகைகளும் ஸஞ்சிகைகளும் சென்ற வருஷக் கடைசியில் 63-இல் இருந்து 85-ஆக அதிசரித்திருக்கின்றன.

### Sri Vani Vilasini.

ஸ்ரீவாணீ விலாஸினீ:—சொஞ்சகாலமாய் நின்றிருந்த ஸ்ரீவாணீவிலாஸினீ என்னும் மாதப்பத்ரிகை இப்பொழுது மறுபடியும் ப்ரசுரமாகிவருகிறது. இது முன்போலவே சித்ரபடங்களும், சஞ்சிகைகளும் அடங்கிய இனிமையான மாஸப்பத்ரிகை. இதன் வருஷ சந்தா 5 ரூ. 10 அணா ஆகும். வேண்டுவோர் ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணீவிலாஸினீ பத்ரிகை மானேஜர் என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

### Padmini.

பத்மினி:—இது தோட்டக்காடு ராமகிருஷ்ண பிள்ளை யவர்கள் இங்க்லீஷில் எழுதிய பத்மினி என்னும் கதைப் புஸ்தகத்தின் போக்கைத் தழுவி எழுதியுள்ள ஒரு கதை புஸ்தகமாகும். இதன் நடையைப் பற்றிப் பலர் ச்லாகித்துச் சொல்லியிருக்கிறார்கள். கதை வாசிக்க இனிமையாயிருக்கிறது. இது சரித்ரஸம்பந்தமானது. மதனபள்ளி, ஹிந்து ஹைஸ்கூலில் உபாத்யாயரான மிஸ்டர் வெ. முத்துசாமி அய்யர் இதை எழுதியவர். இது பெதர் வெய்ட் பேபர் என்னும் உயர்ந்த கடிதத்தில் நன்றாய் அச்சிடப்பட்டுள்ளது. விலை அணா 12.

### The Madras Agricultural Calendar 1913-14

சென்னை விவஸாய பஞ்சாங்கம் :—1913—14 இந்தப் பஞ்சாங்கம் முன்வருஷங்களில் ப்ரசுரமானவைகள் போலவே, அரிய விவஸாய ஸம்பந்தமான விஷயங்களடங்கிய யாவருக்கும் உபயோகமுள்ள ஒரு புஸ்தகம். இதில் பலபடங்களும் வ்யாஸங்களும் குறிப்புகளும் இருக்கின்றன. பஞ்சாங்கம் யாவருக்கும் உபயோகப்படும். சிற்சில விடங்களில் சொற்பிழைகள் அதிகம் இருக்கின்றன. அடுத்த வருஷம் முதல் இந்த விஷயம் கவனிக்கப்படும் என்று எண்ணுகிறோம். இதன்விலை ஒரே அணா ஆதலாலும், இதில் அடங்கிய விஷயங்கள் ரொம்ப அதிகமாதலாலும், எல்லா க்ராமவாஸிகளும் இதை வாசித்துப் பயன் பெறவேண்டும் என்று விரும்புகிறோம். இந்தப் பஞ்சாங்கம் வேண்டுவோர் ஸூபரின்டெண்டெண்ட், கவர்மெண்ட் ப்ரெஸ், மதராஸ், என்று எழுதிப் பெற்றுக்கொள்ளவும்'

# DIARY OF THE MONTH.

## மாஸ வர்த்தமானம்.

1913ஹு மேமீ 1-தேதி.—

**ஸர் வில்லியம் மேயர்:**—எச். இ. வைஸ்ராயின் கௌன்ஸிலில் பினன்ஸ் மெம்பராயிருக்கும் ஸர் கைப்லீட்வுட் வில்ஸன் சில மாஸத்திற்குள் தமது உத்யோகத்தை ராஜீநாமா செய்யப்போகிறபடியால் அவருக்குப் பதிலாக ஸர் வில்லியம் மேயரை நமது சக்ரவர்த்தி நியமித்திருக்கிறார்.

2-தேதி.—

**சீன குடியரசு:**—அமெரிக்கா ஐக்ய மகாண அரசாட்சியார் சீன குடியரசை அங்கீகாரம் செய்துவிட்டார்கள்.

**ஸ்காட்லாந்துக்கு ஸ்வய ஆட்சி:**—ஸ்காட்லாண்டுக்கு அயர்லந்தைப்போல ஸ்வய ஆட்சி கொடுக்க வேண்டுமென்று ஒரு மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதன்படி ஸ்காட்லாண்டுக்கு 140-மெம்பர்கள் உள்ள ஒரு ஸபை ஸ்தாபிக்கப்படும்.

4-தேதி.—

**பால்கன் யுத்தம்:**—மாண்டிநிக்ரோ அரசர் ஸ்கூடேரி விஷயமாய் ஒரு ஸபை கூட்டி யோசித்ததில் ஸ்கூடேரியை விட்டுவிடுகிறதெனத் தீர்மானித்தார்கள். யுத்தத்தை நிறுத்தவேண்டு மென்றும், ஸமாதானம் செய்துகொள்ளவேண்டும் என்றும், வல்லரசுகள் துருக்கியைக் கேட்டதற்கு துருக்கி தனக்கு யாதொரு ஆக்ஷேபனையு மில்லையென்றும், ஸமாதான கான்பரென்ஸ் லண்டனில் நடக்கலாம் என்றும் பதில் சொல்லியிருக்கிறது.

5-தேதி.—

**சென்னை ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ்:**—இந்த கான்பரென்ஸ் இன்றையதினம் திருச்சினப்பள்ளியில் நாஷனல் ஹைஸ்கூல் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த கொட்டகையில் கூடிற்று. ஆனரபில் மிஸ்டர் ஆர். ராமச்சந்த்ரராவ் அவர்கள் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். [இதன் விவரம் விசேஷ வ்யாஸம் பார்க்க.]

6-தேதி.—

**ஸோஷ்யல் கான்பரென்ஸ்:**—இன்று காலையில் ஸோஷ்யல் கான்பரென்ஸ் கூடிற்று. மிஸ்டர் கே. பி. ராமனதய்யர் அவர்கள் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார். சில தீர்மானங்கள் செய்யப்பட்டன. [விசேஷ வ்யாஸம் பார்க்க.]

**சென்னை ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ்:**—இது இன்றையதினம் இரண்டாவது நாளாகக் கூடிற்று. அநேக தீர்மானங்கள் செய்தது.

7-தேதி.—

**ஸோஷ்யல் கான்பரென்ஸ்:**—இன்றையதினம் காலையில் ஸோஷ்யல் கான்பரென்ஸ் கூடிற்று. அநேக தீர்மானங்கள் செய்யப்பட்டன.

**சென்னை ப்ரோவின்ஷியல் கான்பரென்ஸ்:**—இன்றையதினம் கான்பரென்ஸ் கூடி இன்னம் சில தீர்மானங்கள் செய்தது. இன்று மாலையில் கான்பரென்ஸ் கலைந்தது.

8-தேதி.—

**ஸ்பெயின் அரசர்:**—நேற்றையதினம் ஸ்பெயின் தேசத்து அல்பான்ஸோ அரசர் பாரிஸுக்கு வந்தார். ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மா. பாய்ன்கரேயும், மந்த்ராலோசனை ஸபையாரும் அவரை ஸ்டேஷனில் போய்க் கண்டுகொண்டார்கள். இன்று அல்பான்ஸோ அரசருக்கு ஒரு விருந்து செய்யப்பட்டது.

9-தேதி.—

**அல்பானியா:**—புதிதாய் உண்டுபண்ணப்படும் அல்பானியா தேசத்தை யார் எப்படியாள்வது என்பதைப் பற்றி ஐரோப்பிய அரசுகள் தங்கள் அபிப்ராயங்களைத் தெரிவித்திருக்கின்றன. ஆஸ்ட்ரியாவும், இடாலியும், ஒரு ஐரோப்பிய கோமகன் ஆளவேண்டுமென்றும், ரஷ்யா, வல்லரசுகளால் நியமிக்கப்பட்ட ஒரு துருக்கி கவர்னர் ஆளவேண்டுமென்றும் சொல்லுகின்றன.

**ஜீவவதை நிவாரண ஸங்கம்:**—ஷை ஸங்கத்தின் இந்திய கமிட்டியார், இந்தியா உதவி மந்த்ரியாகிய மிஸ்டர் மாண்டேகுவைக் கண்டுகொண்டார்கள். ப்ராணி ஹிம்ஸைக் கேற்பட்ட இந்தியா சட்டத்தை தக்க விதமாய் மாற்றவேண்டுமென்று சொன்னார்கள். மேலும் வங்காளத்தில் ஆடுகளை உயிரோடு தோலுரிக்கும் வழக்கத்தைப்பற்றி விசேஷமாய்ச் சொன்னார்கள். மிஸ்டர் மாண்டேகு தாம் கேட்டவற்றைஇந்

தியா கவர்ன்மெண்டுக்குத் தெரிவிப்பதாக அனுதாபம் காட்டிப் பதில் சொன்னர்.

10-தேதி.—

வித்யா கான்பரேன்ஸ்:—இன்றையதினம் கூடிற்று. ஸம்ஸ்க்ருதம் வாசிப்பதைப் பற்றி வ்யாஸம் வாசிக்கப்பட்டது. வாசித்தவர் ஸம்ஸ்க்ருத பண்டிதர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்கவேண்டும் என்று சொன்னர். வேறு சிலர் ஸம்ஸ்க்ருதம் கற்பிக்கும் முறையை சீர்திருத்தவேண்டும் என்றும், பிள்ளைகளை ஸம்ஸ்க்ருதம் வாசிக்கும்படி தூண்டவேண்டுமென்றும் சொன்னர்கள்.

ஸ்பேய்ன் அரசர்.—பாரிஸூக்கு வந்திருந்த அல்பான்ஸோ அரசர் இன்று தமது தேசத்துக்குப் போனர். போலீஸ் பந்தோபஸ்துகள் ரொம்ப நன்ருயிருந்தன. அரசர் வந்த கார்யம் ஸாதகமாயிருப்பதாயும், ட்ரிபில் எண்டண்டியில் ஸ்பெய்ன் சேரக்கூடுமென்றும் சொல்லப்படுகிறது. [இங்க்லாந்து ப்ரான்ஸ் ரஷ்யா இந்த மூன்று தேசங்களும் சேர்ந்து ஒரு உடன்படிக்கை செய்து கொண்டிருக்கின்றன. அந்த உடன்படிக்கைக்கு ட்ரிபிள் எண்டண்டி என்று பெயர். ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இடாலி, இவை மூன்றும் சேர்ந்து ட்ரிபிள் அல்லேயன்ஸ் என்று சேர்ந்து கொண்டிருக்கின்றன.]

அல்பானியா.—எஸ்ஸட்பாஷா அல்பானியாவை தம் வசம் ஆக்கிக்கொண்டு துருக்கிக்குக் கீழ்ப்பட்டு, ஆளுவதாக சொல்லுவதை பால்கன் நாடுகள் ஆக்ஷேபிக்கின்றன. தாங்கள் இவ்வளவு பாடுபட்டு பணம் மனிதர்கள் இவைகளை த்யாகம் செய்தும் இப்படிச் செய்வது ரொம்ப அக்ரமம் என்கின்றன.

11-தேதி:—

துருக்கி பால்கன்யுத்தம்.—யுத்த நஷ்டத்துக்காக 90-கோடிரூபாய் துருக்கிகொடுக்க வேண்டுமென்று பால்கன் சிற்றரசுகள் சொல்லுகின்றன. வல்லரசுகளும் இவ்வளவுத் தொகை யில்லாவிட்டாலும் ஒரு ஸ்வல்பத்தொகை நஷ்ட ஈடாகக்கொடுக்கவேண்டியது அவச்யமென்று சொல்லுகின்றன.

13-தேதி.—

மாண்டி நீக்ரோ:—கடற்கரையை முற்றுகை போட்டுக் கொண்டிருக்கும் எல்லா தேச கப்பற்படையிலிருந்து ஒரு ஸைன்யம் ஸ்கூடேரியைக் கைப்பற்றப் போயிருக்கிறது. ஸ்கூடேரி 15-தேதியன்று அவர்கள் வசம் கொடுக்கப்படும்.

துருக்கி பால்கன் யுத்தம்:—யுத்தஸமாதான விஷயமாய் கான்பரென்ஸ் கூடுவதற்கு பால்கன் ப்ரதிநிதிகள் லண்டனுக்கு வந்துவிட்டார்கள். பால்கன் யுத்தம் சீக்ரம் நின்று விடுவதற்கான ஆரம்ப ஸமாதான உடன்படிக்கைகள் ப்ரதிநிதிகளால் கையெழுத்திடப்படும்.

14-தேதி:—

சீனவுக்குக் கடன்:—சீன தேசத்தில் அரசாட்சி மாறுபட்ட பிறகு அந்த தேச ராஜாங்கத்துக்குப் பணம் போதாமலிருந்து வருகிறது. அதற்காக ஐந்து வல்லரசுகள்கூடி பணம் கடன்கொடுத்து உதவி செய்வதற்கு ஏற்பாடுகள் கொஞ்சகாலமாய் நடந்து வந்தன. இப்பொழுது அந்த ஏற்பாடுகள் முடிவுக்கு வந்துவிட்டன. இந்த மாஸம் 21-தேதி கடன் கொடுக்கப்படும். 100 ரூ பத்ரத்துக்கு 90-ஆகவும் வட்டி 100-க்கு 5-வீதமாகவும் இருக்கும்.

பர்மா லேப்டினனட் கவர்னர்:-பர்மாவின் லெப்டினண்ட் கவர்னர் ஆனரபில் ஸர் ஹார்வி ஆடம்ஸனுக்கு 6-மாஸலீவு கொடுக்கப்பட்டிருக்கிறது. அவருக்குப் பதிலாக அப்பர் பர்மா ஜூடிஷ்யல் கமிஷனராகிய ஸர் ஜார்ஜ் ஷா லெப்டினெண்ட் கவர்னராக வேலைபார்ப்பார். இன்றையதினம் அவர் வேலை பார்க்கத் தொடங்கினர்.

15-தேதி.—

கடற்கரை முற்றுகை:—எல்லா அரசுகளும் மாண்டி நீக்ரோ கடல் கரையை முற்றுகை போட்டிருந்தது இன்றையதினம் முதல் நிறுத்தப்பட்டுவிட்டது.

ஆஸ்ட்ரியாவின் செய்கை:—1878-ம் வருஷத்து டர்க்கோ ஆஸ்ட்ரியா உடன்படிக்கைபடி அடக்கலே என்னும் தீவை ஆஸ்ட்ரியா தனது தேசத்தோடுசேர்த்துக்கொண்டுவிட்டது. இந்தத் தீவை பால்கன் நாடுகள் கேட்குமோ என்று ஸந்தேகித்து சேர்த்துக் கொண்டுவிட்டதாம்.

யுத்த ஸமாதானம்:—துருக்கிக்கும் பல்கேரியாவுக்கும் நடந்துவந்த சண்டையை இன்னம் மே மாஸம்முடிய நிறுத்திவைத்திருக்கிருர்கள்.

16-தேதி.—

ஐக்யமாகாணங்களில் ஒரு ஹிந்து தேசவாஸி:—அக்ஷயகுமார மஜூம்தார் என்பவர் கல்கத்தாவில் பிறந்தவர். அவர் ஒரு யோகி. அவர் அமெரிக்காவில் வஸித்து வருகிருர். அவரை கவர்ன்மெண்டார்

அந்த தேசவாஸியாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதாவது அந்த தேசத்தில் பிறந்த அமெரிக்கர்களுக்குள்ள ஸ்வதந்த்ரங்கள் இவருக்கும் உண்டு. இவர் தாம் ஒரு உயர்ந்த ஜாதி ஹிந்துவென்றும் உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் ஆர்யர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்றும் சொல்லவே, நாஷனலிஸேஷன் ஆக்டின்படி அவர் ஒரு வெள்ளை மனிதர்தான் என்று கோர்ட்டு மூலமாய்த் தீர்மானமாயிருக்கிறது.

17-தேதி.—

லாகூரில் பாம்ப்:—லாகூரில் இன்று ஸாயந்த்ரம் 9-மணிக்கு லாரன்ஸ் ஹாலுக்குப் பக்கத்தில் ஒரு பாம்ப் (வெடிகுண்டு) வெடித்து ஒரு ப்யூன் அதனால் இறந்தான். தகரத்துண்டு ஒன்று அவன் ஹ்ருதயத்தில் ஊடுருவிச்சென்று வாயால் ரத்தம் கக்கி இறந்துவிட்டான். வெடிகுண்டு அவன் பாதையில் வைக்கப்பட்டிருந்து அவன் அதைக் காலால் இடறினதால் அது வெடித்திருக்கவேண்டுமென்று ஊகிக்கப்படுகிறது.

18-தேதி.—

ஜப்பானும், அமெரிக்காவும் :—அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா நாட்டில் புதிதாய் ஒரு சட்டம் செய்யப்போகிறார்கள். அதனால் ஜப்பானியர்கள் அந்த நாட்டில் நிலம் வாங்கி அனுபவிக்கக்கூடாததாகும். இந்த சட்டத்தை ஜப்பானியர் ஆக்ஷேபிக்கிறார்கள். அமெரிக்கா நாடுகளின் ப்ரெஸிடெண்டாவது வேறு எந்த அதிகாரியாவது காலிபோர்னியாவில் சட்டம் செய்வதை தேச ஆட்சி அமைப்பின்படி தடுக்க முடியாதாம். இதனால் ஜப்பான் ரொம்ப மனஸ்தாபம் கொண்டிருக்கிறது.

19-தேதி.—

ரங்கூனில் எட்வர்ட் அரசின் உருவச்சிலை:—1910-ம் வருஷத்தில் எட்வர்ட் அரசருடைய உருவச்சிலையொன்று ரங்கூனில் ஸ்தாபிக்கவேண்மென்று தீர்மானிக்கப்பட்டது. அவருடைய உருவச்சிலை செய்து முடித்தாயிற்று. சீக்ரம் வந்து சேர்ந்துவிடுமாம். அந்தச்சிலை டல்ஹௌஸிபார்க்கில் வைக்கப்படும்'

ஜப்பானும் அமெரிக்காவும்:—ஜப்பானியரும் மற்ற அன்னியரும் ஸொந்தத்தில் நிலம் வாங்கக்கூடாது என்ற மசோதாவுக்கு காலிபோர்னியா கவர்னர் கையெழுத்திட்டார். ஆகவே அந்த மசோதா சட்டமாகி விட்டது.

பேர்லினில் விவாகம்:—பெர்லினில் நடக்கப்போகும் கெய்ஸர் குமாரத்தியின் கல்யாணத்துக்கு போய் வருவதற்காக இன்றையதினம் சக்ரவர்த்தி ஜார்ஜும் மேரி சக்ரவர்த்தினியும் ஷீயர்னஸ் என்னும் துறைமுகத்திலிருந்து புறப்பட்டார்கள்.

ட்ரிபோலி:—துருக்கிக்கும் இடலிக்கும் சென் வருஷம் நடந்த யுத்தத்தினால் துருக்கி ட்ரிபோலி தேசத்தை இடலிக்குக் கொடுக்கும்படி நேரிட்டது. ட்ரிபோலி இடலிக்கு ஸொந்தமென்று துருக்கி ஒப்புக்கொண்டாலும் ட்ரிபோலியில் உள்ளவர்கள் இன்னம் ஒப்புக்கொள்ளவில்லை. ட்ரிபோலியிலுள்ளவர்கள இடாலியரோடு யுத்தம்செய்து வருகிறார்கள். நேற்று நடந்த சண்டையில் அரேபியருக்கும் இட்டாலியருக்கும் ரொம்ப சேதம் என்று தெரியவருகிறது. இடாலியருக்கு இறந்தவர்களும் காயமடைந்தவர்களும் சேர்ந்து 358-பேர் சேதமாம். அரேபியர்கள் பீரங்கிகளினால் தாக்கினதில் இட்டாலியர்கள் 4-பீரங்கிகளை விட்டு விட்டு ஓடவேண்டியதாயிற்று.

லாலி இன்ஸ்டிட்யூட்.—இன்றையதினம் கவர்னரவர்கள் உதகமண்டலத்தில் லாலி இன்ஸ்டிட்யூட்டைத் திறந்து வைத்தார். அது பொப்பிலி மகாராஜாவினுடைய கொடையாகும். அந்த ஸமயத்தில் அநேக கனவான்களும், லெஜிஸ் லெடிவ் கௌன்ஸில் மெம்பர்களும் வந்திருந்தார்கள். அந்த இன்ஸ்ட்யூட் உத்யோகஸ்தர்களும் உத்யோகஸ்தர்களல்லாத கனவான்களும் உதகமண்டலத்திற்கு வந்தால் தங்குவதற்காக ஏற்பட்டிருக்கிறது.

21-தேதி.—

நமதரசர்.—நமது சக்ரவர்த்தியும், சக்ரவர்த்தினியும் இன்று பர்லின் போய்ச் சேர்ந்தார்கள். ஜெர்மன் சக்ரவர்த்தி, சக்ரவர்த்தினி, முதலான ராஜ வம்சத்தார்கள் அவர்களை ரயில்வே ஸ்டேஷனில் வந்தழைத்துச் சென்றார்கள்.

யுத்த ஸமாதானம்:—பால்கன் யுத்த ஸமாதான விஷயமாய்இன்று பால்கன் ப்ரதிநிதிகள்ஒன்று கூடிப் பேசினார்கள். ஸமாதானஉடன்படிக்கையைப் பற்றின ட்ராப்ட்டுகள் எழுதவேண்டுமென்றும் அவைகளை வல்லரசுகளினிடம் காட்டவேண்டுமென்றும் தீர்மா

னம் செய்துகொண்டார்கள். வல்லரசுகளின் நிபந்தனைகளில் சில மாறுதல் செய்கிருர்கள்.

22-தேதி.—

பேர்லின் அரண்மனையில் விவாகப்:—ருஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் இன்றையதினம் பர்லினுக்கு வந்து சேர்ந்தார். இவருக்கு பத்ரம் ஏற்படுத்துவதற்காக போலீசும் துப்பறியும் உத்யோகஸ்தர்களும் ரொம்ப சுறுசுறுப்பாய் இருந்தார்கள். ஸ்டேஷனில் பொதுஜனங்கள் வராமல் தடுக்கப்பட்டது. ஆனல் நமது ஜார்ஜ் சக்ரவர்த்தியோ பெர்லினில் போலீஸ் பந்தோபஸ்துகள் அதிகமின்றி மோட்டாரில் சுற்றுகிருராம். ஜனங்கள் இவரைக் கண்டால் ஆரவாரம் செய்கிருர்கள்.

திருப்பூர் கால்நடைக்காட்சி:—இன்றையதினம் திருப்பூரில் கால்நடை, குதிரைக்காட்சி ஆரம்பமாயிற்று. கோயம்புத்தூர் ஜில்லா விவஸாய ஸங்கத்தாருடைய ஆதரவின்கீழ் நடக்கிறது. ஜில்லா கலெக்டரும், ஷ ஸங்கத்தின் ப்ரெஸிடெண்டுமாகிய மிஸ்டர் ஹெமிங்வே கால்நடை, குதிரைக் காட்சியைத் திறந்து வைத்தார்.

ஜப்பான் அரசர்:—ஜப்பான் அரசர் மிகாடோ ரொம்ப காய்ச்சலாயிருக்கிருர். 8-வைத்யர்கள் வைத்யம் பார்க்கிருர்கள். நுரையீரல் வீங்கி இருப்பதாகத் தெரியவருகிறது.

23-தேதி:—

பால்கன் நாடுகள்:—க்ரேக்கர் கைப்பற்றின நாடுகளில் பல்கேரியர் ப்ரவேசித்தாரென்றும் அதனுல் க்ரேக்கர் எதிர்த்து யுத்தம் செய்வதாகவும் யுத்தம் பலமாய் நடப்பதாகவும் ஸமாசாரம் எட்டுகிறது.

மிகாடோ:—மிகாடோவுக்கு (ஜப்பான் அரசர்) ந்யூமோனியா வ்யாதியாம். காய்ச்சல் 103.4 டிக்ரியாயிருக்கிறதாம்.

24 தேதி.—

மதுரைத் தமிழ்ச் சங்கம்.—மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 12-வது வருஷாந்தரக் கூட்டம் இன்று மதுரையில் கூடிற்று, ஆனரபில் மிஸ்டர் கே. ராமய்யங்கார் அக்ராஸனம் வகித்தார். சங்கத்து ப்ரெஸிடெண்டாகிய மிஸ்டர் பி. எஸ். ஸுப்ரமண்ய அய்யர் பண்டிதர்களை வரவேற்ருர். ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது.

ஆனரபில் மிஸ்டர் ராமய்யங்கார் செய்த ப்ரஸங்கத்தில், அவர், தமிழ் பாஷை சொல்நயம் பொருள் நயம் அதிகம் உள்ள பாஷை என்றும், எலிமெண்டரி பாடசாலைகளுக்குத் தேவையான தமிழ்ப்பாடப் புஸ்தகங்களைத் தயார் செய்வதற்கு இங்க்லீஷும் தமிழும் தெரிந்தவர்கள் தேவையாயிருப்பதால் இங்க்லீஷ் படிப்பவர்களுக்கு தேசபாஷைகளைக் கட்டாய பாடமாக ஏற்படுத்த வேண்டுமென்றும் சொன்னர்.

பெர்லினில் ராஜவிவாகம்.—ஜர்மன் சக்ரவர்த்தியின் பெண்ணுக்கு இன்றையதினம் விவாகம் நடந்தேறியது. ஜார்ஜ் சக்ரவர்த்தி, ருஷ்யாதேசத்து ஸார் சக்ரவர்த்தி முதலிய ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர்கள் கல்யாணத்துக்கு வந்திருந்தார்கள். ஸாயந்திரம் ராஜ விருந்து ஒன்று அரண்மனையில் நடந்தது.

25 தேதி.—

மிகாடோவின் தேகஸ்திதி.—ஜப்பான் அரசராகிய மிகாடோவின் தேகஸ்திதி சற்று குணப்பட்டு வருகிறதாகத் தெரிகிறது.

பாபட்லா ஹிந்து கான்பரென்ஸ்.—இன்று பாபட்லாவில் வைதீக ஹிந்துக்களின் கான்பரென்ஸ் கூடிற்று. விதவா விவாகம், ருதுவானபின் விவாகம், அந்ய தேசயாத்ரை முதலியவைகளை அசாஸ்த்ரீயமென்று கண்டித்து தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸநாதன தர்மத்தை பலப்படுத்த வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸார்.—ருஷ்யாவின் சக்ரவர்த்தியாகிய ஸார் இன்று ஜர்மனியை விட்டு தமது தேசத்துக்குப் போய்விட்டார்.

குண்டூர் ஜில்லா ஸோஷல் கான்பரென்ஸ்.—குண்டூர் ஜில்லா ஸோஷல் கான்பரென்ஸ் இன்று பாபட்லாவில் கூடிற்று. 21 தீர்மானங்கள் வரையிலும் செய்தது. ஜனஸமூகத்தைச் சீர்திருத்துவதற்கு வேண்டிய எல்லா விஷயத்தைப் பற்றியும் கான்பரென்ஸில் தீர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்திரீகளினுடைய நிலைமையை உயர்த்துவது, தாழ்ந்த வகுப்பாரை நல்ல நிலைமைக்குக்கொண்டுவருவது, ஸ்த்ரீகளுக்கு பூர்த்தியான ஸெகண்டரி ஸ்கூல்களும், ட்ரெயினிங் ஸ்கூல்களும் கவர்ன்மெண்டார் ஸ்தாபிப்பது, விதவைகளுக்கு ஆச்ரமங்கள் கட்டுவது, முதலியவைகளைப்பற்றி கான்பரென்ஸ் ஆலோசித்தது.

26-தேதி

ரெயில்வேயில் வேலை நிறுத்தம்.—சென்னை, ஸதரன் மராட்டாரெயில்வேயில் இன்று தொழில் நிறுத்தம் ஆரம்பமாயிற்று. கொஞ்சகாலமாகவே இந்த ரெயில்வேயின் விப்பந்திகள் தங்களுக்கு அதிக சம்பளம் வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப்படிக்கேட்டபடி அதிக சம்பளம் கொடுக்காததனால் ரெயில்வேயில் ட்ராபிக் விப்பந்திகள் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டார்ள்ள்.

27-தேதி

ஜார்ஜ் சக்ரவர்த்தி.—ஜார்ஜு சக்ரவர்த்தியும் மேரி சக்ரவர்த்தினியும் ஜர்மனியை விட்டு இங்க்லண்டுக்குப் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

28-தேதி

ஒரு கோவாபரேடிவ் கான்பரேன்ஸ்.—இன்றையதினம் மைஸூரைச் சேர்ந்த தும்கூரில் ஜில்லா கோவாபரெடிவ் கான்பரென்ஸ் கூடிற்று. ஸுமார் 200 டெலிகேட்டுகள் வந்திருந்தார்கள். மிஸ்டர் த்யாகராஜய்யர் ப்ரெஸிடெண்டாக இருந்தார். நடவடிக்கைகள் எல்லாம் கன்னட பாஷையில் நடந்தன.

29-தேதி

ராஜ தம்பதிகள்.—பெர்லினுக்குப் போயிருந்த நமது சக்ரவர்த்தியும் சக்ரவாத்தினியும் இன்றைய தினம் லண்டனுக்குத் திரும்பி வந்துவிட்டார்கள்.

இந்தியாவரவு செலவு கமிஷன்.—இந்தியாவரவு செலவு கணக்குக் கமிஷன் லண்டனில் மாத்திரம் கூடி விசாரிப்பார்கள்.

31-தேதி

யுத்த ஸமாதானம்.—பால்கன்யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதை யுத்தேசத்து சிலகாலமாய் நடந்துவந்த ஸமாதான பேச்சுகள் இன்று ஒருவிதமாய் முடிவுக்கு வந்தன. பால்கன் ப்ரதிநிதிகளும், துருக்கி ப்ரதிநிதியும் ஸமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டார்கள்.

ரெயில்வே வேலைநிறுத்தம்.—மதராஸ், ஸதரன் மராட்டா ரெயில்வேயில் வேலைநிறுத்தம் இன்னம் முடியவில்லை. ரெயில்வே விப்பந்திகளின் ஸங்கத்து ஸெக்ரெடரி எல்லா ரெயில்வேக்களிலும் வேலைநிறுத்திவிடவேண்டுமென்று ஒரு புதுஉத்தரவு வெளியிட்டிருக்கிறார்.

## SEASON.

## காலஸ்திதி.

### Rainfall.

மழை.—1913ஆ எப்ரல்மீ 1உயிலிருந்து 1913ஆ ஜூன்மீ 5உவரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

| மழை பெய்த ஊரின் பெயர். | பெய்த மழை அங்குலம். | பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம். |
|---|---|---|
| சோபால்பூர் | 2 ·43 | 3 ·18 |
| வால்டேர் | 3 ·99 | 3 ·76 |
| காக்கினடா | 1 ·98 | 2 ·36 |
| மசூலிப்பட்டணம் | 1 ·59 | 2 ·34 |
| நெல்லூர் | 0 ·11 | 1 ·28 |
| மதராஸ் | 2 .17 | 2 .02 |
| கூடலூர் | 0 ·18 | 1 61 |
| நாகப்பட்டணம் | 1 ·31 | 2 ·67 |
| பாம்பன் | 0 ·52 | 2 ·81 |
| கொழும்பு | 20·92 | 22·76 |
| திருவநந்தபுரம் | 19·47 | 16·05 |
| கொச்சி | 17·37 | 20.60 |
| கள்ளிக்கோட்டை | 12·91 | 15·70 |
| மங்களூர் | 11·62 | 12·10 |
| மெர்க்காரா | 10·26 | 10·72 |
| ஐதராபாத் | 3 ·60 | 3 ·02 |
| பல்லாரி | 3 ·55 | 3 ·32 |
| கர்நூல் | 1 ·92 | 1 ·99 |
| கடப்பை | 1 ·57 | 2 ·65 |
| ஹாஸ்ஸான் | 7 ·89 | 8 ·19 |
| பெங்களூர் | 3 ·78 | 6 ·58 |
| கொடைக்கானல் | 8 ·39 | 11·00 |
| உதகமண்டலம் | 9 ·64 | 11·56 |
| கோயம்புத்தூர் | 2 ·78 | 4 ·38 |
| வேலூர் | 4 ·30 | 4 ·27 |
| சேலம் | 5 ·16 | 7 ·64 |
| திருச்சினாப்பள்ளி | 7 ·44 | 5 ·31 |
| புதுக்கோட்டை | 2 ·75 | 3 ·90 |
| மதுரை | 2 ·09 | 5 ·51 |
| திருநெல்வேலி | 2 ·30 | 4 ·58 |

# Calendar—பஞ்சாங்கம்.

| அம்ருதாதி | லக்ன பாக்கி | அகசு | துலு | இங் | தமி | வா | 47-ப்ரமாதீசஹு ஆனிமீ உத்தராயணம்-கிரீஷ்மருது { ஜ்யேஷ்டம் ஆஷாடம் } கொல்லம்-1088 பஸலி-1322-23 ¦ இங்கி - 1913ஹு ஜுன் ஜுலைமீ ¦ ஹிஜ்ரி-1331 ஜமாதிசானி-ரஜ்ஜப் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | யகால ஸ்மார்த்த நிர்ஜல ஏகாதசி, சூன்பார்க்கம், கரிநாள். |
| மஅ | 5 30 | 31 34 | 8 | 14 | 1 | ச | ஏகா 54-7, சித் 27-51, பரி 53 37, வணி 26-12, ரா 9-44, மிதுனரவி 8-13, மிதுனசூன்யதி, ஷடசீதிபுண் |
| சிஉ | 19 | 35 | 9 | 15 | 2 | ஞா | த்வா 50-23, சுவா 25-45: சிவ 48-59, பவ 22-10, ரா 7-47 மிதுனசூன்யதி, வைஷ்ணவ நிர்ஜலஏகா |
| மசி | 9 | 35 | 10 | 16 | 3 | தி | த்ர 47-17, விசா 24-17, சித் 42-59, கவ 18-45, ரா 2-32, மிதுனத்ரயோதசீதி, பிரதோஷம் |
| சிஉ | 4 58 | 35 | 11 | 17 | 4 | செ | சசி 45-?, அனு 23-33, சாத் 38-27, கர 16-2, ரா 5 56 |
| சிம | 48 | 35 | 12 | 18 மிதுனமீ | 5 | புத | ○ 43-46, கேட் 23-15, சுப 34-49, பத் 14-14, ரா 12-30, மன்வாதி வடசாவித்ரீ விருத |
| சி | 37 | 35 | 13 | 19 | 6 | வி | ப்ர 43-46, மூல 25-16, சுப் 32-9 பால 13-36, தி 20-53, ரா 18 26, ஜ்யேஷ்டபகுள, இஷ்டி கரிநாள் |
| பிசி | 27 | 36 | 14 | 20 | 7 | வெ | த்வி 45-9, பூரா 27-46, பிரா 30-34, தை 14-17, ரா 17-23 |
| சி | 17 | 36 | 15 | 21 | 8 | ச | த்ரி 48-1. உரா 31-52, மா 30-7, வணி 16-24, ரா 11-7 |
| அம | 6 | 36 | 16 | 22 | 9 | ஞா | சது 52-16, திருவோ 37-22, வை 30-48, பவ 19-59, ரா 16-49, கடகாயண 1-31 வைசிரா, சங்கடசதுர்த்தி, சிரவணஉப |
| சி | 3 56 | 36 | 17 | 23 | 10 | தி | பஞ் 57-41, அவி 44-2,விஷ் 32-26, கவு 24-51 |
| ம | 45 | 35 | 18 | 24 | 11 | செ | ஷஷ் 60-0, சத 51-31, பிரீ 34-17, கர 30-43, தி 4-14 திரிதினஸ்ப்ருக், இராமா |
| அசி | 35 | 35 | 19 | 25 | 12 | புத | ஷஷ் 3-51, பூட் 59-15, ஆயி 37-28, பத் 37-2, தி 9-35 திவாமா |
| சி | 24 | 35 | 20 | 26 | 13 | வி | ஸப் 10-9, உட் 60-0, ஸவு 40-1, பால 43-10, தி 26-18, காலாஷ்டமீ |
| சிஅ | 14 | 35 | 21 | 27 | 14 | வெ | அஷ் 15-59, உட் 6-39, சோ 41-58, தை 48-29, ரா 8-26, நவமீதி |
| பிசி | 3 | 35 | 22 | 28 | 15 | ச | நவ 20-40, ரே 13-1, அதி 42-53, வணி 52-25, அதிதி, அப அந்தம் 25-16 |
| சிபி | 2 53 | 35 | 23 | 29 | 16 | ஞா | தச 23-45, அசு 17-64, சுக 42-28, பவ 54-35, தி 7-12, ரா 11-47, தசமீதி அப அதிக 8-57 |
| சிம | 43 | 34 | 24 | 30 | 17 | தி | ஏகா 24-58, பர 20-58, திரு 40-31, கவு 54-50, ரா 20-11; ஸர்வஏகா, கிருத்திகை, கூர்மஜயந்தீ |
| சிஅ | 32 | 34 | 25 | 1 | 18 | செ | த்வா 24-12, கிரு 22-5, சூல 37-1, கர 53-5, த்வாதசீதி, பிரதோஷ |
| சி | 22 | 34 | 26 | 2 | 19 | புத | த்ர 21-32, ரோ 21-19, கண் 32-1, பத் 49-35, தி 1-46, ரா 3-18 திதிதுவய, மாஸசிவரா |
| ம | 11 | 34 | 27 | 3 பஸலி-1323 | 20 | வி | சசி 17-15 மிரு 18-57, விரு 25-46, சது 44-35, ரா 7-14, ஸர்வ அமா |
| சி | 1 | 33 | 28 | 4 | 21 | வெ | ● 11-39, திரு 15-18, துரு 18-28, கிம் 38-29, ரா 11-32, இஷ்டி, பிண்டபிதிரு. அலப்யம் |
| சி | 1 50 | 33 | 29 | 5 | 22 | ச | ப்ர 5-7, உப 52-56, புன 10-42, விபா 16-26, பால 31-38, தி 29-2, ஆஷாடசுத்த, சந்திரதர்சன, அவம |
| சி | 40 | 33 | 1 | 6 | 23 | ஞா | த்ரி 50-47, பூச 5-37, ஹர் 1-58, உப 51-25, தை 21-25, ரா 3-16 |
| சிமசி | 30 | 32 | 2 | 7 ஜுலைமீ | 24 | தி | சது 43-39, ஆயி 0-33.உப 54-47, வித் 41-15, வணி 17-11, தி 27-29, சதுர்த்தீவிரு |
| சிஅ | 19 | 32 | 3 ரஜ்ஜப் | 8 | 25 | செ | பஞ் 36-54, பூர 50-42, விய 39-40, பவ 10-13, தி 43-44, விபசிரா, இராமா |
| அம | 9 | 31 | 4 | 9 | 26 | புத | ஷஷ் 30-43, உத் 46-45, வரீ 29-6, சவு 3-43, கர 57-55. தி 7-27, ஷஷ்டியுபவா, திவாமா |
| சி | 0 58 | 30 | 5 | 10 | 27 | வி | ஸப் 25-18, ஹஸ் 43-31, பரி 22-3, பத் 52-53, தி 6-33, ஸப்தமீதி |
| சி | 48 | 30 | 6 | 11 | 28 | வெ | அஷ் 20-41, சித் 41-9, சிவ 15-41, பால 48-41, தி 2-38, ரா 22-12, திதிதுவயம் |
| அசி | 37 | 29 | 7 | 12 | 29 | ச | நவ 16-55, சுவா 39-36, சித் 9-57, தை 45-22, ரா 21-53, தசமீதி |
| உம | 27 | 29 | 8 | 13 | 30 | ஞா | தச 14-2, விசா 38-58, சாத் 5-59, வணி 42-56, ரா 17 28, மன்வாதி |
| சி | 17 | 28 | 9 | 14 | 31 | தி | ஏகா 12-3, அனு 39-13, சுப 0-43, உப 56 27, பவ 41-24, ரா 21-57, மிதுனத்வாதசீதி, ஸர்வசயனஏகா |
| உஅ | 0 6 | 31 28 | 10 | 15 | 32 | செ | த்வா 10-58, கேட் 40-24, பிரா 54-23, கவு 10-48, கடகரவி 35-15. மிதுனசூன்யதி தக்ஷிணாயனபுண்ய காவ. பிரதோஷ, சாகவிருத, சாதுர்மாஸ்ய விருதாரம்பம் |

| ரா | செ-சு | ச | ரபு |
|---|---|---|---|
| | 10-சட-பு 17-ரிஷ-சு | | |
| குரு | | | கே |

# சாஸ்திரீய உரங்கள்.

எங்கள் ராணிப்பேட்டை உரக்கிடங்கு.

## விசேஷ உரங்கள்.

நைட்ரஜன் பொடாஷ் உரங்கள் (Nitrogenous and Potassic Manus)re நைட்ரேட் ஆப் பொடாஷ் என்ற வெடியுப்பு (Nitrate of Potash). இதிலுள்ள நைட்ரஜனும், பொடாஷும் உடனே உணவாகக் கூடியவைகள். சுத்தி செய்யப்பட்ட முதல்தரமான சரக்கில் 40 பங்கு பொடாஷ் இருக்கிறது. சுத்தி செய்யப்பட்டதும், அசுத்தமானதுமான அநேக ரகங்கள் விற்கப்படுகின்றன. முதல்தர சுத்த சரக்கில் 100 ல் 38 முதல் 40 வரையில் பொடாஷும், 11 முதல் 13 வரையில் நைட்ரஜனும் உத்திரவாதம் செய்யப்படுகிறது.

### பாஸ்பேட் உரங்கள்.

ஸூப்பர் பாஸ்பேட். இதுதான் போட்டவுடன் உணவாகக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட்டுள்ள சரக்கு. இது எங்கள் கம்பெனிகிடங்கிலேயே தயாரிக்கப்படுகிறது. பாஸ்பாரிக் ஆஸிட் குறைவாயுள்ள நாட்டு உரங்களோடு சேர்ந்து பூர்த்தி பண்ணுவதற்கும், தானியம் குறைவாய் காணுகிற நிலங்களை விருத்தி பண்ணுவதற்கும் ரொம்ப நல்ல உரம். இதிலுள்ள பாஸ்பாரிக் ஆஸிட் பெரும்பான்மையும் தண்ணீரில் கரையக்கூடிய சுண்ணாம்பு பாஸ்பேட்டாக இருக்கிறது. இதைத்தவிர 100 ல் 30 பங்கு ஜிப்ஸம் (Gypsnm) என்ற சுண்ணாம்பும், கந்தக திராவகமும் சேர்ந்துண்டான உப்பு ஒன்றுமிருக்கிறது. இது சில களர்நிலங்களை திருத்த உபயோகமான இரஸாயன வஸ்து. இதில் 100 ல் 14 முதல் 15 வரையில் தண்ணீரில் கரையக்கூடிய பாஸ்பாரிக் ஆஸிட்டும், 15 முதல் 17 வரையில் மொத்த பாஸ்பாரிக் ஆஸிட்டும் ½ பங்கு தண்ணீரில் கரையக்கூடிய நைட்ரஜனும் உத்தரவாதம் செய்கிறோம்.

***The Presidency Manure Works, Ltd.,***

***Ranipet.***

***Managing Agents: Parry & Co., Madras.***

**ராஜதானி ரஸாயன உரக்கிடங்கு, ராணிப்பேட்டை.**

மானேஜிங் ஏஜண்டுகள்:—


**பாரி அண்டு கம்பெனி,**

**மதராஸ்.**

# KHADER AND YOUSUFF BROS

## Watch Dealers, P. L., MADRAS, E. C.

### "ஸை்ர்தார்"




இது மேல்
சா வ யுள்ள
தும் கனத்த
கண் ணடியா
ல் மூ டிபோட்
டதும் மிகவும்
சரியாம ா கால
த்தைக் காட்
டக் கூ டியது
ம்வெகு நாளை
க்கு ஓ டக்கூ
டியது மான
வெகு நேர்த்
தியான க்கை
கடியார ம.தெ
ன் இ தியா
செய்
ரம்.

ரயில்வே உத்தியோகஸ்தர்களுக்கு ஸப்ளை
யப்படுகிறது. மிகவும் சிறந்த "லீவர்" கடிய
விலை ரூ 12.


### "உத்தியோகஸ்தர்"

இது உத்யோகஸ்தர்களுக்குஸ்பெஷலாக செய்யப்பட்ட கடியாரம். மேல்சாவியுள்ளது. ஒருபக்கம் கனத்த கண்ணடியால் மூடியுள்ளது. சரியான காலம் காட்டும். முரட்டுத்தனமாயுபயோகித்தாலும்கெட்டுப்போகாது. கொஞ்சம் சிறிய சயிஸ். அழகாயும் திருப்திகரமாயு மிருக்கும்.



தபாற்கூலியுள்பட விலை ரூ. 10

### கோல்ட் மெடல் "ய்ாங்கி" ஸர்க்யூட் கட்டில்.



இது மிகவும் சிறந்த அமெரிக்கன் மரத்தினல் செய்யப்பட்டு, வெளியே போகிறவர்களுக்கு மிகவும் உபயோகமானது. இது $6\frac{1}{2}$ அடி நீளம் $2\frac{1}{2}$ அடி அகலம் $1\frac{1}{2}$ அடி உயரம். அதனுடைய நிறை 15 பவுண்டுதான். 1000 பவுண்டு எடை தாங்கும், கோடை காலத்தில் நிலா வெளிச்சத்தில் மிகவும் லகுவாய்த் தூக்கிக்கொண்டுபோய், வேண்டுமான இடத்தில் போட்டுக்கொண்டு தூங்கலாம். கொசுவலை யுள்பட ரூ. 20 இதற்கு எழுதும்போது, சமீபத்திலுள்ள ரயில் ஸ்டேஷனை ழுதுவதுடன் ரூ.5 அட்வான்ஸ் அனுப்பவேணும்.


## காதர் அண்டு யூஸப் பிரதர்ஸ்,

கடியார வர்த்தகர்கள், க ர்மெண்டு ஸப்ளையர்கள்,

பி. எல். செ ர்வ்ணு, E. C.

MADRAS: Printed by Thompson & Co. at the Minerva Press
Published by G. A. VAIDYARAMAN & Co., Sun rama Chetty Street, Georgetown, Madras.

SUPPLEMENT TO "THE PRACTICAL LIFE."
" பிழைக்கும் வழி " க்கு அனுபந்தம்.



SIR NARAYAN CHANDRAVARKAR.

ஸர் நாராயண சந்த்ரவர்க்கர்.